Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 28 செவ்வாய்க்கிழமை (14.10.2014) பக்கங்கள் 20 ஓசை - 014

# யாழ்ப்பாணம் வந்தது யாழ்தேவி ஆரம்பித்து வைத்தார் ஜனாதிபதி

## மகிழ்ச்சிக் கடலில் மக்கள் திளைப்பு



(யாழ்ப்பாணம்)

24 வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணத்திற்கான ரயில் சேவையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றைய தினம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். ரயில் சேவை மீளவும் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து யாழ்ப்பாண மக்கள் தமது மகிழ்ச்சியை நேற்றைய தினம் வெளிப்படுத்தினர்.

பளை புகையிரத நிலையத்திலிருந்து நேற்றுக்காலை 10.00 மணியளவில் யாழ்தேவி தனது யாழ்ப்பாணத்திற்கான பயணத்தை ஆரம்பித்தது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பின் பேரில் வடபகுதிக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே.சின்ஹா, அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, றிசாட் பதியுதீன், குமார வெல்கம, நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின், வடமாகாண சபை எதிர்க்கட்சி உறுபபினர்கள், அரச திணைக்கள அதிகாரிகள், இராணுவத் தளபதிகள், பொலிஸ் உயரதிகாரிகள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் இப்புகையிரத

19 ஆம் பக்கம் பார்க்க

ஜனாதிபதியின் வருகையால்

## யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் றெயின் வந்தது கிளிநொச்சி நகருக்கு மீண்டும் ஒளி வந்தது

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வருகையை அடுத்து கிளிநொச்சி நகருக்கு மீண்டும் ஒளி வந்துள்ளது. கரைச்சிப் பிரதேச சபையின் அசமந்தத்தினால் பல மாதங்களாக ஒளிராமல் இருந்த கிளிநொச்சி நகர வீதி விளக்குகள் ஜனாதிபதியின் விசேட பணிப்பினை அடுத்து நேற்று இரவு மீண்டும் ஒளிரத் தொடங்கியுள்ளன. இதனையடுத்து மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஏ-9 வீதிப்புனரமைப்புடன் இணைந்ததாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் 200 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட மின்விளக்குகள் கடந்த 15.06.2013 அன்று கிளிநொச்சிக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விஜயம் செய்து ஏ-9 வீதியைத் திறந்தபோது ஒளிர விடப்பட்டன. எனினும் இந்த வீதி விளக்குகளுக்கான மின்கட்டணத்தை கரைச்சிப் பிரதேச சபையே மின்சார சபைக்குச் செலுத்த வேண்டும். ஆனால், இந்த மின் கட்டணத்தை கரைச்சிப் பிரதேச சபை செலுத்தாமல் விட்டது.

இதனை அடுத்து வீதி விளக்குகளுக்கான மின்சாரத்தை இலங்கை மின்சார சபை முன்னறிவித்தலுடன் துண்டித்தது. இதனையடுத்து, கிளிநொச்சி நகரம் இருளில் மூழ்கியது. மீண்டும் இந்த மின்விளக்குகளை ஒளிர வைக்குமாறு பிரதேச மக்களாலும் வர்த்தகர்களாலும் பல தடவை கோரிக்கை விடப்பட்ட போதும் கரைச்சிப்பிரதேச சபை இதனையெல்லாம் பொருட்படுத்தாமல் புறக்கணித்தே வந்தது. இந்த மின்விளக்குகளை ஒளிரச் செய்வதற்கான மின் கட்டணத்தைச் செலுத்துவதற்கு பிரதேச சபையிடம் நிதி இல்லை என்று தவிசாளர் நா.வை.குகராஜா தெரிவித்து வந்தார்.

ஆனால், கிளிநொச்சி மாவட்டத்தில்

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். - கொழும்பிற்கான ரயில் கட்டண விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வரையான யாழ்தேவி ரயில் சேவையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வமாக நேற்றைய தினம் ஆரம்பித்து வைத்த நிலையில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்ல சராசரியாக நான்கு பிரதான ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

முழுமையாக குளிரூட்டப்பட்ட ரயில் மற்றும் யாழ்தேவி ரயில் சேவைகள் கல்கிசை ரயில். நிலையத்தில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கவுள்ளன.

மேலும் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து கடுகதி மற்றும் இரவு நேர

19 ஆம் பக்கம் பார்க்க

## காரை. பிரதேச சபை செயலாளர் மீது பிரதேச சபை தலைவர் தாக்குதல் முயற்சி


காரைநகர் பிரதேச சபை செயலாளர் மீது பிரதேச சபையின் தலைவர் தாக்குதல் நடாத்த் முயற்சித்துள்ளார்.

மேற்படி சம்பவம் நேற்று பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. பிரதேச சபையின் தலைவருக்கும் செயலாளருக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டது. இம்முரண்பாடு முற்றியதையடுத்து இந்த தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

சபையின் செயலாளர் கா. கேதீஸ்வரி இச்சம்பவம் குறித்து ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

## மக்களுக்காக பணியாற்றுவதற்கு முன்வர வேண்டும் வடமாகாண சபை

### விசேட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு




(யாழ்ப்பாணம்)

அரசியலை ஒதுக்கி வைத்து விட்டு வடபகுதி மக்களின் நலன்களுக்காக வடமாகாண சபை பணியாற்ற முன்வரவேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

அபிவிருத்திக்கு வெளியில் அரசியலை வைத்து விட்டு அதிகாரிகள் மக்களைச் சந்திக்கும் தேவைகளை உறுதி செய்ய வேண்டும்.

வடக்கு மாகாண விசேட அபி விருத்திக் 'குழுக் கூட்டம் நேற்று முற்பகல் 11.45 மணியளவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

19 ஆம் பக்கம் பார்க்க




விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஒரு அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை சம்பளம் 18,000-35,000 வரை தங்குமிடம் உணவு, பயிற்சி வழங்கப்படும் (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள் 0766398366.

(C/3775)

# அர்ப்பணிப்புள்ள சேவையை முழுமையாக மக்களுக்கு வழங்குங்கள்

## அரச அதிபர் அருமைநாயகம் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

நவீனமயப்படுத்தப்பட்ட அரச சேவையை வழங்குவதற்காக இந்த மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படுகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மக்களுக்கு சிறந்த சேவையை வழங்குமாறு யாழ். அரச அதிபர சுந்தரம் அருமைநாயகம் நேற்று தெரிவித்துள்ளார்.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கப் பகுதியில் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் வைத்து அரச சேவையில் உள்ள வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு வரவேற்புரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்நிகழ்வில் அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில்,

அரச ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கும் இந்தத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் நாட்டின் தலைவர் ஜனாதிபதிக்கு அரச ஊழியர்கள் சார்பில் தமது நன்றியைத் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் 2 இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த இந்த மோட்டார் சைக்கிள் ஆண்களுக்கு 50 ஆயிரம் ரூபாவுக்கும், பெண்களுக்கு 45 ஆயிரம் ரூபாவுக்கும், வழங்கப்படுகின்றது என்றும் தெரிவித்த அரச அதிபர் நீங்கள் நவீனமயமான அரச சேவையை வழங்குவதற்காகவே இவை வழங்கப்படுவதாகவும் தெரிவித்தார். (பா,இ)

# முன்பள்ளி டிப்ளோமா முடித்தவர்களுக்கு எதிர்வரும் 18, 19 பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

'ஆறுதல்' நிறுவனத்தில் முன்பள்ளி கல்வியில் டிப்ளோமா கற்கைநெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு இரு நாட்கள் பட்டமளிப்பு விழா இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 18, 19 ஆம் திகதிகளிலேயே இப்பட்டமளிப்பு விழா இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 18 ஆம் திகதி முதல்நாள் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் இலங்கைவேந்தன் கலைக்கல்லூரியில் நிகழ்வு இடம்பெறும்.

பிரதம அதிதியாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியும் சிறப்பு விருந்தினராக த.குருகுலராஜாவும் கலந்து கொள்வர்.

மறுநாள் 19 ஆம் திகதி இடம்பெறும் பட்டமளிப்பு விழாவிற்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் என்.ஏ.ஏ. புஸ்பகுமார தலைமை தாங்குவார்.

அன்றையதினம் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா பிரதம அதிதியாகவும், சிறப்பு அதிதியாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் விமலவீர திஸநாயக்கவும் கலந்து கொள்வர்.

# யாழ். வலய விஞ்ஞான கல்விப் பிரிவில் சுய கற்றல் கையேடு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் விஞ்ஞானக்கல்விப் பிரிவினால் தயாரித்து வடிவமைக்கப்பட்ட தரம் 11 மாணவர்களுக்கான விஞ்ஞான பாடத்திற்கான சுய கற்றல் கையேடு வெளியீடும், இறுவட்டு வெளியீடும் மற்றும் பரிசளிப்பு வைபவமும் எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் விலாட்சி சிவகுருநாதர் மண்டபத்தில் யாழ்ப்பாண கல்வி வலயத்தின் விஞ்ஞான பாடத்திற்கான உதவிக்கல்விப் பணிப்பாளர் ரி.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், சிறப்பு விருந்தினராக வடமாகாணக் கல்வித்திணைக்களத்தின் விஞ்ஞான பாடத்திற்கான உதவிக்கல்விப் பணிப்பாளர் க.அ.சிவனருள்ராஜா கலந்து கொண்டு கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அன்றைய தினம் நடைபெறவுள்ள நூல் வெளியீட்டு நிகழ்விற்கு தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் விஞ்ஞான பாட ஆசிரியர்களையும், ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் தலா 05 மாணவர்கள் வீதமும் கலந்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அன்றைய கௌரவிப்பு நிகழ்வில் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்ற விஞ்ஞான பாட வளவாளர்கள் கௌரவிக்கப்படும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. (03)

# முதுமாணி பரீட்சை முடிவுகள் அடுத்த வாரம் வெளிவரலாம்?

(திருநெல்வேலி)

யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்வி முதுமாணி நேர்முகப் பரீட்சை முடிவுகள அடுத்த வாரம் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப் பரீட்சைக்கு சுமார் 3 மாத காலத்துக்கு முன்னர் 650 பரீட்சார்த்திகள் அளவில் தோற்றியிருந்தனர். இவர்களில் 180 பேர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இன்னும் 100 பேர்கள் அளவிலேயே நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 29, 30 மற்றும் இம்மாதம் 1 ஆம் திகதியில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. (137)

# மோ.சைக்கிள் மதகில் மோதி சிறுவன் காயம்

பொலிகண்டி சிவபாத சுந்தரனார் வீதி ஊடாகச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுக்கு குறுக்கே நாய் பாய்ந்ததில் மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து அருகிலுள்ள மதகில் பாய்ந்து வீழ்ந்ததில் அதில் பயணித்த ஒருவர் காயமடைந்து மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

இச்சம்பவம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் பொலிகண்டிச்சந்தியில் இடம் பெற்றுள்ளது இதில் பொலிகண்டியைச்சேர்ந்த பு.புவீந்திரராசா வயது 17 என்பவரே காயமடைந்தவராவார்.

இவ்விபத்துச்சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது.

குறித்த நபர் என்னோருவருக்கு உதவியாக மோட்டார் சைக்கிளில் ஏறி பொலிகண்டி சிவபாதசுந்தரனார் வீதியூடாக சென்று பொலிகண்டிச்சந்தி பிரதான வீதியை கடக்க முற்பட்ட வேளை நாய் ஒன்று குறுக்கே பாய்ந்ததில் அம்மோட்டார் சைக்கிளில் பயணஞ்செய்த இருவருடன் வேகக்கட்டுப்பாட்டை இழந்து அருகிலுள்ள மதவில் ஏறிப்பாய்ந்ததில் மோட்டார் சைக்கிள் கடும்சேதத்துக்குள்ளாகியதோடு பயணஞ்செய்த மேற்படி நபர் காயங்களுக்குள்ளாகி வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையான ஊறணிக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதீக சிகிச்சைக்காக மந்திகை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் (116)

# தேசிய வாசிப்பு மாத சிறப்பு நிகழ்வில் கவிஞர் சோ.பத்மநாதனுக்கு நினைவுப் பரிசில் வழங்கி கௌரவிப்பு

(திருநெல்வேலி)

கொக்குவில் பொதுநூலகம் தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு மூத்த எழுத்தாளர் கவிஞர் சோ.பத்மநாதன் (சோ.ப) கௌரவிக்கும் நிகழ்வு கொக்குவில் இந்துக்கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடாத்தியது.

நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வுக்கு நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமை தாங்கினார்.

சோ.ப.வுக்கு தவிசாளர் ப.வசந்தகுமார் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். உப தவிசாளர் கோமதி ரவிராஜ் நினைவுப் பரிசில் வழங்கினார். பிரதேச சபை செயலாளர் திருமதி தியாகேஸ்வரி அன்னலிங்கம் வாழ்த்துப்பா வழங்கினார். இதர பிரமுகர்களும் கவிஞரை மாலை அணிவித்துக் கௌரவித்தனர். (137)

# மன்னார் முசலி பிரதேச சபைக்கு புதிய கட்டடம் கிடைத்தது

## பசில் – ரிசாத் இணைந்து திறந்து வைத்தனர்

(மன்னார்)

மன்னார் முசலி பிரதேச சபைக்கு பல மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட நவீன தலைமை'அலுவலக கட்டடம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

பிரதம அதிதிகளாக கலந்து கொண்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ரிஷாட் பதியூதின் ஆகியோர் இணைந்து திறந்துவைத்தனர்.

முசலி பிரதேச சபைத் தவிசாளர் எகியாய் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. புதிய தலைமை அலுவலக கட்டடம் 'என்றிப்' மற்றம் 'புறநெகும' ஆகிய இரு நிதி முதலீட்டு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டது.

இந்நிகழ்வில் மன்னார் பிரதேச சபை செயலாளர் சி.எம். யேசுநாதன், முசலி பிரதேச சபை செயலாளர் ஏ.அல்போன்ஸ், வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உட்பட பல அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# வெகு சிறப்பாக இடம்பெற்ற ஆசுகவியின் நூல் வெளியீட்டு விழா

ஆசுகவி - கவிஞர் செ.சிவசுப்பிரமணியத்தின் 'வழித்துணை' நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் சிறப்பாக இடம்பெற்றது.

காரைநகர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் பு.ஸ்ரீவிக்கினேஸ்வரனின் தலைமையுரையினைத் தொடர்ந்து நிகழ்வுகள் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் வாழ்த்துரையினை ஆனைக்கோட்டை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி ஆ.காந்தநேசன், முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி இ.த. விக்னராஜா, சங்கீத கலாபூசணம் ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர் சு.கணபதிப்பிள்ளை, தவிசாளர் திருமதி நா.ஐங்கரன், கல்லூரி முதல்வர் திருமதி சத்தியகுமாரி சிவகுமார், அதிபர் திருமதி சிவமலர் சுந்தரபாரதி, எதிர்க்கட்சித் தலைவர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) கிராம அதிகாரி இ.ஸ்ரீரஞ்சன் ஆகியோர் வழ்த்துரை வழங்கினர்.

ஆசியுரையினை மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ சி.ஜெயானந்தசர்மா, மூளாய் தென்னிந்திய திருச்சபை அருட்தந்தை செபஸ்டியன் அன்ரனி ஆகியோர் வழங்கினர்.

நூல் அறிமுகவுரையினை மருத்துவ பீட சிரேஸ்ட விரிவுரையாளர் செல்வம் கண்ணதாசன் வழங்க நூல் மதிப்பீட்டு ரையினை யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை தலைவர் பேராசிரியர் திருமதி ஏ.என்.கிருஸ்ணவேணி வழங்கினார். ஏற்புரையினை நூலாசிரியர் ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம் வழங்கினார்.

அன்றையதினம் இசைக்கலாமணி திருமதி பங்கயற்செல்வி முகுந்தன் ஆசிரியை இறைவணக்கம் செய்தார். வரவேற்பு நடனத்தை நாட்டியக்கலைமாணி திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன் ஆசிரியையின் மாணவிகள் வழங்கினர். வரவேற்புரையை கலைமாணி திருமதி பங்கயற்செல்வி யோகநாதன் ஆசிரியை வழங்கிக் கௌரவித்தார்.

# கிராம அலுவலர் பிரிவுகளுக்கு 31 சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன

(திருநெல்வேலி)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 31 கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் 31 முதியோர் சங்கங்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதேச மட்டத்தில் மூத்த பிரஜைகள் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

30 முதியோர் சங்கங்களுக்கும் தலா 5000 ரூபா வழங்கப்பட்டுள்ளது. ஒரு சங்கம் இன்னும் ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்யவில்லையென தெரிவிக்கப்பட்டுகிறது.

இப்பணத்தில் 1500 ரூபாவை சங்கத்தின் தேவைகளுக்கு எடுத்துக்கொள்ளமுடியும் எனவும், மீதி 3500 ரூபாவையும் சங்கத்தின் வங்கி வைப்பில் வைத்திருக்கவேண்டும் எனவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

பல முதியோர்களுக்கு மூத்த அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. வைத்தியசாலைகள், வங்கிகள், திணைக்களங்கள் மற்றும் பொது இடங்களில் இம்மூத்தோர்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என இவற்றின் பொறுப்பாளர்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

சிறு விளம்பரம்

டயானா பிளாஸ்ரிக் இடமாற்றம்

இல.108 பலாலி வீதி
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி சந்தி
அருகாமை)
021 222 8680,
077 592 5088.
(C/3800)

# யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு உருளைக்கிழங்கு மானியம் இரத்து

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கான மானிய உதவிகள் எதுவும் யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளமை தமக்கு ஏமாற்றமளிப்பதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு மூன்று வருடங்களுக்கு 50 வீதமான மானிய விலையில் விதை உருளைக்கிழங்கு வழங்கப்படும் என இந்த வருட முற்பகுதியில் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டபோதிலும் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபடும் யாழ். விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் விதை உருளைக்கிழங்கின் விலை 50 கிலோ 12 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட நிலையில் விதை உருளைக்கிழங்குக்கு மானியம் இல்லை என்பது யாழ். மாவட்ட உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையாளர்களை மனமுடையச் செய்துள்ளது. அது மட்டுமன்றி உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கைக்கு தயார்ப்படுத்திய தோட்டங்களில் வேறு பயிர்களை நடுகை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் கடந்த வருடம் 50 வீதமானிய விலையில் 200 மெற்றிக் தொன் வழங்கப்படும் எனறு அறிவிக்கப்பட்டு விவசாயிகளிடம் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் 132 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கு 50 வீத மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த வருடம் வழங்கப்படும் என உறுதியளித்த தொகையில் மூன்றில் ஒரு பங்கு குறைக்கப்பட்டதுடன் இந்த வருடம் எந்த உதவியும் வழங்கப்படாது என அறிவிக்கப்பட்டமை விவசாயிகளை ஏமாற்றடையச் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



தென்மராட்சி கல்வி வலயம் நடாத்திய ஆசிரியர் தின நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவன் ஆசிரியர் ஒருவரைக் கௌரவிப்பதைக் காணலாம்.

# சுண்டுக்குழியில் சங்கக்கடை திறப்பு

(யாழ்ப்பாணம்)

சுண்டுக்குழி பகுதியில் யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 27ஆம் இலக்க கிளை மீளவும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இக்கிளை நிலையம் சங்கத்தின் புதிய இயக்குநர் சபையின் முயற்சியால் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப் பட்டது.

சங்கத்தின் தலைவர் மு.ஜெ. சுஜிந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளைக் குழுவின் தலைவர் அ. செல்வரட்ணம் இக்கிளையைத் திறந்து வைத்தார்.

சங்கத்தின் உப தலைவர் எஸ். சத்தியதாசன் உட்பட சங்க இயக்குநர்கள், பணியாளர்கள், கிளைக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மேலும் இக்கிளை நிலையம் கடந்த மூன்று வருடங்களாக வியாபார நடவடிக்கைகள் ஏதுமின்றி பூட்டப்பட்ட நிலையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புலமைப்பரிசில் பெறுபேறு

(அச்சுவேலி)

நடைபெற்று முடிந்த தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு யாழ். இடைக்காடு மகாவித்தியாலயத்திலிருந்து சித்தி பெற்றோரின் பெயர் விபரம் வருமாறு:. காந்தராசா ஜனகன் - 172, கிருபாகரன் புவீசன் - 164, வரதராசா கிள்ளி வளவன் - 164, (85)

# நேரக்கட்டுப்பாடு தளர்வு

எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு யாழ். மாவட்டத்திலுள்ள சிகை ஒப்பனை நிலையங்களின் நேரக்கட்டுப்பாடு தளர்த்தப் பட்டுள்ளது. இதன் படி நாளை தொடக்கம் 21ஆம் திகதி வரை இந்த நேரக் கட்டுப்பாடு தளர்த்தப் பட்டுள்ளதாகவும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிகை ஒப்பனை நிலையங்களைத்திறந்து சேவையை வழங்குமாறும், தீபாவளி தினத்தன்று அனைத்து சிகை ஒப்பனை நிலையங்களுக்கும் விடுமுறை வழங்கப் பட்டுள்ளதாகவும் அதனைத் தொடர்ந்து வரும் நாட்கள் வழமை போன்றே நடைபெறும் எனவும் ஒன்றியத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழற்ற அரசியல் பிரச்சினையை எப்பிடித் தீர்க்கலாம் – 06




**‘இந்தியாவும் சர்வதேச சமூகமும் ஈழத்தமிழற்றை பிரச்சினையில தலையிடாதா? இவை நல்லதொரு தீர்வைத் தமிழர்கள் பெறுகிறதுக்கு உதவமாட்டுதுகளா? ஐ.நா கூட இதைப்பற்றி ஒண்டுமே கதைக்காதா? அப்பிடியெண்டால், தமிழர்கள் இப்பிடியே சிங்கள அரசுக்குக்கீழ கிடந்து காலம் முழுக்க வதை படுகிறதுதானா? இந்தப் பிரச்சினையில இருந்து மீழ்றதுக்கு என்ன வழி?’**

– இப்பிடி ஆரும் சிறுபிள்ளைத்தனமாகக் கேட்கலாம். சிறுபிள்ளைத்தனமாகத்தானே தமிழாக்கள் கனபேர் சிந்திக்கினம். அப்பிடியெண்டால், அவையின்ரை கேள்விகளும் சிறுபிள்ளைத்தனமாகத்தான் – பரிதாபத்துக்குரியதாகத் தானிருக்கும்.

இதுக்கு நல்ல பதில் – **இதுவரையும் பெரும் போராட்டத்தையே நடத்திய தமிழர்கள் ஏன் தோற்றனர்? அதுவும் எம்மாம்பெரிய போராட்டங்களையெல்லாம் நடத்திருக்கிறம்!!!???? எத்தினை உயிர்களைத் தியாகம் செய்திருக்கிறம்...!!! எவ்வளவு இழப்புகளையெல்லாம் சந்திச்சிருக்கிறம்? எவ்வளவு காலமாக கண்ணீர் விட்டிருக்கிறம்? எத்தினை நாடுகளுக்கெல்லாம் அகதிகளாகப் போய் எங்கட கண்ணீர்க்கதைகளைச் சொல்லியிருக்கிறம்?** எண்ட கேள்விகள்தான்.

**இதுக்குப் பிறகும் உலகத்தின்ரை இதயம் கரையேல்ல - அது கல்லாய்த்தான் இருக்கெண்டால்.....!!!!!?????**

**இவ்வளவுக்குப் பிறகும் உலகத்துக்கும் இந்தியாவுக்கும் உண்மை நிலைமை புரியேல்ல எண்டால்....!!!!!?????**

இலங்கையின்ரை சரித்திரத்தில எல்லாத் தேர்தல்களிலயும் பொங்குதமிழ் நிகழ்ச்சிகளிலயும் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகத்தான் சனங்கள் எல்லாம் ஒண்டு திரண்டு நிண்டிருக்குதுகள்.

கடைசியாக நடந்த தேர்தல்களில கூட அப்பிடித்தான் தமிழாக்கள் அரச எதிர்ப்பைக் காட்டி, தங்கட பிரச்சினையைப் புரிஞ்சு கொண்டு நல்லதொரு தீர்வைத்தரவேணும் எண்டு உலகத்துக்குக் காட்டியிருக்கினை.

ஆனால்...?

**சர்வதேச உலகமும் இந்த இந்தியாவும் இன்னும் இதையெல்லாம் கண்டும் காணாமலும் இருக்குதுகள் எண்டால்.....?**

**இன்னும் இந்த நாடுகள் எல்லாம் மகிந்தரோட கைகுலுக்கிக் கொண்டிருக்கினம் எண்டால்....?**

**இன்னும் இலங்கை அரசாங்கத்தோட இணக்கமாகத்தான் இருக்கினம் எண்டால்.....?**

**இன்னும் ஈழத்தமிழருக்கு இப்பிடியான ஒரு தீர்வை வழங்க வேணும் - இலங்கையில உள்ள சிறுபான்மை மக்களின்ரை பாதுகாப்பையும் உரிமைகளையும் உறுதிப்படுத்த வேணும் எண்டு உறுதியாகச் சொல்லேல்லை எண்டால்...????**

நாங்கள் எப்பிடி முள்ளிவாய்க்காலில கைவிடப்பட்டமோ அப்பிடித்தான் நடக்கப்போகுது எண்டது நிச்சயமான உண்மை.

அப்பவும் ஐ.நா வருகுது... அமெரிக்கா வருகுது எண்டு எங்கட சனங்கள் எல்லாம் பெரிய நம்பிக்கையோடதானே இருந்ததுகள்....!

ஆனால் என்ன நடந்தது?

எல்லாரும் கண்ணை மூடிக் கையை விட்டாங்கள்.

**அப்பிடியான ஒரு கள்ள உலகத்தை இன்னும் நாங்கள் நம்ப முடியுமா?**

சிலபேர் ஐ.நா வை நம்பலாம் எண்டு கதைக்கினை.

இதைக் கேட்டால் சிரிப்புத்தான் வரும்.

இந்த நவநீதம்பிள்ளை அம்மா பவரில இருக்கேக்கதான் முள்ளிவாய்க்கால் அனர்த்தம் நடந்தது.

அதைப்பற்றி நவநீதம்பிள்ளை அம்மாக்கு அப்ப ஒண்டும் தெரியாதோ... அல்லது பான்கி மூன் ஐயாவுக்குத்தான் ஒண்டும் தெரியாதோ...!

இது மட்டுமில்லை. உலகத்தில இருக்கிற இன்னும் எத்தினையோ நாடுகளில எத்தனையோ பெரிய பிரச்சினைகளும் அநீதிகளும் நடந்து கொண்டிருக்கு...

அங்கயெல்லாம் ஐ.நாவின்ரை தராசு சரியாகத்தான் நிறுக்குதோ...!

இதை நாங்கள் நல்லாய்ப் புரிஞ்சு கொள்ள வேணும்.

எல்லாம் அவரவர் தேவைக்கும் நன்மைக்கும் எண்டுதான் பாக்கினையே தவிர, ஒரு நீதியாக, நியாயமாக, பொதுப் பிரச்சினையாக ஆரும் பாக்கேல்ல. அப்பிடிப் பார்க்கத் தயாரும் இல்லை.

ஆகவேதான் சொல்லிறன், **இலங்கையின்ரை இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண வேணும் எண்டால்... அது விரும்பியோ விரும்பாமலோ... இலங்கை அரசாங்கத்தோடதான் காண வேணும்.**

இலங்கை அரசாங்கம் நல்லதோ கெட்டதோ அதோடதான் பேசவேணும்.

இதைத்தான் இந்தியாவும் வலியுறுத்துது. அமெரிக்காவும் வலியுறுத்துது. உலகமும் வலியுறுத்துது.

ஆனால், **‘நாங்கள் எப்பிடி இலங்கை அரசாங்கத்தோட பேசிறது? அது முற்று முழுதாக சிங்கள இனவாத அரசாங்கமாக - பேரினவாத அரசாங்கமாக - சிறுபான்மை மக்களை மதிக்காத அரசாங்கமாக அல்லவா இருக்குது? இந்த நிலைமையில எப்பிடி நம்பிப் பேச்சுவார்த்தையை நடத்தலாம்? முந்தியும் இப்பிடித்தானே இலங்கை அரசாங்கத்தோட நடத்தின பேச்சுகள் எல்லாம் தோற்றன? கொழும்பு அரசாங்கத்தின்ரை சிந்தனை மாறாத வரையில, சிங்களவற்றை மேலாண்மைக்குணம் மாறாமல் இருக்கும்போது பேசுவதால் நன்மை கிடைக்குமா?’** எண்ட கேள்விகள் எழுகின்றன.

இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் என்ன எண்டு பார்ப்பம்.

உழைப்பவனின் காலம் பொன் ஆகுகிறது. உழைக்காதவனின் பொன் காலமாகுகிறது. - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## பதற்றமடையும் சில மூளைகள்!

நேற்று யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, 24 ஆண்டுகளுக்குப் பின் யாழ்ப்பாணத்திலிருந்து தெற்கிற்கான ரயில் சேவையை ஆரம்பித்து வைத்ததுடன், நவீன வசதிகளுடன் நிர்மாணிக்கபட்ட யாழ் மத்திய புகையிரத நிலையத்தை மக்களுக்குக் கையளித்தார்.

24 ஆண்டுகளுக்குப் பின் யாழ்தேவி ரயில் சேவை ஆரம்பிக்கப்படுவதைக் காண பதினையாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் கூடி நின்றனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதிகாரிகளும், பொதுமக்களுமாக பளையிலிருந்து யாழ்தேவியில் ஏறி முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த போது, அங்கு கூடியிருந்த பல்லாயிரம் மக்களினதும் சந்தோஷக் கூச்சல் விண்ணளாவ ஒலித்தது.

புகையிரத சேவையிலேயே கூட உலகமெங்கும் எவ்வளவோ முன்னேற்றங்கள் வந்துவிட்டிருக்கும் இன்றைய சூழலில், நாமோ ஓடிய ரயிலையும் விட்டொழித்துவிட்டு, கற்காலப் பயணங்களுக்குத் திரும்பிக் கொண்டிருந்தமை பற்றிய கவலை யாழ்ப்பாண மக்கள் எல்லோருக்குள்ளும் இதுநாள்வரை குமைந்திருந்ததை அந்தச் சந்தோஷ ஆர்ப்பரிப்பு எடுத்துக் காட்டியது.

மக்களுக்கு அத்தியாவசியமான இந்தத் தேவைகள் கிடைக்கப் பெறும்போது, அந்த நிகழ்வுகளைப் புறக்கணிப்பதும், "இதெல்லாம் எதற்கு?" என்று முகத்தைச் சுழிப்பதும், ஏதாவது நொட்டைகள் கண்டுபிடித்துச் சொல்லிக் கொண்டிருப்பதும், மக்களது மகிழ்ச்சியைப் புரிந்துகொள்ள வேண்டிய ஊடகங்கள் கண்டுகொள்ளாதது போல் நடிப்பதுமான ஒரு விசித்திரச் சூழ்நிலை இங்கு நிலவுவது பற்றி என்ன சொல்ல?

இது ஒருவித உளநோயாகவே தென்படுகிறது. எல்லாவித உளவியல் நோய்களுக்கும் நம்மிடமுள்ள பதற்றம்தான் காரணம் என்கிறார் சிக்மண்ட் ஃபிரெய்ட். இந்த பதற்ற நோய்க்கு வேராக இருப்பது, வரக்கூடிய ஆபத்தை முன்னுணரும் மூளையின் எதிர்வினையே என்றும் அவர் சொல்கிறார்.

அபிவிருத்திகள், வாழ்க்கைக்குத் தேவையான வசதி வாய்ப்புகள் நமது மக்களுக்கு கிடைக்கும் போது, இந்த மூளைகள் என்னமாதிரியான ஆபத்தை முன்னுணர்ந்து பதற்றமடைகின்றன என்று நாம் ஆராய வேண்டியிருக்கிறது.

மக்களுடைய வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாவதை தங்களுக்கான ஆபத்தாக உணருபவர்கள் யாராக இருக்க முடியும்? மக்களின் கஷ்டங்களையும் அவலங்களையும் அழிவுகளையும் தங்கள் அரசியலுக்கும் வியாபாரத்திற்கும் மூலதனமாகப் பயன்படுத்திக் கொண்டிருப்பவர்கள்தான் இந்தப் பதற்றமடையும் மூளைகளின் சொந்தக்காரர்களாக இருக்கும்!

மக்களுக்குக் கஷ்டங்கள் தொடர்ச்சியாக இருக்க வேண்டும் என்றால் எந்த அபிவிருத்தியும் நடக்கக் கூடாது; தீர்வும் வந்துவிடக் கூடாது என்பதால் அதில் இவர்கள் கவனமாக இருக்கிறார்கள். அதற்கு ஏதுவாகத்தான் இனவாதத்தை இங்கு நெய்யூற்றி நெய்யூற்றி எரியவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அரசின் மீதான வெறுப்பு மட்டுமில்லாமல், ஏனைய சமூகங்கள் மீதான வெறுப்பு, ஏனைய மனிதர்கள் மீதான வெறுப்பு, "பேசுங்கள் இணக்கம் காணுங்கள் அதுதான் மனித வாழ்வைச் சிதைக்காதிருக்கும் வழி" என்று அறிவுரைக்கும் நாடுகள் மீதெல்லாம் வெறுப்பு, நடைமுறைக்குச் சாத்தியமானவை பற்றிச் சிந்தியுங்கள் என்று சொல்வோரிடமும் வெறுப்பு....

இப்படி வெறுப்பையே நமக்குள் நிரப்பி விட்டுக்கொண்டு, யாராலும் காப்பாற்றப்பட முடியாத சமூகமாக ஆக்கி வைத்திருக்கிறார்கள் இந்தத் தலைவர்களும், இனத்துவ நோக்கிலிருந்து விடுபட்டுச் சிந்திக்க முடியாத தமிழ்ப் புத்திஜீவிகள் என்போரும்! - ஆசிரியர்

### - மலேரியாவை கட்டுப்படுத்துவதில் -

# இலங்கையின் அனுபவத்தை பகிர வெளிநாட்டு பிரதிநிதிகள் வருகை

(கொழும்பு)

இலங்கையில் மலேரியா காய்ச்சலை கட்டுப்படுத்திய விதம தொடர்பில் அறிந்துகொள்ளும் நோக்கில் சில நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை வரவுள்ளனர்.

இப்பிரதிநிதிகளுள் மலேரியா விசேட நிபுணரான ரொபட் பிரிசமும் உள்ளார்.

இலங்கையில் மலேரியா தடுப்புக்கு பயன்படுத்தப்பட்ட முறை தொடர்பிலான அனுபவங்களை ஏனைய நாடுகளுடன பகிர்ந்துகொள்ளும் நோக்கில் இன்று நீர்கொழும்பில் நடைபெறவுள்ள சந்திப்பில் கலந்துகொள்ளவே இப்பிரதிநிதிகள் இலங்கை வருகின்றனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர நாயகம் வைத்தியர் பாலித்த மகிபால தெரிவித்தார்.

தெற்காசிய வலய நாடுகளில் மலேரியாவை முழுமையாக கட்டுப்படுத்திய பெருமை இலங்கையையே சாரும். 1937 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மலேரியா தொற்றுநோய் காரணமாக 80,000 பேர் உயிரிழந்தனர். சுமார் 15 இலட்சம் பேர் மலேரியா தொற்றுக்குள்ளாகினர்.

அதன்பின்னர் அவ்வப்போது மலேரியா ஏற்பட்டதுடன் மரணங்களும் சம்பவித்தன. இறுதியாக 2000 ஆம் ஆண்டிலேயே மலேரியாவினால் அதிகம் மரணம் சம்பவித்தது.

இக்காலப்பகுதியில் 2,10,039 நோயாளிகள் அடையாளங் காணப்பட்டனர். இதனையடுத்து தேசிய மலேரியா தடுப்புத் திட்டத்தை ஆரம்பித்த சுகாதார அமைச்சு தூரநோக்குடன் செயற்பட்டது. இத்தகைய நடவடிக்கைகளின் காரணமாக 2012 ஆம் ஆண்டில் 23 பேர் மட்டுமே மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டனர்.

2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் இதுவரை மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட ஒருவர் அடையாளங் காணப்படவில்லை. 2016 ஆம் ஆண்டு வரையில் இந்நிலை தொடரவேண்டியிருப்பதுடன் இக்காலப்பகுதியில் மலேரியா காய்ச்சல் ஏற்படாதிருப்பின் மலேரியாவை முற்றாக ஒழிந்த நாடாக உலக சுகாதார ஸ்தாபனத்தினால் இலங்கை பெயரிடப்படும்.

எனினும் இலங்கைக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகள் மலேரியா தொற்றுடன் வருகின்றமையினால் பெரும் சவாலை எதிர்நோக்கவேண்டியிருக்கிறது. இலங்கைக்குள் ஒரு மலேரியா நோயாளி கூட அடையாளங் காணப்படாவிடினும் கூட இலங்கைக்கு வருகைத்தந்த வெளிநாட்டவர் 39 பேர் மலேரியாவினால் பீடிக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் அடையாளங் காணப்பட்டு விமானநிலைய சுகாதார பிரிவினால் தேவையான சிகிச்சை வழங்கப்பட்டது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

### - கடந்த 9 மாதங்களில் -

# 11 இலட்சத்து 7 ஆயிரத்து 178 பேர் சுற்றுலாப் பயணிகளாக வருகை

நடப்பு ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப் பகுதியில் இலங்கைக்கு வருகை தந்திருந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 22.4 வீதத்தால் அதிகரித்து 1,107,178 ஆக பதிவாகியுள்ளது.

செப்ரெம்பர் மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டின் செப்ரெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் 16.8 வீதத்தால் அதிகரித்து 105,535 ஆக பதிவாகியிருந்தது.

இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளின் வருகையில் காணப்பட்ட அதிகரிப்பு, இந்த எண்ணிக்கையில் உயர் பங்களிப்பை வழங்கியிருந்தது.

2014ஆம் ஆண்டில் மொத்தமாக 1.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க இலங்கை திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிணறுதோண்டியபோது மண்சரிந்து குடும்பஸ்தர் பரிதாபகரமாக உயிரிழப்பு

(வாழைச்சேனை)

வாழைச்சேனை - மீறாவோடை தமிழ் கிராம சேவகர் பிரிவில் புதிதாக அமைக்கப்பட்ட கிணற்றை தோண்டிக் கொண்டு இருக்கும் போது, மண் சரிந்து விழுந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அத்துடன், நேற்று மாலை 6.00 மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில், மற்றுமொருவர் காப்பாற்றப்பட்டுள்ளார்.

மீறாவோடை தமிழ் கிராம சேவகர் பிரிவில் பரிகாரியார் வீதியில் வசித்து வந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான வேலாயுதம் முத்துலிங்கம் (வயது - 42) என்பவரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

மேலும், இவருக்கு உதவியாக கிணறு தோண்டுவதற்கு நின்ற அதே வீதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை விஜயகுமார் (வயது - 32) என்பவர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

மரணித்தவரின் வீட்டில் புதிதாக அமைக்கப்பட்ட கிணற்றில் இருந்து மண்ணை அகற்றிக் கொண்டு இருக்கும் போது மண் சரிந்து கிணற்று மடுவுக்குள் இருவரையும் மூடிய வேளை பொதுமக்களின் உதவியுடன் கணபதிப்பிள்ளை விஜயகுமார் காப்பாற்றப்பட்ட போதும், வேலாயுதம் முத்துலிங்கம் என்பவரின் உயிரைக் காப்பாற்ற முடியாமல் போயுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இராணுவச்சிப்பாய் உயிரிழப்பு

(கொழும்பு)

புத்தல - பொத்துவில் பகுதியில் வேட்டையாடச் சென்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த இராணுவ சிப்பாயால் கொண்டு செல்லப்பட்ட துப்பாக்கி வெடித்ததில் காயமடைந்த நிலையில், லாகுகல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே இவர் பலியாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மரணமடைந்தவர் புத்தல இராணுவ முகாமில் கடமையாற்றிய 40 வயதான ஒருவர் எனத் தெரியவந்துள்ளது.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை லாகுகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தாக்குதல்கள் பலவிதம்

சட்டவிரோத கசிப்பு விற்பனை நிலையமொன்றை சுற்றி வளைப்பதற்காக சிவில் உடையில் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரைப் பிடித்து, மரத்தில் கட்டிவைத்து தாக்குதல் நடத்திய சம்பவமொன்று சிலாபம், ஆரச்சிகட்டுவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.


சிலாபம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவருமே இவ்வாறு மரத்தில் கட்டி வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தை அடுத்து அவ்விடத்துக்கு விரைந்த சிலாபம் பொலிஸ குழுவொன்று, சந்தேகநபர்களைத் தாக்கி, மரத்தில் கட்டிவைக்கப்பட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரையும் மீட்டதுடன் அவர்களை வைத்தியசாலையிலும் அனுமதித்தனர்.

அத்துடன், பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளான சந்தேக நபர்கள் இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

## 24 வருடங்களின் பின்னர்


# யாழில் யாழ்தேவி















(இ,25)

# ரணில் தேர்தலில் போட்டியிட்டால் மகிந்த ராஜபக்ஷவின் வெற்றி உறுதி

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் நம்பிக்கை



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க போட்டியிட்டால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றி உறுதியாகி விடும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹகீம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் போது ரயில் பாதையில் தலையை வைத்துக்கொள்ளத் தயாரில்லை.

கடந்த காலங்களைப் போன்று இம்முறையும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளருக்கு ஆதரளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும், தேர்தலில் ரணில் விக்ரமசிங்க போட்டியிட்டால், ஜனாதிபதி மகிந்தவின் வெற்றி நிச்சயமாகிவிடும்.

எனவே, ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவளிப்பது பயனற்ற செயலாகும்.

எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து செயற்படக் கூடிய ஓர் தலைவர் பொது வேட்பாளராக போட்டியிட்டால் ஆதரவளிப்பது குறித்து கவனம் செலுத்த முடியும் என்றார்.

ஜனாதிபதி தேர்தலுக்கு ஆதரவினை திரட்டும் முயற்சிகளில் ஆளும் கட்சியைப் போன்றே எதிர்க்கட்சிகளும் தீவிரம் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சாதாரணமாக பழகும் நாமலை நேசிக்கும் பொதுமக்கள்



ஜனாதிபதியின் புதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவின் அதிரடி நடவடிக்கைகள் பொது மக்கள் மத்தியில் அவருக்கான ஆதரவை அதிகரித்துள்ளது.

பொதுமக்களுடன் சாதாரணமாக பழகுவது, விளையாட்டுப் போட்டிகளை கண்டுகளிக்கச் செல்வது, பெட்டிக் கடைகளில் தேநீர் அருந்துவது என்று கடந்த காலங்களில் அவர் மேற்கொண்ட செயற்பாடுகள் இளம் தலைமுறையினர் மத்தியில் அவருக்கு ஒரு மரியாதையை ஏற்படுத்தியிருந்தன.

இந்நிலையில் கடந்த வாரம் நடைபெற்ற அம்பாந்தோட்டை சித்தம் கல்லென ரஜமஹா விகாரையின் வருடாந்த பெரஹர வைபவத்திற்கு நாமல் ராஜபக்ஷ பிரதம அதிதியாக அழைக்கப்பட்டிருந்தார்.

ஏராளம் பொதுமக்கள் திரண்டிருந்த நிலையில் பாதுகாப்பு வாகனங்கள் புடைசூழ அங்கு சென்றால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியத்தை உணர்ந்து அவர் முச்சக்கரவண்டி ஒன்றில் ஏறி விகாரைக்குச் சென்றுள்ளார்.

# எதிர்கால தலைமுறைக்கு நன்மையை ஐக்கிய தேசியக் கட்சியே ஏற்படுத்தும்

## கூறுகிறார் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்

இனவாதம் மதவாதம் இல்லாத ஐக்கிய தேசியக் கட்சியினால் மட்டுமே எதிர்கால தலைமுறையினருக்கு நன்மைகளை ஏற்படுத்தக் கூடிய வகையில் ஆட்சி நடாத்த முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் துணைத் தலைவர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர் காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது மிகவும் தீர்மானம் மிக்கதோர் சந்தர்ப்பமாகும், இந்த வேளையில் பொறுப்புணர்ச்சியின்றி செயற்பட முடியாது.

இனங்களுக்கு இடையில் பல்வேறு வழிகளில் முரண்பாடுகளையும் பிரிவினையையும் இந்தளவுக்கு வேறு எந்தவொரு அரசாங்கமும் ஏற்படுத்தவில்லை.



அனைத்து இனங்களையும் ஒன்றிணைத்து நாட்டுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுக்க ஐக்கிய தேசியக் கட்சிக்கு அரசாங்கமொன்று தேவைப்படுகின்றது.

அனைத்து இனங்களும் ஒன்றிணைய வேண்டுமென்ற கொள்கையை ஐக்கிய தேசியக் கட்சியே முன்வைத்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றி அனைத்து இன மக்களுக்கும் நன்மைகளை ஏற்படுத்தும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பல்துறை தொழிலாளர்களுக்கும் சம்பளம் அதிகரிக்கப்படவேண்டும்

## - தேசிய தொழிற்சங்க மத்திய நிலைய தலைவர் கோரிக்கை



அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், பெருந்தோட்ட தொழிலாளர்கள் போன்ற பல துறை சார்ந்த தொழிலாளர்களுக்கும் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினரும் தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவருமான கே.டி.லால்காந்த தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற தொழிலாளர்களின் ஒன்று கூடலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

நாட்டில் விலைவாசி அதிகரித்துச் செல்கின்றது. இதற்கமைய தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. அரச ஊழியர்களுக்கு வாழ்க்கை செலவு அதிகரிப்புக்கு ஏற்ப அரசாங்கம் 10000ரூபாவை ஒரு அரச ஊழியருககு வழங்கவேணடும்.

அதனை 2015ஆம் வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடக்கிப்பட்டு சம்பளத்துடன் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் நாட்டில் உள்ள தொழிலாளர்களை இணைத்து கொண்டு இந்த அரசுக்கு எதிராக நாம் போராடத் தயார்.

மேலும் மலையக தோட்ட தொழிலாளர்களுக்கு மாத சம்பளம் வழங்க வேண்டும். அத்தோடு அவர்களுக்கு வீடு, காணி உரிமைக்கான உறுதிப்பத்திரம் வழங்க வேண்டும். அதற்கு அரசு தனியான சட்ட மூலத்தை தயாரிக்க வேண்டும்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ள நாம் தயார் ஆனாலும் இப்போது வரும் தேர்தலானது சட்ட விரோதமானது அதாவது ஜனாதிபதி தேவைக்கான காலம் இன்னும் இருக்கின்ற போதிலும் தனி ஒரு மனித தேவைக்கான கொண்டுவரப்படுகின்ற தேர்தலாகும்.

இதில் உள்ள சட்ட சிக்கல்களை நாட்டு மக்களுக்கு தெளிவுவுப்படுத்துகின்றோம். எம்மோடு முன்னாள் நீதி அரசர் சரத் த சில்வா உட்பட பலர் இக்கருத்தை தெரிவிக்கின்றனர்.

மேலும் இப்போது அரசாங்கத்தினால் கூறப்படுகின்ற ஒரு கருத்தானது தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு எதிர்க்கட்சிகள் பயம் என்பதாகும்.

இவர்களுக்கு நாம் ஒன்றை தெளிவுபடுத்த விரும்புகின்றோம். அதாவது முதலாவது நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்தனவுக்கு நாடாளுமன்றத்தில் முழு அதிகாரம் காணப்பட்டது.

அவருக்கு நாட்டு மக்களோ, எதிர்க்கட்சிகளோ பயந்ததில்லை. இப்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மையானது மக்கள் ஆணையால் கிடைத்ததல்ல. அதை ஜனாதிபதி உருவாக்கி கொண்ட ஒரு பலம். இதனை இலலாது செய்ய நாட்டு மக்களால் முடியும், சட்ட சிக்கல்கள் உள்ள ஜனாதிபதி தேர்தலை நாம் எதிர்க்கின்றோம் என்றார்

# 115 மேஜர்களுக்கு பதவியுயர்வு

இராணுவத்தின் 115 மேஜர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது. இராணுவ தினத்தை முன்னிட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது. இதன்படி மேஜர் தரத்திலுள்ள இவர்கள் லெப்டினன் கேர்ணல்களாக தரமுயர்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எந்தத்தலைவர்களிடமும் இல்லாத ஆத்ம சக்தி ஜனாதிபதிக்கு உண்டு

## அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நம்பிக்கை

எந்தவொரு நாட்டுத் தலைவாகளிடமும் இல்லாத ஆத்ம சக்தி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச விடம் உண்டு என அமைச்ா் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கல்லொழுவபகுதியில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்டி எழுப்பப்படுகின்ற எந்த ஒரு நாட்டையும் அவ்அரசையும் அமெரிக்கா போன்ற நாடுகள் விட்டு வைக்காது. அவற்றை சீர் குலைக்கச் செய்து தங்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கேற்ற அரச தலைவர்களை அமைத்துக்கொள்ளவும் அவர்களை தங்களின் கைப் பொம்மைகளாக வைத்துக்கொளளவுமே அந் நாடுகள் செயறபட்டு வருகின்றன.

வெளிநாட்டுச்சக்திகள் இலங்கையில் அவர்களது தாளத்துக்கு ஆடக்கூடிய கைப்பொம்மைகளை தலைவர்களாக்க முயலுகின்றன. இதன் பொருட்டு அவர்கள் பில்லியன் கணக்கான அமெரிக்க டொலர்களை செலவிடவும் தயாராகவுள்ளனர்.



இந்த வகையில்தான் ஐந்து பில்லியன் அமெரிக்க டொலர்களை செலவழித்து சிரியாவை சீர்குலைக்க செய்தனர்.

அது மட்டுமல்ல அதேபோன்று லிபியா, ஈராக் போன்ற நாடுகளையும் சீர்குலைக்க முயற்சி செய்தனர். கட்டி எழுப்பப்படுகின்ற எந்தவொரு நாட்டையும் சுயமாக இயங்க அவர்கள் இடமளிக்க மாட்டார்கள்.

அன்று இந்த நாட்டின் எல்லைகளை வேறுபடுத்தி பிரித்து எழுத்து மூலமாக பகிர்ந்தளிக்க முயற்சி செய்த தலைவர்கள் இன்று எவ்வித சஞ்சலமுமின்றி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட தயாராகி வருகின்றனர் என்றாலும் அவர்களின் நோக்கம் நிறைவேற மக்கள் ஒரு போதும் இடமளிக்கப்போவதில்லை. அதற்கான சரியான பதிலை மக்கள் பெற்றுக்கொடுப்பார்கள் என்றார்.

# ஜனாதிபதியை தோல்வியுறச்செய்ய அரசியல் காய் நகர்த்தல்கள்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் ஆருடம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு இம் முறை ஜனாதிபதித் தேர்தலில் இலகுவாக வெற்றி பெற முடியாது. அந்தளவிற்கு உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியில் மகிந்தவை தோலவியடையச் செய்வதற்கான அரசியல் காய்நகர்த்தல்கள் நகர்த்தப்படுகின்றன என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச்செயலாளர் டாக்டர் வசந்த பண்டா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

அரசாங்கம் சீனாவுடன நெருங்கிய தொடர்புகளை கொண்டுள்ளதால் இந்தியாவிற்கு இவ் அரசாங்கத்தை கவிழ்க்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

பிரதமர் மோடி அதற்கான நகர்வுகளை கூட்டமைப்பினருடனும் தமிழகத்திலுள்ள கட்சிகளுடனும் சூட்சுமமாக மேற்கொண்டு வருகின்றார். அமெரிக்காவின் வழிநடாத்தல்களும் இதற்கு கிடைத்துள்ளது.

எனவே, எதிர்வரும் காலங்களில் இந்தியாவின் அழுத்தத்தினால் இ.தொ.கா. வும் ஐ.தே.கட்சியுடன் இணையும் நிலைமை ஏற்படும். அது மட்டுமல்லாது தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் இரகசியமாக இடம்பெற்று வருகின்றன.

இதன் பிரதி பலனாக எதிர்காலத்தில் கிழக்கு மாகாண சபையில் பொது விடயங்கள் தொடர்பாக கூட்டமைப்பும் முஸ்லிம் காங் கிரஸும் இணைந்து செயல்படும் நிலைமை உருவாகும். எனவே, 2005-2009 ஆம் ஆண்டுகளைப் போன்று ஜனாதிபதித் தேர்தலில் இலகுவாக மகிந்த ராஜபக்ஷவால் வெற்றி. பெற முடியாது.



அதேவேளை, நூற்றுக்கு 50 வீத வாக்குகளை எடுக்க முடியாது போகும்.இரண்டாவது முறையாக வாக்குகளை எண்ண நேரிடும். அதன்போது, கூட்டமைப்பினரும் முஸ்லிம் காங்கிரஸும் இ.தொ.கா.வும் பேரம் பேசும் சக்திகளாக உருமாறும் என்றார்.





சர்வமத சகவாழ்வு ஒன்றியத்தின் கிளிநொச்சி கிளையினர் யாழ். நாவாந்துறை ரோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு விஜயம் மேற்கொண்டு சமாதான சகவாழ்வை மேம்படுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொண்டனர். இதன் போது பங்குத்தந்தை பா. இராஜசிங்கம் தலைமையில் அதிதிகள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் நடனநிகழ்வையும் காணலாம். (105)

# வேலைவாய்ப்பு முகவர்களை நம்பி மக்கள் ஏமாற்றமடையக்கூடாது

## – வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தலைவர் தெரிவிப்பு –

(யாழ்ப்பாணம்)

எமது மக்கள் தமது வீடுகளை ஈடு வைத்தும் நகைகளை அடைவு வைத்தும் அதிக வட்டிக்கு கடன் வாங்கியும் பெற்றுக் கொள்ளும் பணத்தை போலி வேலைவாய்ப்பு முகவர்கள் சுரண்டி விடுகின்றனர். இவர்களை நம்பி எமது மக்கள் ஏமாறக்கூடாது.

இவ்வாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெறவிரும்பும் மக்களுக்கான விழிப்புணர்வூட்டும் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர்.அமல் சேனாலங்கார குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

போலி முகவர்களை நம்பி வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுச் சென்றவர்கள் அந்நாடுகளில் பெருந்துன்பங்களையும் பல்வேறு சிரமங்களையும் எதிர்நோக்குகின்றனர்.

இரண்டு வருட காலம் வேலைவாய்ப்பு என்று கூறி அழைத்துச்சென்று எட்டு மாதங்கள் மட்டுமே வேலை கொடுக்கப்படும். உடனடி வேலைவாய்ப்பு என்று கூறி அனுப்புகிறார்கள். குறிப்பிட்ட காலப்பகுதிக்கு வேலையின்றி இருக்கவேண்டியுள்ளது. அதிக நேரம் வேலைவாங்குதல் மற்றும சித்திரவதை போன்ற துன்பங்களையும் அனுபவிக்க வேண்டியுள்ளது.

இவை அனைத்தும் போலி முகவர்களின் செயற்பாட்டாலும், பொய்வாக்குறிதிகளாலும எமது மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளாகும். இவை தொடர்பாக மக்கள் விழிப்புடன் நடந்துகொள்ள வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் அகில இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் நிறைவேற்று அதிகாரி கௌரி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வேலைவாய்ப்பு முகவர் நிலைய அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டு விழிப்புணர்வூட்டும் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

# மருத்துவ முகாம்

(வவுனியா)

வடமாகாண சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட சித்த ஆயுள்வேத பாதுகாப்புச்சபை நடாத்தும் மாதாந்த இலவச மருத்துவமுகாம் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஓமந்தைப் பகுதியிலுள்ள வேலர் சின்னக்குளம், மகிழங்குளம், விளக்குவைத்தகுளம் பகுதிகளில் காலை 9 மணி முதல் பி.ப 1 மணி வரை இவ் இலவச மருத்துவமுகாம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் இல் இலவசமுகாமில் கலந்துகொண்டு சிகிச்சைகளை பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# நுழைவாயில் திறப்பு விழா




(வவுனியா)

வவுனியா இலங்கை திருச்சபை தமிழ்க்கலவன் பாடசாலையின் நுழைவாயில் திறப்பு கடந்த விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது. பாடசாலை அதிபர் திருமதி தர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வடமாகாணசபை உறுப்பினர்களான தியாகராசா, இந்திரராசா ஆகியோரும் வவுனியா வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா, வவுனியா தெற்கு கோட்டக்கல்வி அதிகாரி எம்.பி.நடராஜா, பொரு ளியலாளர் எஸ்.சிவகுமாரன், பிரதிக்கல்வி பணிப்பாளர்களான திருமதி மாணிக்கவாசகம், கணேசலிங்கம், வலய பிரதிநிதி வசந்தி குலராசா, பாடசாலையின் பிரதி அதிபர் ஜெரோம் பிரதாபன் ஆகியோரும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# மீட்கப்படாத அடகுநகைகள் ஏலத்தில் விற்பனை

(யாழ்ப்பாணம்)

யூனியன் வங்கி கிளைகளில் அடகு வைக்கப்பட்டு கடந்த 2013 யூலை 13 ஆம் திகதி அல்லது அதற்கு முன் அடகு வைக்கப்பட்டு கடந்த யூலை மாதம் வரை மீட்கப்படாத நகைகள் ஏல விற்பனை செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவற்றின் விபரம் வருமாறு:-

வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய கிளைகளில் அடகு வைக்கப்பட்ட பொருட்கள் அந்தந்த கிளைகளில் ஏலத்தில் விற்கப்படவுள்ளதாகவும், அச்சுவேலி மற்றும் சுன்னாகம் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட பொருட்கள் கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள சுன்னாகம் கிளையிலும் ஏலத்தில் விற்பனை செய்யப் படவுள்ளன எனவும் கொழும்பு யூனியன் வங்கி பிரதான முகாமையாளர் அறிவித்துள்ளார்.

# சூரிய மின்கலங்கள் வழங்கி வைப்பு

(முல்லைத்தீவு)

கரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு நட்டாங்கண்டல் கிராமத்தில் 20 மாணவர்களின் வீடுகளுக்கு சூரியமின்கலங்கள் வழங்கப்பட்டன.

நட்டாங்கண்டல்கிராமத்துக்கு இன்னமும் மின்சாரம் வழங்கப் படவில்லை இதனால் இங்கு வசிக்கின்ற மாணவர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதை சுட்டிக்காட்டியதையடுத்து மாணவர்களின் வீடுகளுக்கு சூரிய மின்கலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை வங்கியில் பல கிராமங்களுக்கு இன்னமும் மின்சாரம் கிடைக்காமையினால் மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடதக்கது.

# முரசின் இன்றைய பலன்



(14.10.2014 செவ்வாய்க்கிழமை)

ஜய வருஷம் புரட்டாதி மாதம் 28 ஆம் திகதி.
சித்தம் / ஷஷ்டி.
மிருபசீரிட நட்சத்திரம் மு.பகல். 10.13 வரை. பின் திருவாதிரை.
இராகு காலம் 03.02 - 04.32 வரை. சுபநேரம் 10.32 - 12.02 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | கௌரவப் பிரச்சினை முன்னிட்டு அழைப்பிதழை ஏற்காது விடல், பழைய ஒப்பந்தம் நட்டநிலையை ஏற்படுத்தியதால் புதியதைக்கைவிட்டு விடல். |
| ரிஷபம் | காசோலை பாவிப்பதால் சிக்கல்களை எதிர்கொள்ளல். போலி நகையை விற்க முயன்றவேளை பிடிபடல். |
| மிதுனம் | பொறுமையை கடைப்பிடித்ததால் அமைதி நிலவல் பொறுப்பின்றி கடன் கொடுக்க முற்பட்டவேளை துணைவியார் தடுத்துவிடல். |
| கடகம் | மனையை வாஸ்த்து முறைப்படி அமைக்க உத்தேசித்தல், கூட்டுத் தொழில எதிர்பார்த்த இலாபத்தை தராததால் விலகிவிடும் உத்தேசம். |
| சிம்மம் | சுபச்செலவிற்குபட்ட கடனை அடைக்க முடியாதநிலையில் மனக்கிலேச மடைதல், மிகுதிப்பணம் பெறுவது சம்பந்தமாக நடாத்துனருடன் வாக்குவாதப்படல். |
| கன்னி | ஏழரைச்சனி விரைவில் நீங்குவதினால் பயணத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல், புதிய ஒப்பந்தம் கைச்சாத்திட ஏன முடிவாக தம்பதியர் தீர்மானித்தல். |
| துலாம் | தொழில் நிமித்தம் ஏற்படும் பிரிவினால் மனத்துயரம் வாட்டுதல், முடிவடையும் நிலைக்கு வந்த சுபநிகழ்வு அமங்கல சம்பவத்தினால் பாதிக்கப்படல். |
| விருச்சிகம் | நீண்ட நாட்கள் இழுபட்ட நிலுவைப் பணம் கைக்குவந்ததால் மகிழ்வு, சகோதரியின் கடாட்சத்தினால் வாகன யோகம் கிட்ட பண உதவிசெய்தல். |
| தனுசு | அட்டமத்து வியாழன் இருப்பதை எண்ணி புதிய கிளை நிறுவனம் திரக்கும் யோசனையைக் கைவிடல், கவலையை ஒருபுறம் தள்ளி விட்டு காரியத்தில் முழுமனதுடன் ஈடுபடல். |
| மகரம் | ஏற்பூசி போட அலட்சியமாக இருந்தமையினால் நோயினால் தேக நலம் மோசமடைதல், தொடர் கவலைகளை ஜீரணிக்க முடியாது சுடலைஞானம் பிறந்துவிடல். |
| கும்பம் | பராமரிக்கயாருமற்ற நிலையில் வயோதிபர் மடூத்தில் சேர விழைதல், வெளிச்சமின்றி பிரயாணம் செய்ய முற்பட்டவேளை விபத்திினின்றும் அருந்தப்பு. |
| மீனம் | முடிவான செயலுக்கு இடையூறு நேரக்கூடாதென இறைவனை இறைஞ்சுதல், புதிய நியமனம் கிடைத்திருக்கும் செய்தியை அறிந்து மகிழ்வுறல். |

# பாகிஸ்தான் பரிதாப தோல்வி

## தொடரை முழுமையாக வென்ற ஆஸி. மீண்டும் முதலிடம்

பாகிஸ்தான் அணிக்கெதிரான இறுதி ஒரு நாள் போட்டியில் அவுஸ்ரேலிய அணி த்ரில் வெற்றிபெற்றது.

அவுஸ்ரேலிய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் அபுதாபியில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய அவுஸ்ரேலிய அணி ஸ்ரீபன் ஸ்மித்தின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் அவுஸ்ரேலிய அணி 50 ஓவர்கள நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 231 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஸ்ரீபன் ஸ்மித் 77, டேவிட் வோர்னர் 56, ஜேம்ஸ் போக்னர் 33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சொஹைல் தன்வீர் மூன்று, அப்ரிடி இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.



பதிலுக்கு 232 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி விக்கெட்டுக்களை சீரான இடைவெளியில் பறிகொடுத்தபோதிலும் இறுதி வரை வெற்றி வாய்ப்பைத் தக்கவைத்திருந்தது. இறுதி ஓவரில் இரு விக்கெட்டுக்கள் கைவசம் இருக்க பாகிஸ்தான் அணி வெற்றி பெற இரு ஓட்டங்களை மாத்திரமே பெற வேண்டிய நிலையிலிருந்தது. இந்நிலையில் இறுதி ஓவரை சிறப்பான முறையில் வீசிய மைக்வெஸ் பாகிஸ்தான் அணியின் இறுதி இரு விக்கெட்டுக்களையும் சாய்த்து போட்டியில் திருப்புமுனையை ஏற்படுத்தியதுடன் அணிக்கு வெற்றியையும் தேடிக் கொடுத்தார். நிறைவில் பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 230 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் சொஹைப் மக்சூட் 34, ஆஷெட் சபிக் 50 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மைக்ஸ்வெல், ஜேம்ஸ் போல்க்னர், ரிச்சட்சன், சேவியர் டொஹர்ட்டி ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக மைக்ஸ்வெல், தொடர் நாயகனாக ஸ்ரீபன் ஸ்மித் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இவ்வெற்றியின் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை அவுஸ்ரேலிய அணி முழுமையாக கைப்பற்றிக் கொண்டது.

இதேவேளை, மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை முழுமையாகக் கைப்பற்றிக் கொண்டதன் மூலம் அவுஸ்ரேலிய அணி சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒரு நாள் போட்டிக்கான தரப்படுத்தலில் மீண்டும் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ஆட்டம்

(பாணாந்துறை)

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்படும் பிரிவு மூன்றின் தெரிவு செய்யப்பட்ட 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான சூப்பர் குறூப் இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் யாழ். மத்திய கல்லூரி மற்றும் பாணாந்துறை மகாராம கல்லூரி அணிகளுக்கிடையிலான ஆட்டம் இன்றைய தினம் பாணாந்துறை மகாராம கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. யாழ். மத்திய கல்லூரி முதல் போட்டியில் வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி)

# சமந்தா சம்பியன்



(ஒசாகா)

ஜப்பான் ஓப்பன் மகளிர் ரென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவில், அவுஸ்ரேலிய வீராங்கனை சமந்தா ஸ்டோசர் சம்பியன் பட்டம் வென்றார்.

இறுதிப் போட்டியில் கஜகஸ்தான் வீராங்கனை ஜரினா தியாசுடன் நேற்று முன்தினம் மோதிய சமந்தா 7-6 (9-7), 6-3 என்ற நேர் செட்களில் வென்று கோப்பையைக் கைப்பற்றினார்.

# மே.தீவு, இந்தியா

## 3ஆவது ஆட்டம் இரத்து

புயல் காரணமாக, இந்தியா, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒரு நாள் போட்டி இரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்தியா, மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் மோதும் மூன்றாவது ஒரு நாள் போட்டி ஆந்திராவின் விசாகப்பட்டினத்தில் இன்று நடைபெறவிருந்தது. கடந்த இரு நாட்களாகப் கடும் காற்று மற்றும் புயலால், அடுத்த மூன்று தினங்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்பிருப்பதாக வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

விசாகப்பட்டினத்துக்கான விமான சேவையும் ரத்து செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து மூன்றாவது ஒருநாள் போட்டியை இரத்து செய்வதாக இந்திய கிரிக்கெட் சபை அறிவித்தது. இரு அணி வீரர்களும் டில்லியிலுள்ள விடுதியில் தங்கியுள்ளனர். இவர்கள் நான்காவது போட்டி (ஒக்ரேபார் 17) நடைபெறவுள்ள தரம்சாலாவுக்கு புறப்பட்டுச் செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. 3ஆவது போட்டி இரத்தானதால் ஒரு நாள் தொடர் சமநிலையில் நிறைவடைய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# உலக சம்பியன் போலந்திடம் தோல்வி



(வார்சா)


யூரோ கிண்ணக் கால்பந்து தகுதிச் சுற்றில் உலக சம்பியன் ஜேர்மனி அணி, போலந்திடம் 2-0 என தோல்வியடைந்தது.

யூரோ கோப்பை தொடர் பிரான்சில் எதிர்வரும் 2016, யூன் 10ஆம் திகதி முதல் யூலை 10ஆம் திகதி வரை நடக்கவுள்ளது. வார்சாவில் நடைபெற்ற இதற்கான டி பிரிவு தகுதிச் சுற்று லீக் போட்டியில் உலக சம்பியன் ஜேர்மனி அணி, போலந்தை சந்தித்தது. முதல் பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட போலந்து அணிக்கு ஆர்காடியுஸ் (51ஆவது நிமிடம்), செபாஸ்டியன் மிலா (88ஆவுது நிமிடம்) தலா ஒரு கோல் அடித்தனர். முடிவில், ஜேர்மனி அணி 0-2 என அதிர்ச்சித் தோல்வியடைந்தது.

ஜேர்மனி அணிக்கு எதிராக இதற்கு முன் விளையாடிய 18 போட்டிகளில் ஒரு முறை கூட போலந்து வென்றது கிடையாது. தற்போது வெற்றி பெற்றதன் மூலம் வரலாற்று சாதனை புரிந்துள்ளது.

இதன் மூலம் தகுதிச்சுற்றில் கடந்த 7 ஆண்டுகளாக தோல்வியே அடையாத, ஜேர்மனி அணி முதல் முறையாக வீழ்ந்தது. இதற்கு முன், கடந்த ஒக்ரோபர் 2007இல் நடைபெற்ற யூரோ கோப்பை தொடரின் தகுதிச்சுற்றில் செக் குடியரசு அணியிடம் 0-3 என தோல்வியடைந்தது

# பெடரர் வசம் கிண்ணம்



(ஷாங்காய்)

சீனாவில் நடைபெற்ற ஷாங்காய் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டித் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில், நட்சத்திர வீரர் ரோஜர் பெடரர் (சுவிஸ்) சம்பியன் பட்டம் வென்றார்.

இறுதிப் போட்டியில் பிரான்சின் கில்லஸ் சைமனுடன் நேற்று முன்தினம் மோதிய பெடரர் 7-6 (8-6), 7-6 (7-2) என்ற நேர் செட்களில் போராடி வென்று முதல் முறையாக ஷாங்காய் தொடரில் சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். ஏடிபி மாஸ்டர்ஸ் 1000 தொடர்களில் பெடரர் பெறும் 23ஆவது பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# துடுப்பாட்ட வரிசையில் மாற்றம்; வெற்றிக்கு வித்திட்டது

ஓட்டங்களைத் துரிதமாக சேர்ப்பதில் ஹோலி திறமையான வீரர். ஆனாலும் தற்போது அவர் ஆட்டத் திறனின்றியிருப்பது அணிக்கும் அவருக்கும் பெரும் பின்னடைவு. இந்நிலையில் துடுப்பாட்ட வரிசையில் நாங்கள் செய்த சிறு மாற்றத்தால் நல்ல பலன்களை அடைந்தோம் என இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் வெற்றிபெற்றமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே டோனி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஹோலி மிகவும் அனுபவம் வாய்ந்த வீரர். அணிக்கு எது தேவை என்பது அவருக்கு தெரியும். வழக்கமாக 3ஆவது வரிசையில் ஆடும் அவரை இந்த முறை சில காரணங்களுக்காக 4ஆவது வரிசையில் விளையாடும்படி கூறி சமாதானப்படுத்தினோம். அவரும் இது தனக்கும், அணிக்கு நல்ல விடயம் என்பதைப் புரிந்து கொண்டார். ஹோலி, துரிதமாக ஓட்டங்களை சேர்ப்பதில் திறமையானவர். எனவே 3ஆவது வரிசையில் இறங்கும் வீரர் (அம்பத்தி ராயுடு இறக்கப்பட்டார்) அசத்தும் பட்சத்தில், 4ஆவது வரிசையில் ஹோலியால் சௌகரியமாக ஆட முடியும். இதன் அடிப்படையில் முதல் முறையாக இந்த முயற்சியை மேற்கொண்டோம். இந்த திட்டம் எப்படி இருக்கும் என்பதை போகப் போக பார்க்கலாம். 5ஆவது, 6ஆவது, 7ஆவது வரிசையில் மிகவும் அனுபவம் வாய்ந்த வீரர்கள் ஆடுவது அணிக்கு கைகொடுக்கும் என்று நம்புகிறேன். இந்த துடுப்பாட்ட வரிசை மாற்றம் ஹோலிக்கு உதவியது. அவர் நன்றாக விளையாடி நெருக்கடியிலிருந்து மீண்டார். துடுப்பாட்ட வரிசையை மாற்றியதால் எதிரணியின் வியூகங்களிலும் தடுமாற்றம் ஏற்பட்டது. ஆனால் நாங்கள் எங்களது திறமைக்கு ஏற்ப இந்த ஆட்டத்தில் ஆடவில்லை. வீரர்கள் முழு திறமையை களத்தில் காட்ட வேண்டும். நாங்கள் வெற்றி பெற்ற அணியாக இருந்தாலும், கிட்டத்தட்ட தோல்வியின் விளிம்பில் இருந்தே மீண்டு வந்தோம். 40ஆவது ஓவரை நெருங்கிய போது அடுத்தடுத்து இரு முன்னணி வீரர்களின் விக்கெட்டுக்களை இழந்ததால் ஓட்டவேகம் தளர்ந்தது. இதனால் எதிர்பார்த்ததை விட 20 ஓட்டங்கள் குறைவாக எடுத்து விட்டோம். இருப்பினும் ஒருங்கிணைந்த செயற்பட்டால் வெற்றிப் பதிவாகினோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



விளையாட்டுச் செய்திகள்

# லோகதீஸ்வர் சுழலில் ஜாலம்
## 10 விக்கெட்டுக்களால் சென். ஜோண்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

லோகதீஸ்வரின் சுழற்பந்து ஜாலத்தின் மூலம் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி பத்து விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கம் நடாத்தி வரும் பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு பாடசாலை தெரிவு அணிகளுக்கிடையிலான சூப்பர் குறூப் இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டித் தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் சென். ஜோண்ஸ் கல்லூரி அணிகளுக்கிடையிலான ஆட்டம் கடந்த 10,11ஆம் திகதிகளில் சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென். ஜோண்ஸ் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி லோகதீஸ்வரின் சுழற்பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியதுடன் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. ஒரு முனையில் டிலுசன் பொறுப்பாக ஆடியபோதிலும் மறுமுனையில் ஏனைய வீரர்களால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. இறுதியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டிலுசன் 94 பந்துகளை எதிர்கொண்டு ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 43, கபிலன் 18 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் லோகதீஸ்வர் 34 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து, யதுசன் ஐந்து ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி துவாரகசீலனின் பொறுப்பான ஆட்டத்தால் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது. இதில் துவாரகசீலன் 87 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 54, பிளமிங் 19, கஜீபன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சந்தோஷ் 30 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து, தனுலக்ஷன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

48 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி லோகதீஸ்வரின் பந்து வீச்சிற்கு மீண்டும் திணறியதுடன் விக்கெட்டுக்களையும் விரைவாகப் பறிகொடுத்தது. இறுதியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சஜீபன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லோகதீஸ்வர் 30 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து, நிலோஜன் 10 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.



நான்கு ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி 0.4 பந்துகளில் வெற்றியிலக்கை அடைந்தது. இதன் மூலம் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி பத்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இரு இனிங்ஸிலும் பத்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய லோகதீஸ்வர் அணியின் வெற்றிக்கு பெரும் துணை புரிந்தார். (எஸ்.பி.)

## தேசிய வாள் விளையாட்டு விரைவில் கொழும்பில்

(கொழும்பு)

தேசிய வாள் விளையாட்டு சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தேசிய வாள் விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 30, 31ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

வாள் விளையாட்டில் பயிற்சி பெறும் புதிய வீர வீராங்கனைகளை களத்திற்கு கொண்டு வரும் நோக்கிலேயே இப்போட்டி நடாத்தப்படவுள்ளது.

எட்டுச் சுற்றுக்களாக இடம்பெறும் இப்போட்டியில் 8 பதக்கங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிரிக்கெட் பயிற்சி முகாம்

இலங்கை கிரிக்கெட் சபையினால் மூன்று நாள் பயிற்சி முகாம் இன்று முதல் நாளை மறுதினம் வரை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் கிரிக்கெட் பயிற்றுநர்கள் மற்றும் 13 வயதிற்குட்பட்ட வீரர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படும் எனவும், இதில் இலங்கை கிரிக்கெட் சபையின் முன்னாள் அதிகாரிகள்கலந்து கொண்டு கிரிக்கெட் தொடர்பான செயன்முறை விளக்கங்களை வழங்கவுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.)

## சைக்கிள் ஓட்டத்தில் மன்னார் வாசி முதலிடம்



(மன்னார்)

ஹஜ் பெருநாளை முன்னிட்டு தலைமன்னார் பியர் புதிய குடியேற்றமாகிய றிசாட் சிட்டியில் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டன. அதன் தொடர்ச்சியாக சைக்கிள் ஓட்ட நிகழ்வு நடைபெற்றது. இதில் தலைமன்னார் பியர் கிழக்கைச் சேர்ந்த 52 வயதான பிரதர் என அழைக்கப்படும் கந்தப்பு கருணேந்திரன் முதலிடத்தை பிடித்து அனைவர் பாராட்டையும் பெற்றார்.

தலைமன்னார் பியர் றிசாட் சிட்டியில் இருந்து ஆரம்பமாகிய இச் சைக்கிள் ஓட்டம் பேசாலை பேருந்து தரிப்பிடம் வரை சென்று திரும்பி மீண்டும் தலைமன்னார் பியர் றிசாட் சிட்டியில் நிறைவடைந்தது.

வெற்றி பெற்ற இவருக்கு தலைமன்னார் பியர் கிராம அலுவலர் ஜனாப். அப்துல் ரவூப் அவர்களோடு ஹஜ் பெருநாள் விழா தலைவர், விளையாட்டு தலைவர் உட்பட ஊர் பொதுமக்கள் அனைவரும் தமது பாராட்டுக்களைத் தெரிவித்தனர். இப்போட்டி கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

# கொக்குவில் பிரம்படி கிண்ணம் வென்றது

(யாழ்ப்பாணம்)

நாம் நண்பர்கள் அமைப்பு வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக நடாத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கொக்குவில் பிரம்படி அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

முப்பதிற்கும் மேற்பட்ட அணிகள் கலந்துகொண்ட இச்சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் கடந்த 5ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கொக்குவில் பிரம்படி அணியும் கரவெட்டி ஞானம்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கரவெட்டி ஞானம்ஸ் அணி 10 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டெஷ்மன் 15, றஜீவன் 11, கோகுலன் 7 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் லக்ஷன் மூன்று, சிலோஜன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 59 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொக்குவில் பிரம்படி அணி 9.4 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஆதித்தன் ஆட்டமிழக்காமல் 16, பவிகரன் 15, மதுஷன் 7 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் அனுஷ்யந்தன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதன் மூலம் கொக்குவில் பிரம்படி அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக ஆதித்தன், சிறந்த பந்துவீச்சாளராக லக்ஷன், போட்டியின் ஆட்டநாயகனாக பவிதரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டி நிகழ்வில் மென்பந்து கிரிக்கெட் இரசிகர்கள், விளையாட்டு ஆர்வலர்கள், நலன் விரும்பிகள் என பலர் கலந்து கொண்டு இரு அணிகளை யும் உற்சாகப்படுத்தினர். (48)

## வென்றது கலைமதி

(உரும்பிராய்)

உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டமொன்றில் நவிண்டில் கலைமதி அணி அபார வெற்றிபெற்றது.

யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுககழகம் நடாத்தி வரும் அணிக்கு ஏழு பேர் கொண்ட மாபெரும் கால்பந்துப் போட்டி சென். மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற போட்டியில் தம்பாட்டி காந்திஜி அணியும் நவிண்டில் கலைமதி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய கலைமதி அணி கோல் மழை பொழிந்தது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் காந்திஜி அணி செயற்பட்டபோதிலும் அதன் முயற்சிகள் கலைமதி அணியால் முறியடிக்கப்பட்டன. இறுதியில் கலைமதி அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (93)



யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கம், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் விளையாட்டு அவையும் இணைந்து நடாத்திய அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட உடுவில் மகளிர் கல்லூரியின் 15 வயதுப் பிரிவு அணியைக் காணலாம். கடந்த வாரம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் பண்டத்தரிப்பு உயர்தரப் பாடசாலை அணி கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (93)



# அதிகாரப் பகிர்வுக்கான நிலைப்பாட்டில் சிறுபான்மை கட்சிகளின் எதிரும் புதிருமான நிலை

- சாலையூரான் -

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதாயின் சிறுபான்மை மக்களின் வாக்குகளை ஒருமுகப்படுத்தியாக வேண்டும் என்கிற நிலை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இப்போது தமிழ் சூழலிலும், தமிழ் சூழலுக்கு வெளியேயும் அவசியமாக உணரப்பட்டிருக்கிறது.

இந்தத் தேர்தலில் தமது இனம் சார்ந்து சக சிறுபான்மை கட்சிகளுடன் எத்தகைய நிலைப்பாடொன்றுக்கு செல்ல வேண்டும் என்பது அனைத்து சிறுபான்மை கட்சிகளின் முன்னாலும் முக்கியமான விவகாரமாக வந்து நிற்கிறது.

வடக்கு, கிழக்கு, மலையக, தமிழ், முஸ்லிம் மற்றும் இடதுசாரி கட்சிகள் யாவும் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதில் ஏறத்தாழ ஒரே நிலைப்பாட்டைக் கொண்டுள்ள போதும்...

இந்த ஜனாதிபதி தேர்தலில் அனைத்து சிறுபான்மைக் கட்சிகளும் எவ்வாறு ஒருமுகப்பட்டுக் கொள்ள முடியும் என்பது சர்ச்சைக்குரிய பிரச்சினையாகவே இருக்கிறது.

ஏனெனில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பானது, அரசுக்கு ஆதரவான எந்த தமிழ் தரப்புடனும் எதையும் விட்டுக்கொடுத்துப் பேசிக்கொள்ள முடியாத நிலையில் உள்ள அதேசமயம் தென்னிலங்கை எதிர்தரப்பு கட்சிகளுடன் தேர்தல் கூட்டொன்றை ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

அது சாராம்சத்தில் அரசுத்தரப்பு வேட்பாளரைத் தோற்கடிக்கும் முயற்சியே தவிர தமிழ் மக்கள் எதையேனும் பெற்றுக்கொள்ள வழியேற்படுத்துவதாக இருக்காது என்பதை இங்கே குறித்துக் கொள்ள வேண்டும்.

இந்த தேர்தலை முன்னிட்டு அதிகாரப் பகிர்வுக்கான தமிழ் தரப்பின் முயற்சிகளில் முஸ்லிம் மக்கள் எவ்வாறு கை கோர்க்க முடியும் என்பதும் பதிலுக்கு முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தமிழ்த்தரப்பினர் என்ன தீர்வை முன்வைக்க முடியும் என்பதும் தெளிவற்றதாகவே இருக்கிறது.

முஸ்லிம்களுக்காக தமிழ் தலைவர்கள் தமது மக்கள் மத்தியிலும் அவ்வாறே தமிழர்களுக்காக முஸ்லிம் தலைவர்கள் தமது மக்கள் மத்தியிலும் ஆதரவைக் கோரி தமக்கான தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்க முடியாத அளவுக்கு தமிழ், முஸ்லிம் மக்களின் அரசியல் சூழல் சிக்கலான ஒரு நிலைமைக்குள் இப்போது இருக்கிறது.

மறுபக்கத்தில் கொழும்பு மற்றும் மலையக தமிழ் கட்சிகள் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காக எவ்வித அக்கறையும் கொள்ள முடியாத அளவுக்கு வெறும் பிராந்தியக் கட்சிகளாக தரம் தாழ்ந்து விட்டன.

இந்த நிலைமைக்கு அந்த கட்சிகளை கொண்டு சென்றதில் எமது மரபுவழி தமிழ்த் தலைமைக்கு பெரும் பங்கிருப்பதையும் வருத்தத்துடன் குறிப்பிட்டாக வேண்டும்.

தற்போதை சூழலில் வடக்கு கிழக்கின் எந்த ஒரு தமிழ் தரப்புடனும் பேசி அதிகாரப் பகிர்வுக்காக இந்த ஜனாதிபதி தேர்தலில் ஒருமுகப்பட முடியாத அளவுக்கு வடக்கு கிழக்கு தமிழ் கட்சிகள் தமக்குள் பிளவை ஏற்படுத்திக் கொண்டுள்ளன.

அந்த அளவுக்கு தமது அதிகாரத்துவ நலன்களுக்காக அதற்கான வாக்கு வேட்டைக்காக எதற்கும் விலைபோகும் நிலைக்கு இந்த சிறுபான்மை கட்சிகள் சென்று விட்டிருப்பது கவலை தரும் செய்தி. தென்னிலங்கையைப் பொறுத்தவரை, லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதாரண அதிகாரப் பரவலாக்கலை ஆதரிக்கும் அறிக்கையொன்றை தயாரித்தமைக்காக அங்குள்ள இனவாதக் கட்சிகளின் வெளிநடப்பும், அறிக்கை கிடப்பில் போடப்படும் நிலைமையும் நேர்ந்திருக்கிறது.

சரி, அதிகாரப் பகிர்வை ஆதரிக்கும் இந்த தென்னிலங்கை இடதுசாரி கட்சிகளுடன் தமிழ்த் தரப்பு ஏதாவது இணக்கத்தை உருவாக்கிக்கொள்ள முடியுமா என்றால் அதற்கும் இந்த தமிழ்க் கட்சிகள் தலைவர்கள் தயாரில்லை.

மறுபுறத்தே விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி 13ஆவது திருத்தத்தை இல்லாதொழித்து மாகாண சபை முறையை ரத்துச் செய்ய வலியுறுத்தி இருக்கிறது.

ஜாதிக ஹெல உறுமயவும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணியும் 13 ஆவது திருத்தத்தின் கீழான அதிகாரப்பகிர்வு தேவையற்றது என்கின்றன.

அதிகாரப் பரவலாக்கத்தை ஆதரிப்பதாக கூறும் பொதுபல சேனா 13ஆவது திருத்தம் பலவந்தமாக இந்தியாவினால் திணிக்கப்பட்டதாக கூறியிருப்பதுடன் இதற்காக இந்தியப் பிரதமரிடம் சென்று முறையிடப் போவதாகவும் அறிவித்திருக்கிறது.

இவ்வாறான நிலைமையில், ஒவ்வொரு சிறுபான்மை கட்சியும் தனது இனத்தின் நலனையே முன்நிறுத்தும் முனைப்பிலிருந்து கொண்டு, தனது மக்களின் நலன்களுக்கு விரோதமாகவே செயற்படுவதாக மாறியுள்ளன. இந்த அவலத்தை அவை உணர முடியாமலும் இருக்கின்றன.

இந்த யதார்த்தத்தை புறநிலையிலிருந்து சரியாக நோக்கி தமது கட்சியும் தாமும் எந்த இடத்தில் இருக்கிறோம் என்பதை இந்த சிறுபான்மை கட்சி[illegible] உணர்ந்து கொள்ள வேண்டும்.

தவறின் இந்தக் கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகளை மத்தியில் சாதகமாக்கி அதிகாரத்தை கைப்பற்றிக் கொள்ளும் சந்தர்ப்பவாத தலைமைகளுக்கு இவை தனித்தனியே துணைபோவதும் தவிர்க்க முடியாததாக இருக்கும்.

---

# கே.வி. மகாதேவன் 10



- பி.ஜி.எஸ்.மணியன் -

எப்படி ஏ.பி. நாகராஜனின் நட்பு மகாதேவனுக்கு கிடைத்ததோ அதே போல இன்னொரு நடிகரின் நட்பும் அவருக்குக் கிடைத்தது.

கோவையில் ஒரு சாதாரண மில் தொழிலாளியாக வாழ்க்கையை ஆரம்பித்து சினிமாக்களில் குஸ்தி போடும் ஒரு ஸ்டண்ட் நடிகராக கால் பதித்தவர் அவர். எம்.ஜி.ஆர். படங்களில் சண்டைக்காட்சிகளில் கண்டிப்பாக அவருடன் இவர் மோதுவது உண்டு. ஆரம்ப கால எம்.ஜி.ஆர் படங்களில் இவருக்கும் கட்டாயமாக ஒரு சண்டைக்காட்சி இருக்கும்.

• சினிமாவின் மீது இவருக்கு இருந்த ஆர்வம், எப்படியாவது அதில் சாதிக்க வேண்டும் என்ற வெறி அந்த "ஸ்டண்ட் நடிகரை" சொந்தமாகப் படம் எடுக்கத் தூண்டியது. அதுவும் தனது ஆருயிர் நண்பர் எம்.ஜி.ஆரை கதாநாயகனாகப் போட்டு படம் தயாரிக்க வேண்டும் என்று தூண்டியது.

தனது மனைவியின் நகைகளை விற்றுப் பணமாக்கி போதாத குறைக்கு அவரது ஊரான கோவையில் இருந்த சொந்த பந்தங்கள் ஆளாளுக்கு பணம் கொடுத்து உதவ படத் தயாரிப்பில் இறங்கினார் அந்த ஸ்டண்ட் நடிகர்.

மகாதேவனின் இசையில் வெளிவந்த பாடல்கள் அவரது மனத்தைக் கவர்ந்திருந்தன. ஆகவே தனது முதல் தயாரிப்புக்கு கே.வி. மகாதேவனையே இசை அமைக்க வைத்தார் அவர்.

நண்பருக்கு தோள்கொடுக்க முன்வந்தார் எம்.ஜி.ஆர்.

கதாநாயகியாக நடிக்க பி. பானுமதியை எம்.ஜி.ஆரே பேசி ஒப்பந்தம் செய்து கொடுத்தார். டி.எஸ். பாலையா, கண்ணாம்பா என்று அந்நாளில் மிகப் பிரபலமாக இருந்த நட்சத்திரங்களை தேர்ந்தெடுத்து நடிக்க வைத்து படத்தை தனது தம்பியையே டைரக்ட் செய்ய வைத்தார் அந்த ஸ்டண்ட் நடிகர்.

அந்த ஸ்டண்ட் நடிகர் வேறு யாருமல்ல. சாண்டோ எம்.எம்.ஏ. சின்னப்பா தேவர்.

தேவர் பிலிம்ஸ் நிறுவனத்தின் முதல் தயாரிப்பான அந்தப் படத்தின் பெயர்... "தாய்க்குப் பின் தாரம்".

1956-இல் வெளியான "தாய்க்குப் பின் தாரம்" மகத்தான வெற்றி பெற்று வசூலை வாரிக் குவித்தது.

கே.வி. மகாதேவனை தேவர் பிலிம்ஸ் நிறுவனத்தின் ஆஸ்தான இசையமைப்பாளராகவும் நிலை நிறுத்தியது.




"மனிதனுக்கு மனிதன் விரோதி அல்ல. அவரவர் கொள்கைகள் தான் விரோதி. பழிவாங்கவேண்டும் என்றால் ஒருவனது தீய குணத்தைத் தான் அழிக்கவேண்டுமே தவிர அவனையே அழிக்க நினைக்கக் கூடாது" என்ற கருத்தை உள்ளடக்கிய படம்.

எம்.ஜி.ஆரின் அந்தஸ்தை எந்த அளவுக்கு உயர்த்தமுடியுமோ அதற்காக தன்னால் என்னவெல்லாம் செய்யமுடியுமோ அத்தனையையும் தேவர் இந்தப் படத்தில் செய்தார்.

மாட்டுவண்டி ரேஸ், காளையை எம்.ஜி.ஆர். அடக்கும் ஜல்லிக்கட்டு காட்சி - ஒரு மாஸ் ஹீரோவாக தனது ஆருயிர் நண்பரின் இமேஜை தேவர் உயர்த்திக் காட்டினார்.

பாடல்கள் அத்தனையுமே ஹிட்.

எம்.ஜி.ஆரின் அறிமுகப் பாடலான "மனுஷனை மனுஷன் சாப்பிடுறாண்டா தம்பிப் பயலே. இது மாறுவதெப்போ தீருவதெப்போ நம்ம கவலே." - மகாதேவன் அமைத்த மெட்டு இன்றளவும் ஹிட். பாடலை ஒரு முறை கேட்டுவிட்டு மறுமுறை கேட்கும்போதே வரிகள் மனப்பாடமாகி விடுகின்றன.

அடுத்து சாய்-சுப்புலக்ஷ்மியின் நடனத்துக்கான பாடல்.

"நாடு செழித்திட நாளும் உழைத்திட நல்ல மனம் வேண்டும்" - சுத்தமான கர்நாடக சங்கீதத்தில் அமைத்துக் கொடுத்திருக்கிறார் கே.வி. மகாதேவன்.

ஆபோகி, விஜயநாகரி, காபி ஆகிய மூன்று ராகங்களைப் பயன்படுத்தி ஒரு அருமையான ராகமாலிகைப் பாடல் இசை வீராங்கனை எம்.எல். வசந்தகுமாரி குரலில்.

அடுத்து பி. பானுமதி பாடும் "அசைந்தாடும் தென்றலே தூது சொல்லாயோ" - கேட்பவர் மனங்களை அசைக்கத் தவறாத இந்தப் பாடலை சங்கராபரணம் ராகத்தின் அடிப்படையில் அமைத்திருக்கிறார்.

டி.எம்.எஸ். - பானுமதி குரல்களில் ஒரு டூயட் "ஆகா நம் ஆசை நிறைவேறுமா. கடல் அலையைப் போல மறைந்து போக நேருமா" - இன்று வரை காற்றலைகளில் தவழ்ந்து வந்து நம் காது மடல்களை வருடத் தவறாத பாடல்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் அவ்வையின் பொன்மொழி வீணா?" - டி.எம்.எஸ். பாடும் இந்தத் தத்துவப் பாடலை "மத்யமாவதி" ராகத்தின் அடிப்படையில் விருத்தமாகவும், பாடலாகவும் அமைத்திருக்கிறார் கே.வி. மகாதேவன்.

பாடலாசிரியர் கொடுக்கும் பாடலின் வரிகள் தான் அமைக்கும் மெட்டுக்குள் அடங்காவிட்டால் "வரிகளை மாற்று" என்று பாடலாசிரியருடன் மல்லுக்கு நிற்கமாட்டார். அந்த வரிகளை விருத்தமாக அமைத்து அடுத்த வரிக்கு தாவிவிடுவார் அவர்.

ஆனால் பாடலைக் கேட்கும்போது அவை மெட்டுக்குள் அடங்காத வரிகளாகத் தோன்றாது. விருத்தமாக வரும்போது பாடலின் கருத்து இன்னும் அழுத்தமாக அமைந்து கேட்பவரின் செவிகளுக்கு ரம்மியமாக ஒலிப்பதோடு அல்லாமல் மனதையும் தொட்டு நிற்கும்.

(தொடரும்)


செப்டம்பர் மாதம் முழுவதும் பல லட்சக்கணக்கான "மோனார்க்" வண்ணத்துப் பூச்சிகள் கனடா மற்றும் அமெரிக்காவிலிருந்து பறந்து சென்று மெக்சிகோ மிட்சோ ஆஹான் பகுதியில் உள்ள மரங்களின் உச்சியில் தங்கிவிடுகின்றன. குளிர்காலத்தை கழிக்க இந்த இடத்தை எப்படித் தேர்ந்தெடுத்தன என்பது புரியாத புதிர். இவற்றின் வருகை 1975 இல்தான் கண்டுபிடிக் கப்பட்டது.



ஆனால் ஒரு வருத்தமான தகவல் 10 ஆண்டுகளுக்கு முன் இந்த வண்ணத்துப்பூச்சிகள் சுமார் 22 ஏக்கரில் மரங்களை அடைபோல் ஆக்கிரமித் திருந்தன. ஆனால் இன்றோ இது 2.9 ஏக்கராக குறைந்துவிட்டது.

இதனைப் பார்த்து ரசித்துச் செல்ல வென்றே சுற்றுலாப் பயணிகள் வரு கின்றனர். ஆனால் வண்ணத்துப்பூச்சிகள் இவர்களை கண்டு கொள்வதேயில்லை.

## இப்படி ஓர் அதிசயம்



## தட்டிவானும் யாழ்ப்பாணமும்

- ஐயாத்துரை ஆரூரன்,
கொடிகாமம்.

"என்ன பிளைட் அது... யன்னலெல்லாம் லொட லொடவென்று சத்தம் போட்டுக்கொண்டு... தட்டிவான் மாதிரி!"

ஏ-9 திறக்கப்படாத போர்க்காலத்தில், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற தனது விமானப்பயண அனுபவத்தைத் தான் ஒருவர் இப்படிக் கூறினார்.

தட்டிவான்! - ஏறக்குறைய நினைவிலிருந்து மறைந்து போன ஒரு அடையாளம். ஒரு லொறி போல, அளவில் கொஞ்சம் சின்னதாக இருக்கும். முன்பாகமும், பின்பாகமும் ஒரு லொறியின் பெட்டி போல இரும்புச்சட்டத்தில் மரப்பலகைகளைப் பிணைத்தும் தயாரிக்கப்பட்டிருக்கும்! வித்தியாசம் யன்னல்கள்! அதுவும் கண்ணாடிகள் இல்லாமல்! வெத்திலை சப்பித் துப்ப ஏதுவானது.

மற்றும் வாங்குகள் போன்ற இருக் கைகள்! மிக முக்கியமாக தட்டிவான் களுக்கே உரிய, காற்றை அமுக்கி ஒலிக்கச் செய்யப்படும் பிரத்தியேக ஹோர்ன்களின் "பாப்! பாப்!" சத்தம்!

தட்டிவான்... என்றுதான் அழைப்பார் கள். தட்டி என்று தற்காலிகமாக அமைக் கப்படும் சிறிய கூரையைச் சொல்வார் கள் என்று நினைக்கிறேன்.

யாழ்ப்பணத்தில் சில இடங்களி லும், வன்னியிலும் மட்டுமே பார்த்திருக் கிறேன். இந்த தட்டிவானில் பயணம் செய்தால் நீங்கள் உலகத்தின் எந்த மூலையில் இருக்கும் வாகனங்களிலும் பயணம் செய்யலாம்.

பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம் போகும் வான், காலை 7 மணிக்கு நெல்லியடிச் சந்திக்கு வந்துவிடும். சனமாக இருந்தாலும் கொண்டக்டர் விடமாட்டான் அண்ணை இன்னும் கொஞ்சம் பொறுங்கோ சனம் வரட்டும் என எப்படியும் அரைமணித்தியாலம் அங்கேயே வைத்திருப்பான். சிலவேளை ட்ரைவரே தனக்கு தெரிந்தவர்களுக்கு "இப்போ எடுக்கமாட்டான் சங்குண்ணி கடையில் போய் தேத்தண்ணி குடித்துவிட்டு வாருங்கள்" என்பார்.

சந்தைக்கு காய்கறிகளை ஏற்றிப் போகும் ஆச்சிமார்தான் பெரும்பான்மை யான பயணிகளாக இருப்பார்கள். நடத்துனரின் "ரைட் ரைட்!" சத்தம் கேட்குதோ இலையோ "கெதியா ஏறணை ஆச்சி!", "அந்தப் பெட்டியத் தள்ளி வையுங்கோ அம்மா" என்ற சத்தம் கேட்காமல் அந்தப் பயணங்கள் சாத்தியமில்லை.

இரண்டாயிரம், இரண்டாயிரத்தி யொன்றுக்குப் பிறகு தட்டிவானைப் பார்த்ததில்லை. சில வருடங்கள் கழித்து "2013 இன் ஆரம்பத்தில் கொடி காமச் சந்தையில "மீசாலைப் பலாப் பழமும்", "கொடிகாமத் தேங்காயும்" ஏற்றும் போது பார்த்தது தான்.

யாழில் பார்த்தது போலன்றி கலர் கலராகப் புதுப் பொலிவுடன் ஒருநாள் மாங்குளத்திலிருந்து கனகராயன் குளம் வரை பயணிக்கச் சந்தர்ப்பம் வாய்த்தது! அப்போதுதான் உள்ளே இருக்கையில் அமர்ந்து பயணம். காலி இருக்கைகள் இருந்தது மட்டுமல்ல. உடலும் அதைவிட மனமும் ஏற்கனவே பல பயணங்களினால் நிறையக் களைத்திருந்ததுதான் காரணம்!

உள்ளே சிறுவர்கள் தவிர யாரும் நின்று கொண்டு பயணிக்க முடியாது. இட வசதியும் இருக்காது. தாழ்வான மேற்கூரையும் அனுமதிக்காது! நாலரை ஐந்தடி உயரம் தான் இருக்கும்!

அதனால் பெண்கள், வயோதிபர்கள், சிறுவர்கள் உள்ளே அமர்ந்திருக்க, பின்பக்கம் இருக்கும் அரைக் கதவை திறந்துவிட்டு, சங்கிலியால் பிணைக்கப் பட்டிருக்கும் அந்தப் பலகையின் மேல் நின்று கொண்டு ஆண்கள் கும்பல் பயணிக்கும்!

அது ஒரு த்ரில்லான அனுபவம். பள்ளங்களில் ஏறி இறங்கும்போது குலுங்கிக் குலுங்கி ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்தவாறு.... அது போன்ற ஒரு கிக்கான அனுபவம் வேறு எதிலுமே கிடைத்ததில்லை.

அந்தச் சங்கிலி மட்டும் மாட்டப்பட்டி ருக்கும் கொளுக்கியிலிருந்து கழன்று விட்டால் சங்குதான் என்பது வேறு விஷயம்! ஒரு கதையில் சுஜாதா எழுதியிருப்பார் "மாருதி வேன் ஒன்று குதித்துக் குதித்து ஓடி வந்து நின்றது!" அது எப்படியிருக்கும் என்பதைத் தட்டி வானில் ஒருமுறையாவது சென்றவர்க ளால் இலகுவாக உணர முடியும்.

எமது மண்ணுக்குரிய, கிராமங்களுக் குரிய அடையாளங்களில் ஒன்றாக தட்டி வானையும் கொள்ளலாம். இப்போதும் தட்டி வான்கள் எங்கேயாவது ஓடுகின் றனவா? வளர்ந்த நாடுகளில் பழைய பாணியில், லொறி வடிவிலான பேருந்து களை இப்போதும் பயன்படுத்துவதற் கான அவசியம் என்ன இருக்கிறது? பழமையை நினைவுபடுத்திக் கொண்டி ருப்பதுதான்! அது போல நாங்களும் தட்டிவான்களை பயன்படுத்தலாம்!

ஆனால், சாதாரண போக்குவரத்தில் ஈடுபடுத்துவதைத் தவிர்த்து, பொழுது போக்கான சவாரிக்கு, வெளிநாட்டுப் பிரயாணிகள் மெதுவாகச் சுற்றிப்பார்க்க - புதிய, அழகிய தட்டிவான்களை தயாரித்து உபயோகப்படுத்தலாம். அது எமது பழைய அடையாளங்களை, பாரம்பரிய வாழ்க்கையை நினைவூட்டும் அதேவேளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சொல்லும் ஒரு நல்ல முயற்சியாகவும் இருக்கும்!

## என்ன கொடுமையடா சாமி!



## வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

அரச ஊழியர்களுக்கு ஜனாதிபதி சைக்கிள் விக்கப் போறார் எண்டு சூரியப் பத்திரிகை வெளியிட்ட செய்தியைப் பார்த்து நானும் வியந்துதான் போனன். பிறகு தான் தெரிஞ்சது மானிய விலையிலை சொந்தமாய் சைக்கிள் குடுக்கிறார் எண்டு.

அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயாய்தான் தெரியும். அது போலை புளியங்காயிலிருந்து புண்ணாக்கு வரை வியாபாரம் செய்யிற வியாபாரிக்கு எல்லாம் வியாபாரமாய்த்தான் தெரியும்.

"இரண்டு இலட்சம் பெறுமதியிலை கடையிலை விக்கிற மோட்டார் சைக்கிளை வரிவிலக்களிச்சு ஐம்பதாயிரத்துக்கு வெளிக்களப் பணியிலை ஈடுபடுகிற அரச ஊழியர்களுக்கு அரசாங்கம் குடுக்குது.

இந்த மோட்டர் சைக்கிள் கிடைக்காதோ எண்டு வெளிக்களமல்லாத அரச ஊழியர்கள் ஏங்கிக் கொண்டிருக்கினை. கிடைச்ச விண்ணப்பத்துக்கு மோட்டார் சைக்கிள் குடுக்க முடியாமல் கிடக்குது" எண்டு அரச அதிகாரியொருத்தர் சொன்னார்.

அப்பதான் பார்த்தன் சூரியப் பத்திரிகையின்ரை முகப்பிலை ஒரு படம் போட்டிருக்குது கலரிலை. சரா எம்.பி. கிளிநொச்சியிலை வரட்சியாலை பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு பிளாஸ்ரிக் தொட்டியளைக் குடுக்கிறார் எண்டும், பிரதேச சபையாலை தண்ணி அடிக்க ஏற்பாடு செய்திருக்கெண்டும் செய்தி போடப்பட்டிருந்தது.

படத்தை உத்துப் பார்த்தால் தண்ணித் தொட்டியிலை றோட்டறிக் கழகம் எண்டு எழுதியிருக்குது. அதை மறைக்காமல் பேப்பரிலை போட்டிட்டினை. என்ரை பெருமானே! இப்பிடியெல்லாம் இரவல் சீலையிலை நல்ல கொய்யகம் விட முடியுமே!

ஒரு பக்கம் அரசாங்கம் குடுக்கிற உதவியளுக்கு நாக்கு வழிக்கிறது. மறுபக்கம் வழியில் தேங்காயை எடுத்து தெருவிலை அடிச்சுப் போட்டு பில்டப் காட்டிறது. என்ன கொடுமையடா சரவணா!


இப்பிடித்தான் விக்கியண்ணையும் செய்யிறார். ஏழாலையிலை இருக்கிற ஒரு புலம்பெயரிக்கு இங்கை உதவி செய்ய ஆசை வந்தது. அதை தம்பி கஜதீபனிட்டைச் சொன்னார். வலி.வடக்கு, வலி.தெற்கு பிரதேசத்திலை உதவி செய்ய எத்தினையோ இடமிருக்கு. அதை விட்டிட்டு வசதியாய் இருக்கிற மாநகர சபை நூலகத்தைத் தம்பி தெரிஞ்செடுத்தார்.

ஈ.பி.டி.பி.காரர் ஆட்சி செய்யிற மாநகர சபைக்கு உதவி செய்தால்தானே ஒரு "தில்" இருக்கும். எனவே, ஒரு எழுநூறு யூரோவைக் குடுத்து ஒரு போட்டோக் கொப்பி மெசினை வாங்கியாச்சு. அதைக் குடுக்கத் திருக்கரம் வேணுமல்லே. அதுக்குத்தான் எங்கடை முதலமைச்சரும், உள்ளூராட்சி அமைச்சருமான விக்கியண்ணையைத் தெரிஞ்செடுத்து, அவரது கையாலேயே குடுத்து, படமும் எடுத்து பேப்பரிலை போட்டாச்சு.

சாதாரணமாக கஜதீபனோ, விக்கி அண்ணையோ தங்கடை பன்முகப்படுத்தப்பட்ட ஒதுக்கீட்டிலை கிள்ளித் தெளிக்கக் கூடிய சின்ன உதவியையே ஆற்றேன் இரவல் சீலையிலை செய்து அசத்தியிருக்கினை. அதுமாதிரித்தான் அளவெட்டியிலை ஆடு குடுத்ததும்.

ஆட்டைக் குடுக்கிற படம் பேப்பரிலை வந்த போது பார்க்கச் சிரிப்பாய்தான் இருந்தது. ஆட்டை வாங்கிறவர் ஆட்டைப் பிடிச்சுக் கொண்டு நிக்கிறார். ஆட்டைப் பிடிச்சுக் கொண்டு நிக்கிறவரின்ரை தோளைப் பிடிச்சுக் கொண்டு விக்கியண்ணை நிக்கிறார். ஆட்டிலை தொட்டு கை கழுவிற வேலையில்லை.

அது சரி. எம்.பி.மார் மற்றும் மாகாண சபை அமைச்சர்களுக்கு அரசாங்கம் வரிச்சலுகை பேர்மிட்டுகள் தருகுதல்லே. ஒவ்வொரு முறையும் தார பெர்மிட்டுகளை கனபேர் விக்கிறது வேற சங்கதி. அப்பிடித் தாற வேளையிலை அரசாங்கம் வாகனம் விக்குது எண்டு பேப்பரிலை போட்டீங்கள் எண்டால் எத்தினை வாகனங்கள் கிடைச்சுது எண்டு சனங்களுக்குத் தெரிய வரும்.



கதையோடை கதையாக சனங்களைப் பேய்க்காட்டிற கதையொண்டை மாகாண சபை உறுப்பினர் ஒருத்தர் உதிர்த்திருந்ததையும் நினைச்சுச் சிரிக்கலாம். மாகாண அமைச்சர்களுக்கு வாகனங்கள் அரசாங்கம் குடுத்ததல்லே. அந்த நேரம் அவர் சொன்னார். "மாநகர சபை முதல்வர் மக்களின்ரை வரிப் பணத்திலை வாகனம் வாங்கியிருக்கிறார்... நாங்கள் மக்களின்ரை வரிப்பணத்திலையில்லை அரசாங்கத்திட்டையிருந்து வாங்கியிருக்கிறம்..." எண்டு.

அரசாங்கம் மக்களின்ரை வரிப் பணத்திலை இயங்கிறது எண்டது தெரியாத சீமானுகளையும் நாங்கள் மாகாண சபைக்குத் தெரிவு செய்திருக்கிறமல்லே!

வினையை விதைச்ச மகாஜனங்களே! அதை அறுவடை செய்கிறீர்கள் இப்போது.




# யார் கொலையாளி?

## துப்பறியும் சிறுகதை

(சென்ற வாரத் தொடர்ச்சி....)

இன்ஸ்பெக்டர் நல்லசிவம் பார்வையாலேயே அந்த இடத்தை மிகக்கவனமாய் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார். செல்லும் வழியெங்கும் சிமெந் கற்களில் நடைபாதை, அளவாக சீராக வெட்டப்பட்ட புற்கள், அடர்ந்து வளர்ந்த செடிகள் அனைத்தும் கூட சீராக அளவாக அழகாக வெட்டப்பட்டிருந்தமை அந்த ரிசார்டின் பராமரிப்பை வியந்து பார்க்க வைத்தது. ஒரு பெரிய தென்னந் தோப்பை குடைந்து, வேண்டிய இடங்களில் தென்னைமரங்களை அகற்றி சீராக்கி ரிசார்ட் கட்டியது போல் நேர்த்தியாக அழகாக இருந்தது.

இருபதடி தூரத்தில் வலது புறம் ஒரு நீச்சல்குளம். அடுத்து நடைபாதை. இடதுபுறமாக அந்த செயற்கை நீர்வீழ்ச்சி. அதில் சிறிய தாய் பாலம் போல அமைத்து, அதன் கீழே சிறியளவில் நீர் தேக்கி, அதில் அழகான தங்க நிறம், கறுப்பு நிறங்களில் மீன்களை அலைய விட்டிருந்தனர். அந்த மீன்கள் நன்றாய் தின்று கொழுத்து சின்ன சைஸ் திமிங்கிலம் போல காட்சியளித்தன. ஒரு விஷயம் தெளிவாகத் தெரிந்தது. ரிசார்டில் அன்றைய தினம் அதிகம் பேர் தங்கியிருக்கவில்லை. ஏனெனில், இந்நேரம் அப்படியிருந்தால், பெருங்கூட்டம் கூடியிருக்கும். விஷயம் வெகு சீக்கிரம் வெளியில் பரவியிருக்கும். விசாரணையை மேற்கொள்வது சற்று கடினமாயிருக்கும். அங்கே அந்த சின்ன பாலத்தில் ஒரு பெண்ணின் உடல் கிடந்தது.

ஐந்தரை அடி உயரம் இருக்கலாம். அந்தச் சின்ன பாலத்தில் ஏனோதானோவென்று விழுந்து கிடந்திருந்தாள். தலை பக்கவாட்டில் சரிந்து கிடந்தது. வெள்ளை நிறத்தில் ஒரு டாப்ஸும், நீல நிறத்தில் பெல் பாட்டம் பாண்டும், ஒயிலாய் நடக்க ஏதுவாய் ஒரு ஹை ஹீல்ஸ் செருப்பும் அணிந்திருந்தபோதிலும் கால்கள் சற்றே அகலமாய் விலகிக் கிடந்தன. கொஞ்சம் ஆபாசமாய் இருந்தது ஏனோ, அந்த நொடியில், ஆபாசம பார்ப்பவர் பார்வையை பொருத்த விஷயமென்று தோன்றச்செய்தது. அவளது வலதுபுறத்து வயிற்றுப் பகுதியில் ரத்தம் கசிந்து அந்த பாலத்திலும் வழிந்து காய்ந்து பரவிக்கிடந்தது. பக்கத்திலேயே அவளின் வெள்ளை நிற தோல் பை கிடந்தது. அதன் எல்லா ஜிப்களும் மூடியிருக்க, பக்கவாட்டில் இருந்த சின்ன ஜிப் மட்டும் திறந்தே இருந்தது. லட்டியால் அதை மெதுவாக நெம்ப, உள்ளிருந்து ஒரு விசிட்டிங் கார்டு எட்டிப்பார்த்தது. அதன் இடது ஓரத்தில் கல்பனா என்று ஆங்கிலத்தில் இருக்க, அதை எடுத்து ஒரு முறை பார்த்துவிட்டு சட்டைப் பையில் போட்டுக் கொண்டார்.

கொஞ்ச தூரத்தில் ஒல்லியாய் உயரமாய் (ஆறடி இருக்கலாம்), மாநிறத்துக்கும் சற்றே அதிகமான சிவப்பில், சிவப்பு மற்றும் ஆரஞ்சு நிறத்தில் கட்டம் போட்ட சட்டையும், டெனிம் ப்ளூவில் ஜீன்சும், வெள்ளை நிறத்தில் ஒரு ஷூவும் அணிந்திருந்த ஒருவன் ஒரு தென்னை மரத்தடியில் நாற்காலி ஒன்று போடப்பட்டு உட்கார்ந்திருக்க, அவனருகே இருவர் காவலுக்கு நிற்கும் தோரணையில் நின்றிருந்தனர். பிரதீபன் தொடர்ந்தார.

"சார், அந்தப் பொண்ணு அதோ கிடக்கு சார். அதோ அங்க அந்த தென்னைமரத்துக்கு பக்கத்துல உட்காந்திருக்கானே, அவனோடதான் சார் வந்தா. அவங்க வந்தப்போவே எனக்கு க்றுக்னு பட்டுச்சு சார். ஏதோ நடக்கபோகுதுன்னு. ஆனா, இவன் கொலைபண்ணுவான்னு நினைக்கவே இல்ல சார். கொலை பண்ணதையும் பண்ணிட்டு இல்லங்கறான் சார் அவன். நீங்களே கேளுங்க சார்" எழுதிவைத்த டயலாக்கை மூச்சுவிடாமல் சொல்வதுபோல் சொல்லிவிட்டு அமைதியானார் பிரதீபன்.

"அவந்தான் கொலை பண்ணினான்னு நீங்க எப்படி சொல்றீங்க. பாத்தீங்களா?". "இ.. இல்லசார். அவனாதான் சார் இருக்கும் சார். அவனோடதான் சார் வந்தா. ரெண்டு பேரும்

பக்கத்திலேயே அவளின் வெள்ளை நிற தோல் பை கிடந்தது. அதன் எல்லா ஜிப் களும் மூடியிருக்க, பக்கவாட்டில் இருந்த சின்ன ஜிப் மட்டும் திறந்தே இருந்தது. லட்டியால் அதை மெது வாக நெம்ப, உள்ளிருந்து ஒரு விசிட்டிங் கார்டு எட்டிப்பார்த்தது.

சேர்ந்து தான் சார் சாப்பிட்டாங்க. அடிச்சிக்கிட்டு, கிள்ளிக்கிட்டு ஒரே கும்மாளம் தான் சார். அப்புறம் நான் கவனிக்கல சார். திடீர்னு பாத்தா அவ செத்துக் கிடக்கிறா. ஒரு ஊகம் தான் சார். சாரி சார்" கிட்டதட்ட அவர் பிதற்வதாகவே தோன்றியது நல்லசிவத்துக்கு.

நல்லசிவம் கையசைத்து பிரதீபனை சற்று தொலைவிலேயே நிற்க வைத்துவிட்டு, மெதுவாக அந்த பெண்ணின் பிரேதம் கிடந்த இடத்தை நெருங்கினார். இரண்டு நிமிடங்கள் அங்கே நின்று அந்தப் பெண்ணை தீர்க்கமாய்ப் பார்த்தார். அவள் முகம் வலியைத் துய்த்துவிட்டு கிடந்தது போலிருந்தது. மல்லாந்து கிடந்திருந்தாள். அவளது வலதுபக்க வயிற்றுப்பகுதியில் கத்தியால் குத்தப்பட்டது போலிருந்தது. வெள்ளை டாப்ஸில் அவளின் இரத்தக்கறை அடர்த்தியாக இருந்தது. ரத்த சேதம் அதிகமாயிருப்பதைப் பார்க்கையில் கத்தி மிக ஆழமாக பாய்ந்திருக்குமென்று அவரால் யூகிக்க முடிந்தது. பார்த்துவிட்டு நல்லசிவம் திரும்பி அவனை நோக்கி. நடந்தார். இவர் தன்னை நோக்கி வருவதை கவனித்துவிட்டு தென்னைமரத்தடியில் அமர்ந்திருந்தவன் எழுந்து கொண்டான். நல்லசிவம் அவனருகே சென்று நின்றுவிட்டு தன் இரண்டு கைகளையும் பின்னே கட்டிக்கொண்டு விரைப்பாய் நின்றுகொண்டார். "உன் பேரென்ன?". "ரமேஷ் சார்" பயந்த தோரணையில் அவன் பதிலளித்தான். கொஞ்சம் விட்டாலும் அழுது விடுவான் போலிருந்தது.

கையிலிருந்த லட்டியை விரல்களால் சுழற்றியபடி பின்னே கட்டிய கைகளை நல்லசிவம் விடுவிக்க லட்டி தவறி அவருக்கும், ராமேஷ்க்கும் இடையில் நடுநாயக்கமாய் விழுந்தது. அந்தப் பையன் உடனே குனிந்து தன் வலது கையை நீட்டி எடுத்து பணிவாய் அவரிடம் நீட்டினான். அந்த லட்டியை அவனிடமிருந்து வாங்கிக்கொண்டார் நல்லசிவம். அவன் அப்படிச் செய்தது, பதட்டத்திலும் அவன் சற்று நிதானத்தில் இருப்பதாக அவருக்குத் தோன்றச்செய்தது.

"இந்தப் பொண்ணு உனக்கு என்ன வேணும்? உன் லவ்வரா?". "அய்யோ இல்ல சார். நாங்க / ப்ரண்ட்ஸ் சார். ஒரு ட்ரீட்க்காக வந்தோம் சார்". "வேலை பாக்கறியா?" "ஆமா சார், நவாடெல்னு ஒரு சா∴ப்ட்வேர் கம்பெனில சார். அவளும் அங்கதான் சார் வேலை பாக்குறா. நாங்க கல்லீக்ஸ் சார். நான் எதுவுமே பண்ணல சார். ரெஸ்ட்ரூம் போய்ட்டு திரும்பி வந்தா இப்படி கிடக்குறா சார். யார் பண்ணாங்கன்னு தெரியல சார். ஹோட்டல்காரங்கலாம் என் மேல பழி போடுறாங்க சார்" என்றுவிட்டு அழத்தொடங்கினான் அவன்.

"ஹ்ம்ம்..." என்றபடி நல்லசிவம் திரும்பி நடக்க, "அய்யோ, சத்தியமா சார், நான் ஒண்ணும் பண்ணல சார்" என்று அவன் மேலும் விம்முவதை இப்போது அவருக்குப் பின்னால் தெள்ளத்தெளிவாய்க் கேட்க முடிந்தது.

"சார், மாணிக்கம் சார்" என்றபடி நல்லசிவம் அருகில் வந்து விரைப்பாய் சல்யூட் அடித்து நின்றார் கானஸ்டெபிள் மாணிக்கம்.

"மாணிககம், ∴போட்டே செஷன் முடிஞ்சிடுச்சில? ∴பாரென்ஸிக் எப்படி போகுது? போஸ்ட் மார்ட்டம்க்கு சொல்லியாச்சா?" "சார், ∴போட்டோலாம் முடிஞ்சது சார். ஜி.ஹெச் லேர்ந்து நம்ம தீந்தயால் தான் சார்" "ஹ்ம்ம் ..." என்றுவிட்டு சட்டைப்பையிலிருந்து பத்திரப்படுத்திய விசிட்டிங்கார்டை உருவி அவரிடம் தந்துவிட்டு, அவரின் காதில் கிசுகிசுப்பாய் ரமேஷ் காதில் கேட்காத வகைக்கு ஏதோ சொல்ல, கேட்டுவிட்டு, "சரி சார்" என்றுவிட்டு நகர்ந்தார் மாணிக்கம். "சார்". பவ்யமாய்க் கூப்பிட்டபடி நல்லசிவத்தை அனுகினார் பிரதீபன்.

பிரதீபனின் முகபாவனை ஏதோ ரகசியம் சொல்ல எத்தனிப்பதான தோரணையில் இருப்பதை உணர்ந்து, தான் ரமேஷ் அருகில் நிற்பதை அப்போதைக்கு தவிர்க்க முனைந்தவராய், பிரதீபனுடன் அங்கிருந்து விலகி நடந்தபடியே "ஹ்ம்ம் சொல்லுங்க" என்றார். "சார், கண்டிப்பா அந்தப் பையன் தான் சார் செஞ்சிருப்பான். வரும்போதே குஷாலா தான் சார் வந்தாங்க. ஒருத்தரை ஒருத்தர் ஒரசிண்டு, பாக்கவே கொஞ்சம் அப்படி இப்படின்னு தான் சார் வந்தாங்க. அவனாதான் சார் இருக்கும். சார், அந்த பையன ஸ்டேஷன்ல வச்சி விசாரிச்சீங்கன்னா...."

"மிஸ்டர் பிரதீபன்" சற்றே வெடுக்காய் இடைமறித்தார் நல்லசிவம். "நீங்க எப்படி இவ்ளோ "யூரா சொல்றீங்க. கண்ணால பாத்தீங்களா?"

"இ .. இல்ல சார், ஒரு யூகம் தான். அதுவும் இல்லாம, நேரமாச் சின்னா பிரஸ் அது இதுன்னு வந்துடும். அப்பறம் ரிசார்ட் பேரு கெட்டுப்போச்சின்னா எங்க பொழைப்பு நாறிடும் சார். அதனால தான் சா.." நல்லசிவம் அவசரமாக இடைமறித்தார். "கேஸ்னு வந்துட்டா இதையெல்லாம் ∴பேஸ் பண்ணி தான் ஆகணும். கோஆப்ரேட் பண்ணுங்க. முதல்ல போய், போன ரெண்டு நாள்லேர்ந்து இப்போவரை யாரெல்லாம் ரிசார்க்குள்ள வந்தாங்க, யார் மூலமா வந்தாங்க, மெம்பர்ஷிப் இன்∴பர்மேஷன், கான்டாக்ட் டீடெய்ல்ஸ், எப்போ வகேட் பண்ணி போனாங்கங்கற லிஸ்ட் ப்ரிபார் பண்ணி கொண்டுவாங்க."

"சரி சார். சாரி சார்" தன்னுடைய வேண்டுகோள் செல்லாது போனதிலும் சற்றே பணிந்து போக வேண்டி வந்ததிலும் அவருடைய ஏமாற்றம் எதிர்பார்த்த ஒன்றுதான் என்பதாக இருந்தது அவர் அவசரமாக ஆமோதித்து மன்னிப்பு கேட்டதில். அதே வேகத்தில் திரும்பி ரிசப்'ன் நோக்கி நடந்தார் பிரதீபன். நல்லசிவம் கையிலிருந்த லட்டியை ஒரு கையால் (வலது கை) சுழற்றியபடி சிறிது நேரம் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருந்தார். உச்சி வெய்யில் தென்னை மரக்கீற்றுகளினூடே வடிகட்டி இறங்கிக்கொண்டிருந்ததில் அத்தனை உஷ்னமாக இல்லை. ரிசார்ட் கதவுகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மூடப்பட்டிருந்தன.

(தொடரும்....)



# சைவத்துக்கும் தமிழுக்கும் பெருமை சேர்த்தவர் கவிஞர் குகதாசன்

## கலாநிதி திருநாவுக்கரசு தெரிவிப்பு

(யாழ்.நிருபர்)

சைவ நாயன்மார்கள் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் உள்ள சைவ ஆலயங்கள் மீது தேவாரம் பாடி எவ்வாறு தமிழ் மொழிக்கு வளம் சேர்த்தார்களோ அவ்வாறே இலங்கையில் உள்ள அறுநூறுக் கும் மேற்பட்ட திருத்தலங்கள் மீது திருப்புகழ் பாடி எமது நாடடில சைவத்துக்கும் தமிழுக்கும் பெருமை சேர்ந்தவர் நாயன்மார்கட்டு கவிஞர் குகதாசன் ஆவார்.

இவ்வாறு தெய்வத்தமிழிசைக் கவிஞர் தேசமா்னிய குகதாஸன் நாயமைார்கட்டு இராசையா குகதாஸன் புவனேஸ்வரி தம்பதிகளின் மணிவிழா நிகழ்க ளுக்கு தலைமைதாங்கி தலைமையுரை நிகழ்த்திய யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரியின் முதலாவது பீடாதிபதி கலாநீதி திருநாவுக்கரசு கமலநாதன் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற இந் நிகழ்வில் சமலநாதன் தொடர்ந்து தெரிவிக்கையில்:

இளமையிலேயே கவிபுனையும் ஆற்றல்மிக்க குகதாசனை மேலும் மெருகூட்டி வளர்த்தவர்கள் வீரபணி ஐயரும் பேரறிஞர் சொக்கனும் ஆவர்.

தனக்குக்கிடைத்த கவி ஆற்றலை இளைவன் புகழ் பாடி இன்புற்றுவாழ்ந்திட முடிவு செய்தார். மரபுக்கலைத்துறையில் தடம் பதித்து குருமூர்த்திகளின் சிறப்புக்களையெல்லாம் மெய்யுருகிப் பாடிநின்றார். நல்லைநகர் நாவலரின் வரலாற்றைத்தொடராக கவிதை வடிவில் தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தந்தார்.

நல்லூர், செல்வச்சந்நிதி, மாவட்டபுரம் கந்தன் மீதெல்லாம் சந்தத்திருப்புகழ் பாடிநின்றார்.

நீறணிந்த நெற்றியுடன் என்றும் இன்முகத்துடனும் இனிமை ததும்ப உரையாடி மகிழும் கவிஞரின் உயர்வுக்குக்காரணம் தான் பிறந்த மண்ணையும் பெற்றோரையும் மறவாது தனது பெயருடன் இணைந்து மகிழ்வதாகும்.

இன்றைண விழாவிலே கவிஞரால் ஐநூற்றி அறுபது தலங்கள் மீது பாடப்பட்ட திருப்புகழ் வடிவிலான தெய்வத்தமிழிசைத் தேனமுதம்' என்னும் நூல் சண்முகப்பிரசாதமாகவும், மணிவிழா மலருக்கு குப்பிரசாதமாகவு ம் வெளிவருவது மகிழ்ச் சிக்குரியதே எனவும் குறிப்பிட்டார்.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேஸ்தான தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன், வியாவின் ஐயனார் ஆலய அறங்காவலர் மகாராணி க.சோமசேகரம், சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல், யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் தி.வேல்நம்பி பேராசிரியர் ரி. வேதநாதன் உட்பட மற்றும் பலரும் வாழ்த்துரை வழங்கினர். (10)

# மனிதன் மனிதத்துவத்துடன் வாழ காந்தீயத்தைக் கற்க வேண்டும்

## சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் தெரிவிப்பு

(யாழ்.நிருபர்)

எமது வாழ்வில் ஏற்படும் எந்தத் துன்பத்தையம் போக்கிக்கொள்வதற்கு நாம் காந்தீயத்தைக் கற்றுகீ கொள்ள வேண்டும். ஒரு மனிதன் மணிதத்துவத்துடன் மனிதனாக வாழ்வதற்கு காந்தியின் கொள்கைகள் உறுதுணையாக உள்ளன.

இவ்வாறு அகில இலங்கை காந்திசேவா சங்கம் நடத்திய 145 ஆவது காந்தி ஜெயந்தி மற்றும் சர்வதேச அஹிம்சை தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம் மற்றும் சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் குறிப்பிட்டார்.

இலக்கம் 774 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அகில இலங்கை காந்தி சேவா சங்க யாழ் மாவட்டப் பணிமனையில் அகில இலங்கை காந்திசேவா சங்கத்தலைவர் தி. இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலாநிதி ஆறுதிருமுருகன் மேலும் பேசுகையில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடிய காந்திக்கு பிரித்தானியாவில் மட்டுமன்றி உலகின் பல நாடுகளிலும் சிலை வைத்துள்ளார்கள்.

பெற்ற தாயின் வாக்கை இறுதிவரை சந்திய வாக்காக கடைப்பிடித்தவர் காந்தி தான் செய்த தவறைக்கூட வெளியில் பகிரங்கமாக வெளிப்படுத்தியவர் உள்ளதை உள்ளவாறே கூறுகின்ற பண்பு அவரை மகாத்மா ஆக்கியது அவர் சிறந்த அரசியல்வாதி யதார்த்தவாதி சமூக சீர்திருத்தவாதி, விடுதலை விரும்பி அகிம்சாவாதி.

காந்தி சிந்தனையால் கவரப்பட்ட கல்விமான்கள் எல்லோருக்கும் கல்வி என்ற கொள்ளையை அமுல்படுத்தினார்.

கோட்சே, காந்தியைச் சுட வந்தபோது அவனைப்பார்த்து வணக்கம் செலுத்தியவர் காந்தி அவரிடமிருந்து அரசியலை மட்டுமன்றி வாழ்வியலையே நாம் கற்றுக்கொள்ள முடியும் என்றார் ஆறுதிருமுருகன்.

காந்தீயம் பத்திரிகை ஆசிரியர் எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார். மூத்த காந்தீயத் தொண்டர் திருமதி சரஸ்வதி தம்பிப் பிள்ளை, யாழ். பல்கலைக்கழக மெய்யியல்துறை விரிவுரையாளர் ந.சிவகரன், தலைவர் கா. கார்த்திகேசு உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினர்.(10)

# புலமைப்பரிசில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிப்பு



(தென்மராட்சி)

ஆரம்பக் கல்விப் பிரிவினரின் “விழுமியக் கல்வி” நூல் வெளியீடும் புலமைப் பரிசில் பரீட்சை மாணவர், ஆசிரியர், அதிபர் கௌரவிப்பும் அண்மையில் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி அருணாசல மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சர் த. குருகுலராஜா கலந்து சிறப்பித்தார் இந் நிகழ்வில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 130 மாணவர்களுக்கு பதக்கம், சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட துடன் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

# பதிவிறக்கப் பெட்டகம்

ஒப்பீட்டளவில், இன்றைய சூழலில் சிங்கள மக்களின் இனவுணர்வுக்கு நெருக்கமானதொரு தலைவராக ஜனாதிபதி ராஜபக்ஷவே இருக்கிறார். இன்றும் தெற்கில் ஒரு ராஜபக்ஷ அலைதான் இருக்கிறது. அவருக்கு நிகராக ரணில் அலை, சந்திரிகா அலை அல்லது சோபித அலையோ இல்லை. ராஜபக்ஷவிற்கு எதிராக சிங்கள மக்கள் மத்தியில் ஒரு அலையை தோற்றுவிக்கக் கூடிய தலைவர்களாக எவரையும் அடையாளம் காண முடியவில்லை. இந்த பின்புலத்தில் நோக்கினால் ஆட்சிமாற்றம் ஒன்று ஏற்படுவதென்பது, பலரும் விவாதிப்பது போன்று எளிதான ஒன்றல்ல.

ஜனாதிபதி ராஜபக்ஷ சிங்கள மக்களின் உணர்வுகளுக்கு நெருக்கமான தலைவராக இருப்பதற்கு பிறிதொரு காரணமும் உண்டு. ராஜபக்ஷ உலக நாடுகள் பலவற்றாலும் குறிப்பாக ஒட்டுமொத்த மேற்குலகாலும் பயங்கரவாத அமைப்பாக பட்டியலிடப்பட்டிருந்த புலிகள் அமைப்பை இலங்கைக்குள் இல்லாமலாக்குவதில் வெற்றிபெற்றார். அந்த வெற்றி, கட்சி பேதங்களை கடந்து சிங்கள மக்களால் உளமார அனுபவிக்கப்பட்டது. இனவுணர்வினால் வழிநடத்தப்படும் மக்கள் இப்படியான வெற்றிகளை கொண்டாடுவது இயல்பான ஒன்றே! இதே வெற்றியை பிரபாகரன் பெற்றிருந்தால் வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் அதனை உளமார கொண்டாடியிருப்பர்.

ஆனால், சிங்கள மக்கள் உளமார அனுபவித்த ஒன்றின் மீதுதான் தற்போது அமெரிக்காவின் தலைமையிலான மேற்குலக நாடுகள் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றன. இது சாதாரண சிங்கள மக்களை பொறுத்தவரையில் புலிகளை இல்லாதொழித்த எங்கள் தலைவர் மீது அந்நிய சக்திகள் வேண்டுமென்றே பழி போடுகின்றன, எங்கள் நாட்டுக்கு எதிராக சதிசெய்ய முயல்கின்றன, என்றவாறான பார்வையே கொடுக்கும். எனவே, எங்கள் தலைவரை நாங்கள் இந்த நேரத்தில் கைவிடுவது சரியானதுதானா என்னும் தார்மீக கேள்வியை எழுப்பும்.

ஜனாதிபதி ராஜபக்ஷ இந்த இனவுணர்வை சரியாக கையாளுமிடத்து, அவரை விழுத்துவது இயலாத ஒன்றாகவே அமையும். ஒருவேளை யுத்தத்திற்குப் பின்னரான சூழலில், மேற்குலக நாடுகள் இவ்வாறான அழுத்தங்களை முன்வைக்காது போயிருந்தால் சாதாரண சிங்கள மக்கள் பெருமளவிற்கு யுத்த வெற்றியை மறந்து போயிருப்பர். ஆனால், இன்றும் யுத்தத்தை ஞாபகப்படுத்திக் கொண்டிருப்பது ஐக்கிய நாடுகள் சபையும், மேற்குலக அமைப்புக்கள் மற்றும் தமிழ் புலம் பெயர் அமைப்புகளும்தான். **– யதீந்திரா**

மேற்கத்திய ஊடகவியலாளர்கள் பரப்பும் பொய்கள், உலகம் முழுவதும் மிக வேகமாக பரவுகின்றன. பல அப்பாவிகள் அவற்றை உண்மை என்று நம்பி, இன்று வரைக்கும் இரை மீட்டுக் கொண்டிருக்கிறார்கள். அரசியல் பிரச்சார நோக்கத்திற்காக, இறந்தவர்களின் எண்ணிக்கையை பல மடங்கு மிகைப் படுத்திக் கூறுவது மேலைத்தேய ஊடகங்களில் சர்வசாதாரணமாக நடக்கும் ஒரு விடயம்.

**சில உதாரணங்கள்:**

– 1956 ஆம் ஆண்டு, ஹங்கேரியில் நடந்த மக்கள் எழுச்சியை அடக்குவதற்காக, சோவியத்–வார்சோ ஒப்பந்த நாடுகள் எடுத்த இராணுவ நடவடிக்கையில் 25000 பேர் கொல்லப் பட்டதாக தெரிவிக்கப் பட்டது. பல வருடங்களுக்குப் பின்னர் நடந்த ஆய்வுகளுக்குப் பின்னர், அதிக பட்சம் 3000 பேரளவில் மட்டுமே கொல்லப் பட்டிருக்கலாம் என திருத்தப் பட்டது.

– 4 ஜுன் 1989, சீனாவில் தியன் அன் மென் சதுக்கத்தில் நித்திரையில் ஆழ்ந்திருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது, இராணுவ தாங்கிகள் ஏறி நசித்ததால், ஏழாயிரம் பேர் இறந்ததாக அன்று அறிவிக்கப் பட்டது. ஆனால், பின்னர் வெளியான அம்னெஸ்டி இன்டர்நேஷனல் அறிக்கையின் படி, தலைநகரம் பெய்ஜிங் முழுவதும் நூற்றுக்கும் குறைந்த எண்ணிக்கையில் தான் பலியாகி உள்ளனர். அன்று, சீனா முழுவதும் எடுக்கப்பட்ட நடவடிக்கையில் கொல்லப் பட்டவர்களின் எண்ணிக்கையையும் சேர்த்துக் கொண்டால் ஓராயிரம் வரும்.

– ருமேனியாவில், (செளசெஸ்கு அரசு வீழ்ச்சியடைந்த காலத்தில்) நாலாயிரம் பேர் இராணுவத்தால் கொன்று புதைக்கப் பட்டதாக மேற்கத்திய ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர். ஆனால், உண்மையில் அன்று வீதியில் நின்ற பத்துப் பேரளவில் தான் கொல்லப் பட்டனர்.

(நன்றி: Journalistiek, Achtergronden, genres, vaardigheden; Niko Kussendrager, Dick van der Lugt)

**– கலையரசன்.தா**





யாழ்.ரோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் தலைமைத்துவ கருத்தரங்கு அண்மையில் யாழ்.இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது நிகழ்வில் பிரதிநிதிகள் நிற்பதையும், பரிசில் வழங்கப்படுவதோடு, சான்றிதழ்கள் வழங்கப்படுவதையும் காணலாம். (48)

# இலங்கையின் வரலாற்றில் முதற்தடவையாக

# வடக்கில் 20ஆயிரம் பேருக்கு காணி அனுமதி

## - நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் மகிழ்ச்சி -

(யாழ்ப்பாணம்)



வடமாகாண மக்களைப் பொறுத்தவரை இன்று ஒரு மகிழ்ச்சியான, முக்கியமான நாள இலங்கையின் வரலாற்றில் முதற்தடவையாக வடக்கு மக்களுக்கு ஒரே நாளில் ஒரே மேடையில் 20 ஆயிரம் பேருக்கு காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள நிகழ்வு இடம் பெற்றுள்ளது என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் வட மாகாணத்தைச் சேர்ந்த 20 ஆயிரம் பேருக்கு ஜனாதிபதி தலைமையில் காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக வடக்கில் காணி கச்சேரிகள் நடத்தப்படாமலும் மக்களின் காணிப் பிணக்குகள் தீர்க்கப்படாமலும் பல்வேறு சிரமங்கள் மற்றும் வசதிவாய்ப்புக்களை பெறமுடியாமலும் மக்கள் வாழ்ந்து வந்த வரலாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ அரசாங்கத்தினால் தீர்க்கப்பட்டுள்ளது. காணி ஆவணம் இன்றி வாழ்ந்து வந்த மக்கள் இன்று முதல் சொத்து ஒன்றுக்கு உரிமையாளராக மாறுகின்றனர். இது எங்கள் மக்களை பொறுத்தவரை மிகப் பெறும் வரப்பிரசாதம்.

பிரதேச செயலக பிரிவுகள் தோறும் காணிக் கச்சேரிகள் நடத்தப்பட்டு மக்களின் காணிப் பிணக்குகள் தீர்க்கப்பட்டு காணி ஆவணங்கள் வழங்கும் நிகழ்வு தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இங்கு எதுவுமே நடக்க வில்லை என்று பொய் பிரசாரங்களை மேற்கொண்டு வருபவர்களுக்கு இந்த நிகழ்வும் ஒரு எடுத்துக்காட்டு. எங்கள் பிரதேசங்கள் மீள்குடியேற்றத்தின் பின்னரான நான்கு ஆண்டுகளில் அபிவிருத்தியில் பெருமளவு முன்னேற்றத்தை எட்டியுள்ளது

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக வடக்கில் உள்ள காணிப் பிணக்குகளை தீர்ப்பதற்கு ஜனாதிபதி அவர்களின் வழிகாட்டலில் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் அவர்களும் பிரதி அமைச்சர் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அமைச்சு அதிகாரிகளை பெரும் ஒத்துழைப்புகளை வழங்கி வருகின்றார்கள் அதற்காக கிளிநொச்சி மாவட்ட மக்கள் சார்பாக, அமைச்சர் உள்ளிட்ட அனைவருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் வன்னியில் மிக முக்கிய பிரச்சினையாக திட்டக் காணிகளில் குடி யிருக்கும் மக்களின் பிரச்சினைகள் காணப்படுகிறது. இந்த பிணக்கில் ணையும் தீர்ப்பதற்கு இந்த அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. விரைவாக பல்வேறு திட்டங்களின் ஊடாக வழங்கப்பட்ட காணிகளில் நீண்ட காலமாக குடியிருக்கும் மக்களின் காணி பிணக்குகளும் தீர்க்கப்பட்டு அவர்களுக்கும் சொந்தமாக குடியிருக்கும் காணிகளும் வழங்கப்படும் என்றார்.

# தண்ணீருக்கு தட்டுப்பாடு வீட்டுத்திட்டபணிகள் ஸ்தம்பிதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பல இடங்களில் வீட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்ற நிலையில் வீட்டுத்திட்டப்பணிகளுக்கு போதிய நீர்வசதியின்மையால் பணிகள் ஸ்தம்பிதம் அடைவதாக பயனாளிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது நிலவும் வறட்சியான கால நிலையால் தண்ணீருக்கு தட்டுப்பாடு நிலவுகின்ற நிலையில் குறிப்பாக குடிப்பதற்கே நீர் அற்ற நிலை காணப்படுவதாக தெரிவிக்கும் மக்கள் விடுகளைக் கட்டுவதற்கு தூர இடங்களில் இருந்து பௌசர் மூலம் தண்ணீரைத் தருவிக்க வேண்டியுள்ளதாகவும் இதற்கென வீட்டைக் கட்டி முடிக்க மேலதிகமாக 50 ஆயிரம் ரூபா தேவைப்படுவதாகவும் பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

# குண்டும் குழியுமான வீதி போக்குவரத்துக்கு இடையூறு

(யாழ்ப்பாணம்)

யாழ்மாநகர சபை எல்லைக்குட்பட்ட ஜே/107 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட 5, 6, 7 ஆம் பகுதியைச் சேர்ந்த வீதிகள் போக்குவரத்துக்கு உதவாது மிகமோசமாக சேதமடைந்துள்ளதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

40 வருடங்களாக திருத்தப்படாது குண்டும் குழியுமாக காணப்படும் இவ்வீதி இதுவரை எவ்வித புனரமைப்புக்கும் உட்படாது காணப்படுவதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

இதேவேளை இவ்வீதியால் நாளாந்தம் பாடசாலை மாணவர்கள், அரச அலுவலர்கள், வர்த்தகர்கள், என பலர் பயணத்தை மேற்கொள்கின்ற நிலையில் இவ்வீதி சேதமடைந்திருப்பது கவலையளிப்பதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் மழைகாலம் ஆரம்பமாகவுள்ளதால் அதற்கிடையில் இவ்வீதியை புனரமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

# கைபேசி திருட்டு நால்வர் கைது

துவிச்சக்கரவண்டியொன்றில், கைத்தொலைபேசியில் உரையாடிக்கொண்டு சென்ற ஒருவரின் தொலைபேசியை அபகரித்த நால்வரை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்ததாக, தெல்லிப்பளை பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

காங்கேசன்துறை வீதியால் துவிச்சக்கரவண்டியொன்றில் தொலைபேசியில் உரையாடிக்கொண்டு சென்றவரின் தொலைபேசியை, கடந்த சனிக்கிழமை இரவு முச்சக்கரவண்டியில் வந்தவர்கள் பறித்துச் சென்றுள்ளனர். இதனையடுத்து, சம்பவத்தை அவதானித்த பொதுமக்கள், முச்சக்கரவண்டியின் இலக்கத்தகட்டு இலக்கத்தை குறித்தெடுத்து பொலிஸாரிடம் கொடுத்துள்ளனர். அவ்விலக்கத்தை வைத்து ஏழாலை பகுதியை சேர்ந்த நால்வரை சந்தேகத்தின் பேரில் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கேதார கௌரி விரதம் இறுதி நாள் விசேட நிகழ்வு

(வடமாட்சி)

அம்பாளுக்கு உகந்த விரதங்களில் ஒன்றான கேதார கௌரி விரதம் பொலிகண்டி திருவருள் மிகு ஸ்ரீ பத்திரகாளியம்பாள் ஆலயத்தில் கடந்த 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 11 மணியளவில்க்கும் பஸ் தனத்துடன் ஆரம்பமாகி இருபத்தொரு தினங்கள் வரை பக்திபூர்வமாக நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய நிறைவு நாளான எதிர்வரும் வியாழக்கிழமை அமாவாசை தினத்தன்று காலை 9 மணியளவில் ஆலய பரிவாரத் தெய்வங்களுக்கான விசேட பூசை ஆராதனைகளுடன் அபிஷேகங்கள் இடம்பெறு வசந்த மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் கௌரியம்மன் சன்னிதானத்தில் நோன்பு நூல் வழங்கும் சங்கல்பம் இடம் பெறும்.

அத்துடன் காப்புப்பெறவிரும்பும் அடியார்கள் தினமும் காலை 08.30 மணிதொடக்கம் 11.30 மணிவரை ஆலய வாசலில் வைத்து பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் பெட்டிக்காப்பு 600 ரூபாவும் தனிக் காப்பு 300 ரூபாவாகவும் பணத்தைச்செலுத்தி பற்றிச்ட்டினை பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விரதமிருப்போர் விரத இறுதி நாளன்று ஆசார சீலர்களாக ஆலயத்திற்கு வருகைதந்து விசேட பூசைகளில் கலந்து கொள்ளுமாறு ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (116)

# அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தில் சிறப்புற நடைபெற்ற பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடாத்திய பட்டமளிப்பு விழாவும் சைவமாநாடும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தலைவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் காலை 8 மணி தொடக்கம் பி.ப 2 மணி வரை சிறப்பாக இடம்பெற்றது.


இந்நிகழ்விற்கான ஆசியுரையினை நல்லை திரு ஞானசம்பந்த ஆதீன குருமுதல் வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரஞானசம் பந்த பரமாச்சாரிய சுவாமிகள் திருகோணமலை பத்திரகாளி கோவில் பிரதம குரு வேதாகம மாமணி பிரம்மஸ்ரீ சோ.இரவிச் சந்திரக் குருக்கள் ஆகியோர் வழங்கினார்கள்.

நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப்பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் சைவசித்தாந்த முதுகலைமாணி இணைப்பாளர் பேராசிரியர் ம.வேதநாதன் சிறப்பு விருந்தினராக கிழக்குமாகாண ஓய்வு நிலை கல்வி உதவிச் செயலாளர் சி.தண்டாயுதபாணி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

சைவப்புலவர் பண்டிதர் இவடிவேல் அரங்காக நடைபெற்ற காலை அமர்வு I இல் பட்டமளிப்பு பேருரையினை பேராசிரியர் ம.வேதநாதன் நிகழ்த்தியதுடன் 2014 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட இளஞ்சைவப்புலவர் சைவபுலவர் தேர்வில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பட்டத்தினையும் வழங்கி கௌரவித்தார்.

2014 ஆம் ஆண்டிற்குரிய சிறப்பு கௌரவிப்பு நிகழ்வில் வைப்புலவர் மு.திருஞானசம்பந்த, பிள்ளை சைவப்புலவர் கலாநிதி சா.தில்லைநாதன், வேதாகம மாமணி பிரம்மஸ்ரீ, தோ.இர விச்சந்திரக்குருக்கள், என்.சிவதாசன், எஸ்.தர்மகுலவீரசிங்கம், செ.விபுணசேகரம், ச.வெற்றிவேல் வி.தங்கவேல் ஆகியோர் சிறப்புக்கௌரவம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள்.


யாழ்ப்பாணப்பல்கலைக்கழக சைவசித்தாந்த முதுமாணி பட்டம் பெற்ற சைவப்புலவர் களாகிய க.நித்தியதசீதரன் சமுகுந்தன் தகுமரன் அஅரன் மகன் ஆகியோர் சங்கத்தினால் கௌரவ விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள். (63)



# க.பொ.த. (சா/த) பரீட்சை - 2014


# கல்வி முரசு O/L

## கணிதம்



01) ரூ. 72 பெறுமதியான புத்தகமொன்றை வாங்குவதற்கு ரூ.100 தாளைக் கொடுக்கும் ஒருவருக்குக் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?

02) $\frac{m}{2} = -5$ எனின் m இன் பெறுமானத்தைக் காண்க?

03) 

உருவில் y ஐக் காண்க.


04) $\sqrt{0.5}$ t ஐ kg இல் தருக.

05) சுருக்குக : 10 - (-5)

06) $\sqrt{36}$ இன் பெறுமானம் யாது?

07) $\varepsilon = \{1,2,3,4,5,7\}$ உம் $A = \{1,3,5,7\}$ உம் எனின் A' ஐ எழுதுக.

08) உருவிலுள்ள முக்கோணியின் பரப்பளவை a, b சார்பில் தருக.




09) x = 3, y =1 ஆகிய நேர்கோடுகள் இடைவெட்டும் புள்ளியின் ஆள்கூறு யாது?


10) தரப்பட்டுள்ள தரவுத் தொகுதியின் இடையத்தைக் காண்க

| தண்டு | இலை |
|---|---|
| 10 | 1 2 |
| 11 | 2 3 4 |

11) $S = \frac{n}{2}(a + l)$ இல் $l$ ஐ எழுவாயாக்குக.

12) $3x + y = 13, y - x = 1$ சமன்பாட்டைத் தீர்க்காது x + y இன் பெறுமானம் காண்க.

13) உருவில் x ஐக் கணிக்க.





14) y = 2x + 5 எனும் நேர்கோட்டிற்கு சமாந்தரமாகவும் (2, -1) எனும் புள்ளியினூடாகவும் செல்லும் நேர்கோட்டு வரைபின் சமன்பாடு யாது?


15) $1011_{இரண்டு}$ எனும் துவித எண்ணைத் தசம எண்ணில் தருக.

16) பெருக்கல் விருத்தி ஒன்றின் பொது உறுப்பு $5r^{n-1}$ ஆகும். அவ் விருத்தியின்
1) முதலுறுப்பு யாது?
2) மூன்றாம் உறுப்பு 20 ஆயின் பொது விகிதம் யாது?

17) உருவிலுள்ள தரவுகளைக் கொண்டு x ஐக் காண்க





18) 1:100 எனும் அளவிடையில் வரையப்பட்டுள்ள அளவிடைப் படத்தில் ஒரு பகுதியின் பரப்பளவு 1 $cm^2$ ஆயின் அதன் உண்மைப் பரப்பளவு எத்தனை சதுரமீற்றர்?




19) உருவிலுள்ள தரவுகளின் அடிப்படையில் PT இன் நீளத தைக்காண்க.


20) $1m^2$ அடிப் பரப்பளவும், 1m உயரமும் கொண்ட தொட்டி ஒன்றின் அரைப்பகுதி நிரப்புவதற்கு 20 நிமிடம் எடுத்தது எனில் தொட்டிக்கு நீர் பாய்ச்சப்படும் வேகத்தை லீற்றர் / நிமிடத்தில் தருக ($1m^3 = 1000l$)





21) அண்மையில் நடைபெற்ற தேர்தல் ஒன்றில் நான்கு கட்சிகளுக்கு அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை வட்டவரைபில் காட்டப்பட்டுள்ளது. A,D ஆகிய இரண்டு கட்சிகளுக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 40,000 எனின் C இற்கு அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை யாது?

22) $\sqrt{55 \times 45 + 25}$ காரணி பற்றிய அறிவைப் பயன்படுத்தி பெறுமானம் காண்க.

23) உருவில் BC = DE, BC //DE, AC = DF ஆகும்.
Δ ABC, Δ DEF என்பன ஒருங்கிசைவதற்குரிய சந்தர்ப்பத்தினைக் குறிப்பிடுக.





24) 3 பெண்கள் ஒரு நாளில் செய்யும் வேலையை 2 ஆண்கள் ஒரு நாளில் செய்து முடிப்பர். 6 ஆண்கள் 4 நாட்களில் செய்து முடிக்கும் வேலையை 9 நாட்களில் செய்து முடிப்பதற்கு எத்தனை பெண்கள் தேவை?





25) AB ஐ விட்டமாகக் கொண்ட வட்டத்தில் $A\hat{Q}B = 40^0$ உம் $Q\hat{A}B = 30^0$ உம் எனின் $B\hat{P}R$ இன் பெறுமானத்தைக் காண்க.

26) மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்யும்போது 70% சுங்கவரி அறவிடப்பட்டது. சுங்கவரியுடன் வாகனத்தின் பெறுமதி 170,000 எனின் வரி செலுத்த முன் வாகனத்தின் பெறுமதி யாது?

27) உருவில் நிழற்றிய பகுதி முழுவதின் என்ன பின்னமாகும்?






28) உருவில் PY = YR உம், PX = XQ உம் ஆகும். Δ PQR ஆனது Δ XYR இன் எத்தனை மடங்காகும்.

29) வட்டத்தில் உள்ள புள்ளி ஒன்றிலிருந்து வரையப்படும் நாண்களின் நடுப்புள்ளிகளின் ஒழுங்கு யாது?

30) $P^2 + ............ + 49$ எனும் கோவையை நிறைவர்க்கக் கோவையாக்குவதற்குக் கூட்ட வேண்டிய அட்சர கணித உறுப்பு யாது?


### பகுதி I - B

01)
a) சுருக்குக $1\frac{1}{4} \times \frac{3}{5} - \frac{1}{4}$

b) சொகுசு வாகனமொன்றை இறக்குமதி செய்யும்போது 150% சுங்கவரி அறவிடப்படுகின்றது. ரூ. 4 000 000 பெறுமதியான சொகுசு வாகனமொன்றை இறக்குமதி செய்யும்போது

1) செலுத்த வேண்டிய சுங்கவரி யாது?
2) சுங்கவரி செலுத்திய பின் வாகனத்தின் பெறுமதி யாது?
3) மேற்படி வாகனத்தை 20% இலாபம் கிடைக்கக்கூடியவாறு இறக்குமதியாளர் விற்கவேண்டிய விலை யாது?
4) இறுதியாக வாகனத்தை நுகர்வு செய்பவர் அவ்வாகனத்தின் பெறுமதியிலும் பார்க்க எவ்வளவு தொகையை மேலதிகமாகச் செலுத்துகின்றார்.

02) கத்தியொன்றின் மாதிரி வரைபடம் அருகிலுள்ள உருவில் காட்டப்பட்டுள்ளது. கத்தியின் வளைந்த பகுதியானது கால் வட்ட வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.





1) கால்வட்டப் பகுதியின். ஆரை யாது?
2) கத்தியின் மொத்த நீளம் யாது?
3) கால்வட்டப் பகுதியின் பரப்பளவு யாது?
4) கத்தியின் மொத்தப் பரப்பளவு யாது?
5) மேற்படி கத்தியை வெட்டி எடுப்பதற்குத் தேவையான செவ்வகத் தகட்டின் மிகக் குறைந்த பரப்பளவு யாது?

03) சிற்றூண்டி ஒன்றைத் தயாரிப்பதற்கு மா, சீனி என்பன 3 : 1 எனும் விகிதத்தில் கலக்கப்படுகின்றது. 1 Kg மாவினதும், 1 Kg சீனியினதும் விலைகளுக்கிடையிலான விகிதம் 4 : 5 ஆகும்.

1) 3 Kg மா கலக்கப்படும் கலவையில் உள்ள சீனியின் நிறை யாது?
2) கலவையில் உள்ள மாவினதும் சீனியினதும் விலைகளுக்கிடையிலான விகிதம் யாது?
3) 1 Kg கலவையின் விலை ரூ. 85 எனின் 1 Kg கலவையிலுள்ள மாவின் விலை யாது?
4) 1 Kg மாவினதும், 1 Kg சீனியினதும் விலைகளைக் காண்க.
5) 1 Kg மாவின் விலை மாறாதிருக்க, 1 Kg சீனியின் விலை ரூ. 10 ஆல் அதிகரிக்குமெனின் 1 Kg கலவையின் புதிய விலை யாது?

04) முகங்களில் 1 தொடக்கம் 6 வரை இலக்கமிடப்பட்ட சிவப்பு மற்றும் நீல நிறத் தாயக்கட்டைகள் ஒருமித்து சுண்டப்படுகின்றன.

a) இந் நிகழ்ச்சிக்குரிய மாதிரிவெளியை தெக்காட்டின் தளத்தில் வகை குறித்துக் காட்டுக.



b) தெக்காட்டின் தளத்தைப் பயன்படுத்தி பின்வருவனவற்றிற்கு விடையளிக்க.

1) இரு தாயக்கட்டைகளிலும் ஒரே எண் பெறப்படுவதற்கான நிகழ்தகவு யாது?


2) சிவப்பு நிறத் தாயக்கட்டையில் 1 பெறுவதற்கான நிகழ்ச்சியை A எனவும் நீல நிறத் தாயக்கட்டையில் 1 பெறுவதற்கான நிகழ்ச்சியை B எனவும் கொண்டு A,B இற்குரிய பிரதேசங்களைத் தெக்காட்டின் தளத்தில் குறித்துக் காட்டுக.

3) P(AnB) ஐ காண்க.

4) A,B ஆகிய நிகழ்ச்சிகள் பற்றி யாது கூறுவீர்? காரணம் தருக?

5) சிவப்பு நிறத் தாயக்கட்டையில் 4 இலும் குறைந்த எண்ணும் நீல நிறத் தாயக்கட்டையில் 5 இலும் கூடிய எண்ணும் பெறப்படுவதற்கான நிகழ்தகவு யாது?

05) பாடசாலை நாளொன்றில் மாணவன் ஒருவன் தனது நேரங்களைச் செலவு செய்வது தொடர்பான விபரம் கீழுள்ள வட்ட வரைபிற் காட்டப்பட்டுள்ளது.




1) பாடசாலை தொடர்பான செயற்பாடுகளுக்கும் நித்திரை செய்வதற்கும் சம அளவிலான நேரங்களைச் செலவழிக்கின்றான். நித்திரை செய்வதற்கு 8 மணித்தியாலங்களைச் செலவழிக்கின்றான் ஆயின், அதற்குரிய ஆரைச் சிறைக்கான கோணம் யாது?

2) விளையாட்டுக்குச் செலவழிக்கும் நேரத்தைப் போன்று 4 மடங்கு நேரத்தை தனியார் வகுப்புகளிற்காக செலவழிப்பின் விளையாட்டுக்குரிய ஆரைச் சிறைக்கான கோணம் யாது?

3) தனியார் வகுப்புகளிற்காக செலவிடும் நேரத்தைக் காண்க.

4) மாணவன் வேறு செயற்பாடுகளுக்காகச் செலவிடும் நேரம் மொத்த நேரத்தின் என்ன பங்கு?

## பகுதி II - A

01) ரூ. 25.000 பெறுமதியான தொலைபேசி ஒன்றை வாடகைக் கொள்வனவு முறையில் கொள்வனவு செய்யும்போது அதன் பெறுமதியின் 28% ஆனது ஆரம்பக் கட்டணமாகச் செலுத்தப்படுகின்றது. எஞ்சிய தொகையானது முதல் ஆறு மாதங்களிற்கும் முறையே ரூ. 2120, ரூ.2080, ரூ.2040, ரூ.2000, ரூ.1960, ரூ.1920 என்றவாறும் அடுத்துவரும் நான்கு மாதங்களிற்கும் ரூ. 1800 வீதம் சம தொகைகளாக இருக்கும் வண்ணமும் செலுத்த வேண்டும்.

1) செலுத்தப்பட்ட முற்பணம் எவ்வளவு?

2) செலுத்த வேண்டிய எஞ்சிய கடன்தொகை யாது?

3) செலுத்தப்படுகின்ற மொத்தத் தொகை யாது?

4) செலுத்தப்படுகின்ற மொத்த வட்டி யாது?

5) மாதஅலகு ஒன்றிற்கான வட்டித் தொகை யாது?

6) இக் கொள்வனவு முறைக்காக அறவிடப்பட்டுள்ள வட்டி வீதம் யாது?

02) $y = x^2 + 2x - 1$ எனும் சார்பின் வரைபை வரைவதற்குரிய அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 |
| y | 7 | 2 | -1 | -2 | -1 | ........ | 7 |

a) i) அட்டவணையைப் பூரணப்படுத்துக.

ii) பொருத்தமான அளவிடை ஒன்றைத் தெரிந்தெடுத்து சார்பின் வரைபினை வரைக.

b) உமது வரைபைப் பயன்படுத்தி பின்வருவனவற்றிற்கு விடையளிக்குக.

i) சார்பின் திரும்பற் புள்ளியின் ஆள்கூறு யாது?

ii) சார்பு y 4 ஆக இருக்கத்தக்க x இன் பெறுமானங்கள் யாவை?

iii) $x^2 + x + 2 = 0$ எனும் சமன்பாட்டின் மூலகங்களைக் காண்க.

03) a) A,B எனும் இரு பழ விற்பனை நிலையங்களில் மூன்று நாட்களில் விற்பனையான அப்பிள் பழங்களினதும், தோடம்பழங்களினதும் எண்ணிக்கைகள் தொடர்பான விபரம் பின்வருமாறு:-

| கிழமை | நிலையம் A | நிலையம் B |
|---|---|---|
| திங்கள் | அப்பிள் - 4, தோடை - 3 | தோடை - 5 |
| செவ்வாய் | அப்பிள் - 6, தோடை - 4 | அப்பிள் - 2, தோடை - 3 |
| புதன் | அப்பிள் - 3, தோடை - 2 | அப்பிள் - 1, தோடை - 2 |

i) நிலையம் A இல் விற்பனையாகியுள்ள அப்பிள்களினதும் தோடைகளினதும் எண்ணிக்கையினைத் தாயமொன்றில் காட்டி அத்தாயத்தை யு எனப் பெயரிடுக.

ii) தாயம் A இன் வரிசை யாது?


iii) இவ்விரு நிலையங்களிலும் விற்பனையாகியுள்ள அப்பிள்களினதும் தோடைகளினதும் மொத்த எண்ணிக்கையைத் தாயமொன்றில் காட்டுக.

b) வியாபாரி ஒருவர் 3 பேனைகளையும், 5 பென்சில்களையும் ரூ. 85 இற்கு கொள்வனவு செய்து ஒற்றை பேனை ஒன்றை ரூ 5 இலாபத்துடனும் பென்சில் ஒன்றை ரூ. 2 நட்டத்துடனும் விற்கின்றார். ஒரு பேனையையும் ஒரு பென்சிலையும் விற்கும்போது ரூ. 26 ஐப் பெற்றுக்கொள்ள முடியும்.

i) பேனை ஒன்றின் கொள்விலையை x எனவும் பென்சில் ஒன்றின் கொள்விலையை y எனவும் கொண்டு x,y இலாப சமன்பாட்டுச் சோடி ஒன்றை அமைக்க.

ii) சமன்பாட்டைத் தீர்ப்பதன் மூலம் பேனை ஒன்றினதும் பென்சில் ஒன்றினதும் கொள்விலைகளைத் தனித்தனியே காண்க.

04) a) தீர்க்குக $\frac{x+4}{4} - \frac{x-1}{5} = 1$




b) i) அருகிலுள்ள செங்கோண முக்கோணியின் பக்க நீளங்களை அடிப்படையாகக் கொண்டு x இனாலான இருபடிச் சமன்பாடு ஒன்றை உருவாக்குக.

ii) இருபடிச் சமன்பாட்டைத் தீர்ப்பதன் மூலம் x இன் பெறுமானத்தைக் காண்க. ( 3 = 1.7 எனக் கொள்க)

05) கப்பலில் இருக்கும் ஒருவர் A இல் நிற்கும் போது வெளிச்ச வீடு L இனை $35^0$ திசைகோளில் அவதானிக்கின்றார். A இலிருந்து வடக்கு நோக்கி 120m தூரம் பயணித்த பின் B இலிருந்து மீண்டும் வடக்கு நோக்கிப் பயணித்து 100 , தூரத்திலுள்ள C ஐ அடைந்தார்.



1) உருவைப் பிரதி செய்து தரப்பட்ட தரவுகளைக் குறித்துக் காட்டுக.

2) B இலிருந்து L இற்கான கிடைத் தூரத்தைக் காண்க.

3) C இலிருந்து L இன் திசைகோளைக் காண்க.

06) கட்டட வேலைத்தளம் ஒன்றில் இருக்கும் 1.4 m விட்டமுடைய உருளை வடிவத் தொட்டி ஒன்று செங்கற்களை நனைப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. தொட்டியின் அரைவாசி நீரினால் நிரம்பியுள்ள நிலையில் தொட்டியினுள் ஒவ்வொன்றினதும் நீளம், அகலம், உயரம் என்பன முறையே 22.5 cm, 10 cm, 5 cm ஆகவுள்ள செங்கற்கள் சிலவற்றைத் தொட்டியினுள் இட்டபோது தொட்டியில் நீர்மட்டம் 63 cm இனால் உயர்கின்றது.

a) நீரில் இடப்படும்போது செங்கற்கள் நீரை உறிஞ்சுவதில்லை எனக் கொண்டு தொட்டியில் இடப்பட்ட செங்கற்களின் எண்ணிக்கையைக் கணிக்க.


b) சிறிது நேரத்தின் பின்னர் செங்கல் ஒன்றின் கனவளவின் 1/10 பங்கு வீதம் அச் செங்கற்கள் நீரை உறிஞ்சுகின்றன.

i) அப்போது தொட்டியிலுள்ள நீர்மட்டம் எத்தனை சென்ரிமீற்றரால் இறங்கும் எனக் காண்க.

ii) ஒரு லீற்றர் நிறை 1 kg எனின் நீரை உறிஞ்சுவதனால் செங்கல் ஒன்றின் நிறை எவ்வளவால் அதிகரிக்கும்?

12. DB என்பது கிடைத்தளம் ஆகும். DC என்பது 20 m உயரமான கட்டடத்தில் C என்ற யன்னல் உண்டு. அதற்கு எதிரே BA என்ற மாடிக்கட்டடம் உண்டு.

I. உருவைப் பிரதி செய்து C இல் இருந்து பார்க்கும்போது மாடிக்கட்டட உச்சி A இன் ஏற்றக்கோணம் $45^0$ உம், அதன் அடி B இன் இறக்கக் கோணம் $35^0$ உம் எனக் குறிக்க.





II. DB இன் தூரம் என்ன?

III. AB இன் உயரம் என்ன?

IV. D இலிருந்து உச்சி A ஏற்றக்கோணம் (θ)யாது?

09. அ. ஒரு வட்ட நாற்பக்கல் எதிர்க்கோணச் சோடி பற்றிய தொடர்பைக் காட்டும் தேற்றத்தை எழுதுக.

ஆ. உருவில் AB ஓர் விட்டம், AC ஓர் நாண். கோணம் CAB இன் இருசம கூறாக்கி AP ஆகும். AP=DP ஆக இருக்குமாறு நாண் AC ஆனது D வரை நீட்டப்பட்டுள்ளது. பின்வருவனவற்றை நிறுவுக.




I. கோணம் CPB=180-2x

II. கோணம் APD=180-2x

III. கோணம் CPD=$90^0$


IV.



யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் வைத்து நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் அரச ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் கையளித்தபோது...










படங்கள் : இராஜகுமார்

# திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீன்பிடி உபகரணங்கள் கையளிப்பு



(வவுனியா)

திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்துடன் ஒருங்கமைந்த சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் நிதி உதவியுடன் வடமாகாணத்தில் சமூக அடிப்படையிலான வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் முல்லைத் தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச பிரிவின் அம்பலவன் பொக்கணை, முல்லிவாய்க்கால் மேற்கு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள மக்களுக்கு விவசாய உள்ளீடுகளும் மற்றும் மீன்பிடி உபகரணங்களும் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் முள்ளி வாய்க்கால் மேற்கு கிராமத்தில் முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் முன்னிலையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் இலங்கைக்கான பிரதி வதிவிடப் பிரதிநிதி, முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர், விவசாயத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் (விரிவாக்கல் பிரிவு), கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர், கடற்றொழில் பரிசோதகர், கமநல சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவையாளர்கள், பிரதேச இராணுவ அதிகாரி ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டதோடு அம்பலவன் பொக்கணை, முள்ளிவாய்க்கால் மேற்கு விவசாய மற்றும் கடற்றொழில் சங்க உறுப்பினர்களும் கிராம மக்களும் பங்கேற்றனர்.

இவ் உதவித்திட்டமானது அம்பலவன்பொக்கணை, முள்ளிவாய்க்கால் மேற்கு கிராம மக்களின் விவசாய மற்றும் மீன்பிடித்துறை சார்ந்த வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதும் அவர்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதும் சமூக வலுவுட்டலை ஏற்படுத்துவதுமாக அமையும். இந்நிகழ்வில் போது அம்பலவான் பொக்கனையில் 114, முள்ளிவாய்க்கால் மேற்குகில் 134 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

# அரச நாடக விழா விருது வழங்கல்

அரச நாடகவிழா 2014 விருது வழங்கல் விழா எதிர்வரும் 20 ஆம் திகதி கலாசாரம் மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் டி.பீ.ஏக்கநாயக்க தலைமையில் மஹரகம இலங்கை இளைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அரசாங்க நாடகவிழா 2014 இல் இறுதிச் சுற்றுக்கு தெரிவாகி வெற்றி பெற்ற தமிழ் - சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி நாடகங்களின் சிறந்த நாட பிரதியாக்கம், சிறந்த நடிகர், சிறந்த நடிகை, இசை, காட்சியமைப்பு, மண்டப நிர்வாகம், வெளிச்சம் ஆகிய துறைகளில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதுடன் பணப்பரிசில்களும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பு அறிவுறுத்தல்கள்

யாழ். அராலி வீதி ஜே - 87 கிராம அலுவலர் பிரிவு, சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டம் தொடர்பான விசேட கூட்டம் கரங்கள் சனசமூக நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

யாழ்ப்பாண பொலிஸ் நிலைய சிவில் பாதுகாப்பு பொறுப்பதிகாரி எம்.வீரவர்த்தன தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பிரதேசத்தில் களவு, போதைவஸ்து பாவனையை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பிலும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

மேலும், மதுபோதையில் இரவுநேரத்தில் அட்டகாசம் புரிபவர்கள் மீது புகார்கள் அளிக்கும் பட்சத்தில், அவர்களுக்கு எதிராக தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும் என பொறுப்பதிகாரி தெரிவித்தார். அத்துடன், இக்கிராமத்தில் பழைய பொருட்கள் கொள்வனவு, விற்பனை கடைகள் அதிகம் இருப்பதால், கோவில்களில் இருந்து திருடப்பட்ட பித்தளை பொருட்களை விற்பனை செய்யவோரிடமிருந்து பொருட்களை கொள்வனவு செய்யவேண்டாம் எனவும் அவர்களை பற்றிய தகவலை தரவேண்டும் எனவும் பொறுப்பதிகாரி கூறினார்.

# சிறுமியர்களை பாதுகாப்பது சமூகத்தின் கடமையாகும்

## அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவிப்பு

சிறுமியர்களைப் பாதுகாப்பது சமூகத்தின் கட்டாய கடமையாகும். அதனாலேயே சிறுமியரின் நலன் கருதி சர்வதேச சிறுமியர் தினம் அனுஷ்டிக்கப்படுவதுடன் அவர்களின் பாதுகாப்பை உறுதிபடுத்தவும் வலியுறுத்தப்படுவதாக சிறுவர் அபிவிருத்தி மற்றும மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார்.

சர்வதேச சிறுமியர் தின தேசிய வைபவம் ஜனாதிபதியின் பாரியாரான முதற்பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷ தலைமையில, மஹரகமை தேசிய இணைஞர் சேவைகள் மன்ற கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் மேற கண்டவாறு தெரிவித்தார். இங்கு அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில் ஒவ்வொரு பெணகளையும் தமது மகளாக, சகோதரியாக, தாயாக கருதினால் உலகம் இதைவிட பன்மடங்கு அழகாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

சிறுவர் அபிவிருத்திக்காக அரும்பணியாற்றி வரும் ஜனாதிபதியின் பாரியாரான முதற் பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷவுக்கு அன்னாரின் சேவையை பாராட்டி, சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தார்.

இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, ஊடகத்துறை அமைச்சின் மேற்பார்வை எம்பி ஏ.எச்.எம்.அஸ்வர், மேல் மாகாண அமைச்சர் உபாலி கொடிக்கார ,இளைஞர் சேவைகள் மன்ற பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி லலித் பியும் பெரேரா, சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் பதில் செயலாளர் அசோக அலவத்த உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# உக்ரைன் எல்லையிலிருந்து ரஷ்ய படைகள் வாபஸ்

## புடின் அதிரடி உத்தரவு

(மாஸ்கோ)

உக்ரைன் எல்லையில் இருந்து படைகளை வாபஸ் பெற ரஷ்ய ஜனாதிபதி விளாடீன் புடின் உத்தரவிட்டுள்ளார்.

உக்ரைனின் தன்னாட்சிப்பகுதியாக இருந்து வந்த கிரிமியாவை கடந்த மார்ச் மாதம் ரஷ்யா தன்னோடு இணைத்துக் கொண்டது. இதையடுத்து, கிழக்கு உக்ரைனில் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் ஏப்ரல் மாதம் முதல் போர்க்கொடி உயர்த்தி ஆயுதங்களை கையில் எடுத்தனர். உக்ரைன் படையினருடன் அவர்கள் போரிட்டு, டன்ட்ஸ்க், லுஹான்ஸ்க் ஆகிய இரு மாகாணங்களை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். அவற்றை உக்ரைன் படையினரால் மீட்டெடுக்க முடியவில்லை.

இரு தரப்பினர் இடையே 5 மாத காலம் நடந்த சண்டையில் 2,600இற்கும் மேற்பட்டோர கொல்லப்பட்டனர்.ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களுக்கு ரஷ்யா நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவுவதாக மேற்கத்திய நாடுகள் குற்றம் சாட்டின. இதை ரஷ்யா மறுத்தாலும், அந்த நாட்டின் மீது அமெரிக்காவும், மேற்கத்திய நாடுகளும் பொருளாதாரத் தடைகளை விதித்தன.

இந்த நிலையில், உக்ரைன் எலலையில் இருந்த ரஷிய படைகளை வாபஸ் பெற அதிபர் விளாடிமிர் புடின் முடிவு செய்து, அதற்கான உத்தரவினை பிறப்பித்துள்ளதாக அதிபர் மாளிகை தகவல்கள் கூறுகின்றன.முன்னதாக அதிபர் புடின், தனது இராணுவ மந்திரி செர்கெய் சோய்குவுடன் பேச்சு வார்த்தை நடாத்தினார்.

இத்தாலி நாட்டில் உள்ள மிலன் நகரில் வரும் 16,17 திகதிகளில் நடக்கவுள்ள ஆசிய, ஐரோப்பிய தலைவர்கள் உச்சி



மாநாட்டின் இடையே புடினும், உக்ரைன் அதிபர் பெட்ரோ போரோஷெங்கோவும் பேச்சு வார்த்தை நடாத்த உள்ளனர். இந்த நிலையில், உக்ரைன் எல்லையில் இருந்து படைகளை வாபஸ பெற புதின் உத்தரவிட்டிருப்பது முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

# ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் சேர்ந்த சிறுமிகள் திரும்பிவர விருப்பம் தெரிவிப்பு

ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பில் சேர்ந்த சபினா மற்றும் சம்ரா தங்கள் குடும்பத்தாரை தொடர்பு கொண்டு வீட்டுக்கு திரும்பி வர விரும புவதாக தெரிவித்துள்ளனர் என்று ஆஸ்திரிய அரசு தெரிவித்துள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்பில் சேர்ந்து போராளி மணப்பெண்களாக உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து சிறுமிகள் சிரியா, துருக்கி செல்கிறார்கள். இந்நிலையில், ஆஸ்திரியாவைச் சேர்ந்த சபினா செலிமோவிக் (15), சம்ரா கெசினோவிக்(17) (Sabina, Selimovic and Samra) ஆகியோர் கடந்த ஏப்ரல் மாதம் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி துருக்கி சென்றனர். தங்களை யாரும் தேட வேண்டாம் என்றும், அல்லாஹ்வுக்காக சேவை செய்து மரணிக்க மிக்க விரும்புவதாகவும் அவர்கள் கடிதம் எழுதி வைத்துவிட்டு சென்றனர்.

ஐ.எஸ். தீவிரவாத அமைப்பில் சேர்ந்த அந்த சிறுமிகளின் புகைப்படங்களை தீவிரவாதிகள் போஸ்டர்களில் பயன்படுத்தி வந்தனர். இந்நிலையில் சபினா. மற்றும் சம்ரா தங்கள் குடும்பத்தாரை தொடர்பு கொண்டு வீட்டுக்கு திரும்பி வர விரும்புவதாக தெரிவித்துள்ளனர் என்று ஆஸ்திரிய அரசு தெரிவித்துள்ளது.

# ஆந்திராவில் புயல் ஆறு பேர் உயிரிழப்பு

வங்கக் கடலில் உருவான ஹட் ஹட் புயல் ஆந்திரா விசாகப்பட்டின்ம், ஒடிஸாவின் கோபால்பூர் இடையே ஞாயிற்றுக்கிழமை மதியம் கரையைக் கடந்தது. இதில், ஆந்திரத்தில்தான் புயலின் சீற்றம் அதிகமாக இருந்தது.

200 கிலோமீற்றர் வேகத்தில் கரையைக் கடந்த இந்தப் புயலால் இரு மாநிலங்களிலும் 6 பேர் உயிரிழந்தனர். பலத்த காற்றால் கடல் அலை 1.5 மீற்றர் முதல் 2 மீற்றர் உயரம் வரை எழுந்தது. புயல் அச்சுறுத்தல் உள்ளதாக 5 மாவட்டங்களிலும் உள்ள 356 கிராமங்கள் கணிக்கப்பட்டு அந்தக் கிராம மக்களுக்காக 300 முகாம்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. முன்னதாக, கிழக்கு கோதாவரி, விசாகப்பட்டினம், ஸ்ரீகாகுளம், விஜயநகரம் ஆகிய மாவட்டங்களில் இருந்து 90,000 பேர் வெளியேற்றப்பட்டனர்.

# இந்தியா மீது போர் தொடுங்கள் பாக். தீவிரவாத அமைப்பு கோரிக்கை

எல்லையில் சண்டை நடைபெற்று வரும் நிலையில், இந்தியா மீது போர் தொடுக்க வேணடும் என்று தீவிரவாத அமைப்பான ஜமாத் உத்-தவா பாகிஸ்தான் அரசை கேட்டுக் கொண்டுள்ளது. இந்த அமைப்பின் சார்பில் கராச்சி நகரில் உள்ள பத்திரிகையாளர் மன்றம் அருகே கடந்த ஞாயிற்றுக்கிழமை பேரணி நடைபெற்றது. ஏராளமானோர் கூடியிருந்த இந்த பேரணியில் அந்த அமைப்பின் தலைவர் ஹபீஸ் சயீத் கலந்துகொண்டு உரையாற்றினார்.

இந்திய-பாகிஸ்தான் எல்லையில் நடைபெறும் துப்பாக்கிச் சண்டைக்கு கண்டனம் தெரிவித்து பேசிய அவர், இந்திய இராணுவத்தின் தாக்குதலால் பாகிஸ்தானைச் சேர்ந்த அப்பாவி மக்கள் பலியாவதாக குற்றம்சாட்டினர்.

இதற்கிடையே, இந்தக் கூட்டத்தில் பங்கேற்றவர்கள் 'இந்தியா மீது போர் தொடுக்க வேணடும்' என்பன உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பேனர்கள் மற்றும் பதாகைகளை ஏந்தியபடி கோஷமிட்டனர். சர்வதேச எல்லை விதியை இந்தியா மீறி வருவதாகவும் குற்றம்சாட்டினர். இந்தியாவின் அச்சுறுத்தலை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பது பாகிஸ்தானுக்கு தெரியும் என்றும் இந்த விடயத்தில் இராணுவத்தின் செயறபாட்டுக்கு துணை நிற்போம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

உலகச் செய்திகள்

# ஜெயலலிதா பிணை மனு எதிர்வரும் 17ஆம் திகதி விசாரணை



சொத்துக் குவிப்பு வழக்கில், ஜெயலலிதாவின் பிணை மனு மீது உச்ச நீதிமன்றம் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விசாரணை நடத்தவுள்ளது.

ஜெயலலிதாவின் தண்டனையை இரத்து செய்யக் கோரியும், பிணை கேட்டும் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை கர்நாடக உயர் நீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

இதையடுத்து, ஜெயலலிதா சார்பில் உச்ச நீதிமன்றத்தில் ஜாமீன் மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவில், "66 வயதாகும் மூத்த குடிமகளான எனக்கு மருத்துவ ரீதியான பிரச்சினைகள் உள்ளன.

சிறப்பு நீதிமன்றம் விதித்துள்ள தண்டனை மற்றும் அபராதத்தை ரத்து செய்யக் கோரி, கர்நாடக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செயயப்பட்டுள்ள வழக்கில் தீர்ப்பு கிடைக்க குறைந்தது நான்கு ஆண்டுகள் ஆகும் எனவே, இடைக காலத்தில் எனக்கு ஜாமீன் வழங்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த மனு தொடர்பான கோரிக்கை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஹெச்.எல்.தத்து தலைமையிலான அமர்வு முன்பு முன்வைக்கப்பட்டது.

மூத்த வழக்கறிஞர் எஸ்.நரிமன் வாய்மொழி கோரிக்கை விடுத்த நிலையில், ஜெயலலிதா மனு மீதான விசாரணை எதிர்வரும் வெள் ளிக்கிழமை நடைபெறும் என்று உச்ச நீதிமன்ற அமர்வு அறிவித்தது.

# காஷ்மீர் பிரச்சினையை தீர்க்க ஐ.நா. தலையிடக்கோரிக்கை






(இஸ்லாமபாத்)

காஷ்மீர் எல்லையில் பதற்றமான சூழ்நிலை நிலவுவதால், இதில் ஐ.நா. தலையிட்டு காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என அதன் பொதுச் செயலாளர் பான் கி மூனுக்கு பாகிஸ்தான் கடிதம் அனுப்பியுள்ளது.

ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி எல்லையில் இந்தியா அத்து மீறி தாக்குதல் நடாத்தி வருகிறது. இந்தியாவின் தொடர் தாக்குதலால், பாகிஸ்தான் மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர். ஜம்மு காஷ்மீர் உட்பட அனைத்து பிரச்சினைகளுக்கும் அமைதியான வழியில் தீர்வு காண்பதையே பாகிஸ்தான் விரும்புகிறது. ஜம்மு காஷ்மீர் விவகாரம் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ளது. இந்த விஷயத்தில் ஜம்மு காஷ்மீர மக்களின் கருத்து அறியப்பட வேண்டும் என்ற ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானம் இதுவரை அமல் படுத்தப்படவில்லை. இந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என ஐ.நா.விடம், பல ஆண்டுகளாக பாகிஸ்தான் நினைவூட்டி வருகிறது.

இப்பிரச்சினையை ஐ.நா.வில் எழுப்புவதால், இருதரப்பு பிரச்சினை தீராது என ஐ.நா. பொதுக்கூட்டத்தில் இந்திய பிரதமர் குறிப்பிட்டார். இந்த விஷயத்தில் ஐ.நா. தலையிட்டு முக்கிய பங்கு வகிக்க முடியும் என பாகிஸ்தான் நம்புகிறது. இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஈராக்கில் தற்கொலை தாக்குதல்; 58 பேர் பலி; 100 பேர் காயம்

(பக்தாத்)

ஈராக்கின் டியாலா மாகாணத்தின் குவாரா டாப்பா பகுதியில் அடுத்தடுத்து நிகழ்ந்த 3 தற்கொலைப் படை தாக்குதலில் 58 பேர் பலியாகினர்.

குவாரா டாப்பா பகுதியில் உள்ள ஈராக்கின் குர்திஷ் அரசியல் கட்சியின் அலுவலகத்துக்கு செல்லும் வழியில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு படை முகாமை நோக்கி ஓடி வந்த ஒருவன், தனது உடலில் கட்டியிருந்த குண்டினை வெடிக்கச் செய்தான்

அடுத்ததாக, அதே பகுதியில் அரசு அலுவலகத்தின் அருகே வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட இரு கார்களை ஓட்டிவந்த தற்கொலைப் படையினர் அவற்றை மதில் சுவரின் மீது மோதச் செய்ததில், பயங்கர வெடிச் சத்தத்துடன் அந்தப் பகுதியே தீக்கோளமாக மாறியது.

அவ்வழியாக சென்ற பொதுமக்களின் உடல்கள் அப்பகுதி முழுவதும் வெடித்துச் சிதறித் தெறித்தன. இந்த கோரத் தாக்குதல்களில் 58 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் மிக மோசமான தீக்காயங்களுடன் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



# ஜப்பானில் வோங்போங் புயல்

(டோக்யோ)

அதிக சீற்றம் கொண்ட வோங்போங் புயல், ஜப்பானின் கியூஹ தீவில் உள்ள மகுராஷாகி நகரைத் தாக்கியது. மணிக்கு 180 கிலோ மீற்றர் வேகத்தில் தாக்கிய புயல் காரணமாக, பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 300 விமானங்கள் தரையிறககப்பட்டன. 12இற்கும் மேற்பட்டோர மாயமாகி உள்ளனர்.

# தொழில்நுட்ப ஆய்வுகூடங்களை திறந்துவைத்தார் ஜனாதிபதி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி ஆகியவற்றில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடங்களை உத்தியோக பூர்வமாக திறந்து வைத்து பாடசாலை சமூகத்திடம் கையளித்தார்.

மேற்படி நிகழ்வுகள் அந்தந் பாடசாலைகளில் நேற்று இடம்பெற்றன.

முன்பதாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்குச் சென்ற ஜனாதிபதி பாடசாலை சமூகத்தால் வரவேற்கப்பட்டு நிகழ்விடத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டார்.

அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மகிந்தோதய தொழில் நுட்ப ஆய்வுகூடத்தை திறந்து வைத்தார்.

இதன்போது கல்லூரி அதிபரால் ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசிலும் வழங்கி வைக்கப்பட்டது.

இதேபோன்று யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்குச் சென்ற ஜனாதிபதி கல்லூரி சமூகத்தால் வரவேற்கப்பட்டதையடுத்து மகிந்தோதய தொழில் நுட்ப ஆய்வு கூடத்தை திறந்து வைத்தார்.

இதேபோன்று நெல்லியடி மத்திய கல்லூரிக்குச் சென்ற ஜனாதிபதி புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மகிந்தோதய ஆய்வு கூடத்தை சம்பிரதாயபூர்வ மாக திறந்து பாடசாலை சமூகத்திடம் கையளித்தார்.

வடமாகாணத்தில் 90 பாடசாலைகள் இத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ள நிலையில் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் நேற்று முன்தினம் மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ள நிலையில் யாழ். மாவட்டத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மகிந்தோதய தொழில் நுட்ப ஆய்வுகூடங்கள் இன்றும் திறந்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிகழ்வுகளில் அமைச்சர் டக்ளஸ் தேவான்ந்தா, கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் உள்ளிட்ட கல்விப்புலம் சார்ந்த அதிகாரிகள், பாடசாலை சமூகம் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## ஜனாதிபதி மகிந்த இன்று வட்டு. வருவார்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இன்று மாலை 3.00 மணிக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மகிந்தோதய தொழில் நுட்ப ஆய்வுகூடத்தை திறந்து வைப்பார்.

மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடம் நவீன வடிவில் பல மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் மாணவர்களின் சிறப்பு வரவேற்பு நிகழ்வும் இடம்பெறும் என அதிபர் சி.தனஞ்சயன் அறிவித்துள்ளார்.

## சங்கானை மரக்கறி சந்தை "மினி பார்" ஆக இரவில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

இரவு நேரங்களில் சங்கானை மரக்கறி சந்தை "மினி பார்" ஆக காட்சியளிப்பதாக தெரியவருகிறது.

வெற்று மதுப்போத்தல்கள், பியர் ரின்கள் என்பவற்றுடன் உள்நுழையும் மதுப்பிரியர்கள் இரவு வேளைகளில் சந்தையை "பார்" ஆக பாவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தினமும் மறுநாள் காலை சந்தை மதுபான கழிவுப் போத்தல்களாக காட்சி தருகின்றது.

இதனால் சபையின் ஊழியர்கள் இவ்வாறான கழிவுப் பொருட்களை அகற்றுவதிலேயே பெரும் நேரத்தினை செலவிடுவதாகத் தெரியவருகிறது.

## பாப்பரசர் வருகை முத்திரை வெளியீடு

(கொழும்பு)

பரிசுத்த பாப்பரசர் 16ஆம் ஆசிர்வாதப்பரின் இலங்கை வருகை நிமித்தம் ஞாபகார்த்த முத்திரையொன்றை வெளியிடுவதற்கான நடவடிக்கையை இலங்கை கத்தோலிக்க திருச்சபை முத்திரை வெளியீட்டு காரியாலயத்துடன் இணைந்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் பாப்பரசர் இலங்கை வரவுள்ளார். முத்திரை வெளியிடுவது தொடர்பான கலந்துரையாடல் விரைவில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணத்திற்கு....

அதிக நிதிவருவாயுடைய கரைச்சிப்பிரதேசபை இதற்கான கட்டணத்தைச் செலுத்த முடியும் என்று பலரும் தெரிவித்து வந்தனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் இந்த மின்விளக்குகளை மீண்டும் ஒளிரச்செய்ய வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரும் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, நாங்கள் மக்களுக்காக மின்கம்பங்களை நாட்டி ஒளியை ஏற்படுத்திக் கொடுத்தோம். அதை ஒளிரச் செய்யாமல் வைத்திருக்கிறார்கள். இதற்கு நான் என்ன செய்ய முடியும்? என்று தெரிவித்தார்.

இதனையடுத்து நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த வடமாகாண அபிவிருத்திக் கூட்டத்தின்போது இந்த வீதி விளக்கு விடயத்தினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

இதனையடுத்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மக்களை இருளுக்குள் வைத்திருக்க ,விரும்புகிறது. நாங்கள் மக்களை வெளிச்சத்தில் வைத்திருக்க விரும்புகிறோம் என்று தெரிவித்த ஜனாதிபதி,

உடனடியாகவே இந்த வீதி விளக்குகளை ஒளிரச்செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு எரிபொருள் மின்சக்தி அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியிடம் பணித்தார். ஜனாதிபதியின் பணிப்பை அடுத்து நேற்றிரவே கிளிநொச்சி நகரம் மீண்டும் ஒளி வெள்ளத்தில் மிதக்கத் தொடங்கியுள்ளது. இதை அறிந்த மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

## யாழ்...

தபால் ரயில் சேவைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

இவை யாழில் இருந்து நாளாந்தம் கொழும்பு கோட்டை வரை பயணிக்கும்.

அத்துடன் கொழும்பில் இருந்து யாழ் வரை செல்ல சாதாரண ரயில் கட்டணமாக 320 ரூபா அறவிடப்படவுள்ளது.

மேலும் முதல் வகுப்பு ஆசனங்களுக்கு 900 ரூபாவும் இரண்டாம் வகுப்பு ஆசனங்களுக்கு 800 ரூபாவும் அறவிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குளிரூட்டப்பட்ட ரயில் சேவைக் கட்டணமாக 1500 ரூபா அறவிடப்படவுள்ளது.

அதேபோல் எதிர்வரும் தினங்களில் மாத்தறையில் இருந்து யாழ்ப்பாணம் வரை, பிரதி சனிக்கிழமைகளில் ரயில் சேவை இடம்பெறவுள்ளதோடு, ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்ப்பாணத்தில் இருந்து மாத்தறை வரையிலும் ரயில் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## மக்களுக்காக...

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, வடக்கின் அபிவிருத்தி மற்றும் ஏனைய தொடர்புடைய பணிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் அதனை ஒழுங்காக பயன்படுத்துவதில்லை என குறிப்பிட்டுள்ளார்.

மேலும், வடமாகாண அபிவிருத்தி பற்றி ஆய்வு செய்யும் மாகாண ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கலந்து கொள்ளாமை கவலையளிப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி தொடர்பிலான முக்கியமான கூட்டம் இதுவாகும். இதில் மாகாண முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் கலந்து கொண்டிருக்கவேண்டும். அவர்கள் கலந்துகொள்ளவில்லை. அரசியல் நடத்துவதற்கு வேறு இடம் உள்ளது. அவர்கள் இதில் அரசியல் நடத்துகிறார்கள்.

ஆனால் அபிவிருத்தியில் மத்திய, மாகாண அரசாங்கங்கள் இணைந்து செயலாற்ற வேண்டும். எனவே கூட்டமைப்பின் புறக்கணிப்பு கவலையளிப்பதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் கடந்த 2005ஆம் ஆண்டில் 58 சதவீதமான வீடுகளுக்கு மாத்திரமே மின்சார வசதி இருந்தது. இருப்பினும், தற்போது, அது 96 சதவீதமாக உயர்ந்துள்ளது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் அபிவிருத்தி முன்னேற்றங்கள் குறித்த அறிக்கைகளை அந்தந்த மாவட்டங்களின் அரச அதிபர்கள் சமர்ப்பித்தனர்.

இந்தக் கூட்டத்தில் மீள்குடியேற்றம், விவசாயம், கடற்றொழில், வாழ்வாதார உதவித்திட்டங்கள், உட்கட்டுமானம், அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மற்றும் மகிந்த சிந்தனைக்கு அமைவாக வடமாகாணத்தின் மாவட்டங்கள் தோறும் முன்னெடுக்கப்பட்டு வரும் வடக்கின் வசந்தம், மின்சாரம், வீதிப் புனரமைப்பு, வீட்டுத்திட்டம், கைத்தொழில் துறைகள், போக்குவரத்து, கல்வி, சுகாதாரம், விளையாட்டு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளின் முன்னேற்றங்கள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

முன்னதாக மீளாய்வுக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வரவேற்புரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் அபிவிருத்தி முன்னேற்றங்கள் குறித்த அறிககைகளை அந்தந்த மாவட்டங்களின் அரச அதிபர்கள் சமர்ப்பித்தனர்.

இதில் மீள்குடியேற்றம், விவசாயம், கடற்றொழில், வாழ்வாதார உதவித்திட்டங்கள், உட்கட்டுமானம், அபிவிருத்தி செயற்திட்டங்கள் வடமாகாணத்தின் மாவட்டங்கள் தோறும் முன்னெடுக்கப்பட்டு வரும் வடக்கின் வசந்தம் மின்சாரம், வீதிப் புனரமைப்பு, கைத்தொழிற்துறைகள், போக்குவரத்து, கல்வி, சுகாதாரம், விளையாட்டு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளின் முன்னேற்றங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இவ்விசேட அபிவிருத்தி முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, றிசாட் பதியுதீன் உள்ளிட்ட அமைச்சர்களுடன் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, நிதியமைச்சின் செயலாளர் ஜயசுந்தர, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ, ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), வடக்கு மாகாண ஆளுநர் சந்திரசிறி, வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா உள்ளிட்டவர்களுடன் பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரச திணைக்களங்களின் அதிகாரிகள் எனப் பலரும் உடனிருந்தனர்.

இதேவேளை, இந்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் வடமாகாண முதல்வர் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள் எவரும் கலந்து கொள்ளவில்லை.

## யாழ்ப்பாணம்...




ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு பளையிலிருந்து யாழ். நோக்கி பயணித்தனர்.

பளையிலிருந்து புறப்பட்ட குளிரூட்டப்பட்ட புகையிரதம் கொடிகாமம் புகையிரத நிலையத்தில் நிறுத்தப்பட்டு மக்கள் வங்கியினால் அழகுற அமைக்கப்பட்ட புகையிரத நிலையத்தை ஜனாதிபதி திறந்து வைத்ததுடன், மீண்டும் அங்கிருந்து நாவற்குழி புகையிரத நிலையம் வந்தடைந்த ஜனாதிபதி அங்கும் சம்பத் வங்கியினால் அழகுற அமைக்கப்பட்டுள்ள நாவற்குழி புகையிரத நிலையத்தையும் திறந்து வைத்ததுடன் அங்கிருந்து யாழ். பிரதான புகையிரத நிலையத்தை வந்தடைந்தார்.

பெருமளவிலான மக்கள் தேசியக் கொடியசைத்து யாழ்தேவியை வரவேற்றதுடன் மங்கள இசை முழங்க ஜனாதிபதி புகையிரத நிலைய பெயர்ப் பலகையை திறந்து வைத்து புகையிரத சீட்டு ஒன்றையும் பெற்றுக்கொண்டதுடன், இலங்கை வங்கியினால் அழகுற அமைக்கப்பட்ட யாழ். புகையிரத நிலையத்திலுள்ள இலங்கை வங்கியின் தானியங்கி பணப் பரிவர்த்தனை நிலையத்தையும் திறந்து வைத்தார்.

அங்கு புகையிரத போக்குவரத்தை மேற்கொள்ள உதவிய இந்தியாவிற்கு கௌரவம் அளிக்கும் வகையில் இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே.சின்ஹாவுக்கும் ஐகொன் நிறுவன பணிப்பாளருக்கும் நினைவுச் சின்னங்களை ஜனாதிபதி வழங்கிவைத்தார்.

இதனிடையே யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை வரையிலான புகையிரதப் பாதையின் புனரமைப்புப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் கீங்கேசன்துறை வரைக்குமான புகையிரத சேவை அடுத்த ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ,பா,25)

## பாடசாலை மாணவரிடையே தேசிய ரீதியில் விவாதப்போட்டி

இலங்கை சமூக பாதுகாப்பு சபை தேசிய ரீதியாக பாடசாலை மாணவர்களிடையே விவாதப்போட்டியொன்றை நடாத்த முன்வந்துள்ளது. சமூக பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதி விருது என்ற தலைப்பில் நடைபெறவுள்ள இப்போட்டியில் சகல பாடசாலைகளும் பங்குபற்றமுடியும்.

பல்வேறு தலைப்புக்களின் கீழ் நடைபெறவுள்ள இவ்விவாதப்போட்டியில் ஒரு பாடசாலையில் இருந்து இரண்டு விவாதக்குழுக்கள் பங்கு பற்ற முடியும். தமிழ்,சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் இப்போட்டி நடைபெறவுள்ளது.

தேசிய ரீதியில் முதலாம்,இரண்டாம்,மூன்றாம் இடங்களைப் பெறும் பாடசாலைகளுக்கு முறையே 10,0000, 75,000,50,000 ரூபாய்கள் வழங்கப்படும்.

பாடசாலைகளுக்கிடையிலான இந்த விவாதப் போட்டி தொடர்பில் சமூக பாதுகாப்பு சபையினால் திருமலை ஆசிரியர்களுக்கு விளக்கமளிக்கும் செயலமர்வு அண்மையில் திருமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

## வடக்கில் 4658 அரச ஊழியருக்கு கிடைத்தது மோட்டார் சைக்கிள்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த 4658 அரச சேவையில் உள்ள வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் வைத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று மோட்டார் சைக்கிள்களை வழங்கிவைத்தார்.

நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற இந்நிகழ்வில் 2859 ஆண்களுக்கும், 2299 பெண்களுக்குமாக மொத்தம் 4658 மோட்டார் சைக்கிள்கள் இவ்வாறு வழங்கிவைக்கப்பட்டன.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சில்வேஸ்திரி அலன்ரின், மு.சந்திரகுமார், யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் அரச உயரதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் அரச உத்தியோகத்தர்கள் மத்தியில் ஜனாதிபதி உரையாற்றியது டன், சம்பிரதாய பூர்வமாக மோட்டார் சைக்கிள்களை அரச வெளிக்கள உத்தியோகத்தர்களிடம் கையளித்து சிறப்பித்ததை காணக்கூடியதாக இருந்தது.

இதேவேளை ஜனாதிபதியின் முன்மாதிரியான செயற்பாட்டை வடக்கு மாகாண வெளிக்கள உத்தியோகத்தர்கள் மன மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டனர்.

(இ,பா,25)

## 80 வருடங்களுக்குப்பின்னர் மாந்தை கிழக்கிற்கு மின்சாரம்

### எதிர்க்கட்சித் தலைவர் தயானந்தா நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட சிராட்டிக்குளம் பிரதேசத்துக்கு புதிதாக மின் இணைப்பு வழங்கும் ஆரம்ப நடவடிக்கைகளை மாந்தை கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் தயானந்தா தலைமையில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட சிராட்டிக்குளம் கிராமத்தில் கடந்த 80 வருடங்களாக மின்சாரம் இல்லாமல், இக்கிராம மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் தயானந்தா தெரிவித்தார்.

மேற்படி விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் எதிர்நோக்கி வரும் அசௌகரியங்கள் தொடர்பில் வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் அமைச்சருமான ரிஷாட் பதியுதீன் மற்றும் மாந்தை கிழக்கு பிரதேச அபிவிருத்திக்குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹுனைஸ் பாரூக் ஆகியோரின் கவனத்துக்கு கொண்டு வந்தேன்.

மேலும் இவ்விடயம் தொடர்பில், உடனடி நடவடிக்கை எடுத்த அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினருக்கும் சிராட்டிக்குளம் கிராம மக்கள் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இதன் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக நேற்று முன்தினம் முதல், மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்திலிருந்து சிராட்டிக்குளம் வரையிலான பகுதிக்கு மின்சார தூண்கள் நாட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

## கொழும்பு – தூத்துக்குடி இடையே மீளவும் பயணிகள் கப்பல் சேவை

(கொழும்பு)

கொழும்பு - தூத்துக்குடிக்கு இடையில் மீண்டும் பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

கடந்த 2011 ஜூன் மாதம் மேற்படி இரு துறைமுகங்களுக்கு இடையில், சென்னை தனியார் நிறுவனமொன்றினால் ஆரம்பிக்கப்பட்ட 'ஸ்கேட்டியா பிரின்ஸ்' கப்பல் சேவை அதே ஆண்டு நவம்பர் மாதம் இடை நிறுத்தப்பட்டிருந்தது.

இரு எல்லைகளுக்கும் இடையில் பயணம் செய்வதற்கு ஸ்கேட்டியா பிரின்ஸ் 14 மணித்தியாலங்களை எடுக்கும் அளவிலும், 1200 பயணிகளை உள்ளடக்கும் விதத்திலும் விசாலமானதாக இருந்ததாக இதற்கு காரணம் கூறப்பட்டது.

இந்நிலையில், 500 பயணிகளையும் 50 பணியாளர்களையும் உள்ளடக்கும் விதத்தில் இம்முறை சிறிய கப்பல்களை சேவையில் ஈடுபடுத்தும் நோக்கில் கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளதாக 'போர்ட் ட்ரஸ்ட்' வெப்தளம் தெரிவித்துள்ளது.

## வடக்கில் அதிகரித்துச் செல்லும் போதைப்பொருள் பாவனை

(வவுனியா)

வடபகுதியில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளதாக வவுனியா மாவட்ட மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி பி.இரகுநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

இந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் இருந்து செப்ரெம்பர் மாதம் வரையிலான 9 மாத் காலப்பகுதியில் கஞ்சா, ஹெரோயின் வைத்திருத்தல், கள்ளச்சாராயம், கசிப்பு உற்பத்தி, சட்டவிரோத மது விற்பனை, வயது குறைந்தவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை என்பவற்றுடன் தொடர்புடைய 139 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

அதில், ஜூலை, ஒகஸ்ட், செப்ரெம்பர் ஆகிய மூன்று மாதங்களில் மாத்திரம் கஞ்சா வைத்திருந்த 24 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதுடன் அவர்களிடம் இருந்து மூன்று கிலோ 35 கிராம் கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளது.

இதே காலப்பகுதியில் ஹெரோயின் வைத்திருந்த 10 பேர் கைதுசெய்யப்பட்டதுடன் அவர்களிடம் இருந்து 1065 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது. வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்புக்களின் போதே இவை மீட்கப்பட்டன.

குறிப்பாக கேரளா கஞ்சா மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளுக்கு கொண்டுவரப்பட்டு அங்கிருந்து ஏனைய இடங்களுக்கு செல்கிறது. நாம் மேற்கொண்ட சுற்றிவளைப்புக்களில் அதிகமாக கிளிநொச்சி, மன்னார் ஆகிய பகுதிகளிலேயே போதைப்பொருள் பயன்பாடு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

## ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளராக சஜித் எம்பியை நிறுத்துங்கள்

### கோருகிறார் மைத்திரி குணரட்ண

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் யார் என்பதை கட்சியின் செயற்குழு தீர்மானித்தால், அந்த வேட்பாளருக்கு தாம் ஆதரவு வழங்கப் போவதில்லை என ஐ.தே.கட்சியின் முன்னாள் தென் மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரட்ன தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த மிகவும் பொருத்தமான நபர் சஜித் பிரேமதாச எனவும்' குணரட்ன குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க நிறுத்தப்படுவது உள்ளதாக தகவல்கள் வெளியாகி வரும் நிலையில், மைத்திரி குணரட்ன இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்பதே கட்சியினரின் எதிர்பார்ப்பு எனவும் இதனால், சஜித் பிரேமதாச ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும் எனவும் அவர் குணரட்ன மேலும் கூறியுள்ளார்.

## ஜனாதிபதி தேர்தலில் மகிந்த போட்டியிட தடையில்லை

### அமைச்சர் சுசில் தெரிவிப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மூன்று முறையல்ல 5 முறை கூட ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட எந்தத் தடையுமில்லை என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கடுவலையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இன்று அச்சமின்றி எங்கும் செல்ல முடியும். யாழ் தேவியில் நேரடியாக யாழ்ப்பாணத்திற்கு சென்று நாகவிகாரையில் வழிபாடு நடத்தி விட்டு மறுநாள் கொழும்பிற்கு திரும்ப முடியும்.

படையினரின் உதவியுடன் ஜனாதிபதி, பயங்கரவாதிகளிடம் இருந்து இந்த நாட்டை மீட்டதே இதற்கு காரணம்.

பாரிய காட்டைப் பிடித்து விட்டதாக அப்போது ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்தை கேலி செய்தார். போரை முடிவுக்கு கொண்டு வந்துள்ளதால், இன்று நாட்டில் அமைதி ஏற்பட்டுள்ளது எனவும் சுசில் பிரேமஜயந்த கூறியுள்ளார்.

## ஜனாதிபதி வேட்பாளராக ரணில்; அறிவிக்கவில்லை என்கிறது ஐ.தே.க

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவை வேட்பாளராக நிறுத்தப் போவதாக தமது கட்சி எந்த இடத்திலும் கூறியதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது குறித்தே ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின் அவர் யார் என்பது ஊடகங்களுக்கு தெரியப்படுத்தப்படும். அத்துடன் அரசாங்கமும் இதுவரை மகிந்த ராஜபக்சவை வேட்பாளராக அறிவிக்கவில்லை. எனினும், பொருட்களின் விலைகளை குறைத்து அரசாங்கம் தேர்தலுக்கு தயாராகி வருகிறது.

அரசாங்கத்தின் கறுப்புச் சந்தை முதலாளி போன்ற இந்த செயல்களுக்கு மக்கள் பதில் வழங்க வேண்டும் எனவும் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஒக்ரோபர் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.